விலை: 30
பக்கங்கள்: 24

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 346 ஐப்பசி 21ஆம் நாள் புதன்கிழமை 07 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049



**வடமாகாண மர நடுகை மாதம்**
*கார்த்திகை - 2018*
"உலகம் நாளை துண்டு களாக உடைந்து அழியப் போவதாக நான் அறிந் தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."
-மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய புரட்டஸ்தாந்து மதகுரு)

## நீதிபதிக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 7
நீதிபதி ஒருவர் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பில் >> 21

## மகிந்தவின் முதல் விக்கெட்: ஐ.தே.கவில் மனுஷ

கொழும்பு, நவ.7
மகிந்த ராஜபக்ச அரசில் அண்மையில் பிரதி அமைச்சராகப் பதவியேற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார நேற்றுத் தனது அமைச்சுப் பதவியில் இருந்து விலகியுள்ளார். மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் தாவியுள்ளார்.
கூட்டரசில் இருந்து விலகி மைத்திரிபால சிறிசேனவும், மகிந்த ராஜபக்சவும் இணைந்து அமைத்த அரசில் மனுஷ நாணயக்கார தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரதி அமைச்சராகப் பதவியேற்றிருந்தார். ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான மனுஷ கட்சி தாவியே இந்தப் பதவியைப் பெற்றுக் கொண்டார். நேற்று அவர் திடீரெனத் தனது பதவியில் >> 21

## ஐ.தே.கவுக்குத் தாவுவர்!

*அஜித் நம்பிக்கை*

கொழும்பு, நவ.7
புதிய அரசில் உள்ள 15 உறுப்பினர்கள் தமது பக்கம் இணைவார்கள் என்று திடமாகத் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா.
ஐக்கிய தேசியக் கட்சியால் நேற்று அலரி மாளிகையில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். >> 19

# நாடாளுமன்றத்தைக் கூட்டி நிலைமையைச் சீராக்குங்கள்

*வலியுறுத்துகின்றது அமெரிக்கா*



கொழும்பு, நவ. 7
தற்போது இலங்கையில் எழுந்துள்ள நிலைமையை ஜனநாயக வழிமுறைக்கு அமைவாகவே தீர்வு காண வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் தமது நிலைப்பாடுகளைச் சொல்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். நாடாளுமன்றம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இலங்கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் அலோய்னா ரெம்லிட்ஸ்.
சபாநாயகர் கரு ஜயசூரிய மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரை அவர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். அதன்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். >> 21

## கிளிநொச்சி விபத்தில் 2 இளைஞர்கள் சாவு



கிளிநொச்சி, நவ.7
கிளிநொச்சியில் நேற்று இரவு நடந்த விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். உந்துருளியும், எரிபொருள் தாங்கி வாகனமுமே விபத்துக்குள்ளாகியுள்ளன.
கிளிநொச்சி, செல்வா நகரைச் சேர்ந்த >> 19

## அதிக வேகத்தால் பறிபோனது உயிர்

யாழ்ப்பாணம், நவ.7
கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி வீதியோரத்திலிருந்த சிமெந்துத் தூணில் மோதி விபத்துக்குள்ளானது. உந்துருளியைச் செலுத்தி வந்த இளைஞர் உயிரிழந்தார். உந்துருளியில் பயணித்த மற்றொரு இளைஞர் படுகாயமடைந்தார்.
குப்பிளானைச் சேர்ந்த செ.நிரோசன் (வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார். >> 18

## ஆடைகள் வாங்க சென்ற இளைஞர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், நவ.7
உந்துருளியும், லாண்ட் மாஸ்ரரும் விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றிச் சில மணிநேரத்தின் பின்னர் உயிரிழந்தார். கோப்பாய் வடக்கைச் சேர்ந்த சி.தர்மசீலன் >> 21



## பிக்குகள் ரணிலுக்கு ஆதரவு

கொழும்பு, நவ.7
ரணில் விக்கிரமசிங்க தலைமை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை அரசமைப்புக்கு முரணானது என்று தெரிவித்துப் பெரும் எண்ணிக்கையான பிக்குகள் நேற்றுக் கொழும்பில் திரண்டனர். >> 18

## பெரும் சிக்கலை எதிர்நோக்குவீர்

*அமைச்சர்கள், அரச அதிகாரிகளை எச்சரிக்கின்றார் சாகல ரத்நாயக்க*

கொழும்பு, நவ.7
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அரசமைப்புக்கு முரணாகத் தலைமை அமைச்சர் நியமனம் நடந்துள்ளது. நான் சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் சட்டத்துக்கு விரோதமாகச் செயற்படும் அமைச்சர்களுக்கு எதிராக >> 21

## ஐ.தே.க. வசம் 130

*பெரும்பான்மையை காட்டுவோம் என நம்பிக்கை*

கொழும்பு, நவ.7
நாடாளுமன்றம் கூடியபின்னர் 130க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதை நிரூபிக்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரி >> 21

## மழை தொடரும்

கொழும்பு, நவ.7
இலங்கையைச் சூழ ஏற்பட்டுள்ள குறைந்த காற்றமுத்தத்தால் நாட்டிலும், நாட்டைச் >> 19

## தீபாவளி வழிபாட்டால் பறிபோயின நகைகள்!

யாழ்ப்பாணம், நவ. 7
தீபாவளி வழிபாட்டுக்கு நேற்றுக் காலை ஆலயங்களுக்குச் சென்று வீடு திரும்பியவர்கள் நகைகளைப் பறிகொடுத்துள்ளனர்.
கல்வியன்காடு, திருநெல்வேலி, >> 18

## உந்துருளியில் கடத்திய 4 கிலோ கஞ்சா சிக்கியது



வடமராட்சி, நவ.7
வடமராட்சி, பருத்தித்துறையில் நேற்று 4 கிலோ 200 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. உந்துருளியில் >> 21



# தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமன் என்பதைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்

## முன்னாள் முதலமைச்சர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.7

தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமன் என்பதைப் புரிந்துகொண்டு இனிமேலும் காலம் தாழ்த்தாது தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு பன்னாட்டுச் சமூகம் நடவடிக்கை எடுக்க வழி வகுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்கேனஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள இன்றைய நெருக்கடி நிலை தொடர்பில் அவர் அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இலங்கையில் இன்று அரசமைப்பு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அரசு மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது என்று எமது அரசியல்வாதிகள் புலம்பத்தொடங்கியிருக்கின்றார்கள். இதில் எந்த அர்த்தமும் இல்லை. ஏனெனில் இதுதான் வரலாறு என்று நன்கு தெரிந்துதான் நாம் அவர்களுடன் கரம் கோர்த்தோம். பதவிகளைப் பெற்றோம். பணம் பெற்றோம். அவர்களுடன் சேர்ந்து உலகுக்கு நல்லாட்சி என்றோம். ஒருபடி மேலே சென்று அவர்களை நெல்சன் மண்டேலாவுடன் ஒப்பிட்டு புகழ்ந்து பேசினோம். நாமே அவர்களை மனித உரிமைகள் சபையில் பிணை எடுத்தோம். அரசியல் அமைப்பு மாற்றம் என்ற ஒரு மாயைக்குள் எமது இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டு சென்று எமது தனித்துவத்தையும் அரசியல் அபிலாசைகளையும் கரைத்துவிட்டோம். ஆனால் சிங்கள அரசியல்வாதிகளோ எம்மைப் பயன்படுத்தி தமக்கு எதிரான சகல தடைகளையும் உடைத்துவிட்டு எந்த விதமான குற்ற உணர்வும் இன்றி தமக்கிடையில் ஒரு அதிகாரப் போட்டியில் இறங்கியுள்ளனர்.

மைத்ரிபால சிறிசேன தான் உயிருடன் இருக்கும் வரை வட கிழக்கு இணைப்புக்கோ சமஷ்டித் தீர்வுக்கோ இடமளிக்கப்போவதில்லை என்று கூறியுள்ளார். அவரை வைவதாலும், சேர்ந்து பேசுவதாலும் எதுவும் ஆகப்போவதில்லை. பன்னாடுகள் தான் இதுபற்றி கவனஞ் செலுத்த வேண்டும். ஒரு நிகழ்ச்சிநிரல் இன்றிச் செயற்பட்டமையே இன்றைய எமது இந்தக் கையறு நிலைக்குக் காரணமாகும். இனிமேலாவது, கட்சி நலன்களைப் புறந் தள்ளிவிட்டு கொள்கை அடிப்படையில் நிகழ்ச்சி நிரல் ஒன்றுக்கு அமைவாக நிறுவனப்பட்ட செயற்பாட்டை நாம் முன்னெடுக்கவேண்டும்.

இன முரண்பாட்டுக்கான தீர்வு தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்களின் மனோநிலையை உலக்கு எடுத்தியம்ப வேண்டும். ஒற்றையாட்சி அடிப்படையிலான இலங்கை அரசால் அமைப்புக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டமைப்பு சார் தடைகளை பன்னாட்டுச் சமூகம் இனிமேலாவது புரிந்துகொள்ள வழி வகுக்க வேண்டும். தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச்சமன் என்பதைப்புரிந்துகொண்டு இனிமேலும் காலம் தாழ்த்தாது தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு பன்னாட்டுச் சமூகம் நடவடிக்கை எடுக்க வழி வகுக்க வேண்டும். பன்னாட்டுச் சமூகம் தற்போது தமிழர் பிரச்சனைகளைச் சார்பாகப் பார்க்க வேண்டிய காலம் கிட்டியு ள்ளது. நாம் எமது கடமைகளைச் சரியாக ஆற்ற முன் வர வேண்டும். இது சம்பந்தமாக எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பில் ஒரு பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணைக்கான பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவை முன்வைக்குமாறு உறுப்புநாடுகளையும் ஏனைய நாடுகளையும் எம் மக்கள் சார்பில் வேண்டிக்கொள்கின்றேன். இலங்கையில் எவர் ஆட்சியில் உள்ளார்கள் என்று பார்த்துச் செயற்படாது பொறுப்புக் கூறலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள 'இலங்கை அரசு' என்ற ரீதியில் போர்க்குற்ற விசாரணைக்கான நடவடிக்கைகளை பன்னாட்டுச் சமூகம் மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன். இதன் ஊடாகவே எமது சிங்களச் சகோதரர்களுக்கு இறுதிப் போரில் என்ன நடைபெற்றது, எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள், எத்தனை பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பது போன்ற உண்மைகளை எடுத்துச் சொல்ல முடிவதுடன் அதனால் புரிந்துணர்வை ஏற்படுத்தி உண்மையான இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும். இல்லாதுவிட்டால் குற்றம் இழைத்தவர்கள் தம்மைப் பாதுகாப்பதற்காகப் போலித் தேசியவாதத்தைக் கையில் எடுத்து இன முரண்பாட்டை மேலும் சிக்கல் நிலைக்கு உட்படுத்துவதற்கே இன்றைய நிலைமைகள் வழிவகுக்கும். எமது மக்கள் தலைவர்கள் விரைந்து செயற்படுவார்களா? என்றுள்ளது. (21)

## நாடாளுமன்றில் எம்.பிக்களுக்கு ஆசனங்கள் ஒதுக்குவதில் சிக்கல்

கொழும்பு, நவ.7

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆசனங்களை ஒதுக்குவது குறித்து, இதுவரை இறுதித் தீர்மானத்துக்கு வரவில்லை என்று நாடாளுமன்ற பிரதிப் பொதுச்செயலாளர் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகப் பதவியேற்றதன் பின்னர், இடம்பெற்ற பல புதிய அமைச்சர்கள் பதவியேற்புத் தொடர்பான அரசிதழ் அறிவித்தல் பத்திரம் இதுரை நாடாளுமன்றத்துக்கு கிடைக்கவி ல்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களிலும் மேலும் பலர் அமைச்சர்களாக பதவியேற்புச் செய்துகொள்ளவுள்ள நிலையில், உறுப்பினர்கள் ஆளுங்கட்சி அல்லது எதிர்கட்சியுடன் இணையும் சந்தர்ப்பம் உள்ளதால், நாடாளுமன்றத்தில் ஆசனங்களை ஒதுக்க முடியாதுள்ளதாகவும் , நாடாளுமன்றப் பிரதி பொதுச்செயலாளர் நீல் இத்தவெல தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூட்டப்படும் என அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் அரசிதழ் வெளியிடப்பட்டுள்ள நிலையில், 13ஆம் திகதியளவிலேயே ஆசனங்கள் ஒதுக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், தற்போதைய சபாநாயகரை நீக்க வேண்டுமெனில் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட வேண்டுமெனவும் இத்தவெல தெரிவித்துள்ளார். (21)

### ஜனநாயகத்தை வலியுறுத்தி

## கொழும்பில் நாளை ஆர்ப்பாட்டப் பேரணி

கொழும்பு, நவ.7

நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தி நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்ன இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டி நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெ டுக்கப்படவுள்து என்றும் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைகளைத் தொடர்ந்து ஜனநாயகத்தை நிலைநாட்ட வலிறுயுத்தி ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் புதிய தலைமை அமைச்சராக நியமிக்க ப்பட்டுள்ள மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்கள் கொழும்பில் திரண்டிருந்தனர். அத்தோடு நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு பன்னாடுகளும் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (21)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியதாலேயே ரணில் பதவியிழந்தாராம்

### காரணம் கூறுகிறார் அமைச்சர் விஜயதாச

கொழும்பு, நவ.7

ஆம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கிய முட்டாள்த்தனமான செயற்பட்டின் காரணமாகவே ரணிலின் அரசு நிறைவுக்கு வந்தது என அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் தெரிவித்துள்ளதாவது; சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மூலம் இந்த நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாகக் குழிதோ ண்டிப் புதைப்பதற்கு வித்திடப்பட்டது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கியதால் இந்தியா, மத்தள விமானநிலையம், கொழும்பு துறைமுகத்தின் கிழக்குப்பகுதி, திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் என அனைத்தையும் தமக்கு வழங்குமாறு அழுத்தங்களைப் பிரயோகிக்க ஆரம்பித்தது. என்றார். (21,31)

## பொதுசன முன்னணியின் சுவரொட்டியில் மைத்திரிபாலவின் ஒளிப்படம் வேண்டாம்

### அந்தக் சட்சியின் உறுப்பினர்களுக்கு உபதேசமாம்

கொழும்பு, நவ.7

ஶ்ரீலங்கா பொதுசன முன்னணியின் பிரசாரச் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஒளிப்படங்களை உள்ளடக்க வேண்டாம் எனவும் ராஜபக்ச குடும்பத்தினரின் ஒளிப்படங்களை மட்டும் உள்ளடக்குமாறும் அந்த முன்னணியின் ஆதரவாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இதற்கு அமைய மகிந்த மற்றும் மைத்திரியின் ஒளிப்படங்கள் அடங்கிய சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானத்துக்கு அமைய மகிந்த ராஜக்ச, பசில் ராஜபக்ச மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரின் ஒளிப்படங்களை உள்ளடக்கிய சுவரொட்டிகளை நாடு முழுவதும் ஒட்ட சிறிலங்கா பொதுசன முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துக்குத் தேவையான 113 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பணத்தைக் கொடுத்து திரட்ட முடியாத சூழ்நிலையில் அரசதலைவர் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக ராஜபக்சவினருக்கு கிடைத்துள்ள நம்பிக்கையான தரப்புத் தகவல்கள் காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அதேவேளை முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவின் ஒளிப்படங்கள் அடங்கிய பெரிய பதாகைகளை உடனடியாக அகற்றுமாறு அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தரப்பிலும் உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை மீறிச் செல்லும் விதமான எந்தச் சந்தர்ப்பமும் ராஜபக்சவினருக்கு வழங்கப்படக் கூடாது என மைத்திரி தரப்பு தீர்மானித்துள்ளதாகவும் இதற்கு அமையவே ஊடகத்துறைக்குப் பொறுப்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியைக் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு வழங்காது ராஜாங்க அமைச்சர் பதவியை வழங்கியிருப்பதாகவும் பேசப்படுகிறது. (21)

## சம்பந்தன் மகிந்தவுடன் இணைந்தால் நல்லதாம்

### கருணா கூறுகிறார்

கொழும்பு, நவ.7

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்தால் மிகவும் நல்லது என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார். எனினும் அவரை புதிய அரசுடன் இணையவிடாமல் தடுப்பது வெளிநாட்டுச் சக்திகள் என கருணா குறிப்பிட்டுள்ளார்.

தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச அதிகாரத்துக்கு வந்துள்ளமை பெரும்பான்மை தமிழ் மக்கள் தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர். தேசிய அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை. இதனால் வருத்தமடைந்துள்ள வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்திருந்தனர். தற்போது தேவைப்பட்ட மாற்றம் அந்த மக்களுக்கு கிடைத்துள்ளது. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் புதிய அரசில் இணைவது மிகவும் முக்கியமாகும். அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, புதிய அரசுக்கு விருப்பம் தெரிவிக்கும். அத்துடன் எனது கட்சி அடுத்த தேர்தல்களில் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசின் சிறந்த சக்தியை கொடுக்கும் என கருணா மேலும் தெரிவித்துள்ளார். (21)

## அமைச்சரவையின் இணைப் பேச்சாளர்கள் நேற்று நியமனம்

கொழும்பு, நவ.7

அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல ஆகியோர் அமைச்சரவையின் இணைப் பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு அரசியலில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்கவும் வெகுசன ஊடகம் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவும் இணை அமைச்சரவைப் பேச்சாளர்களாக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

# எம்.பிக்களை விலைக்கு வாங்காதீர்கள்! மைத்திரியைக் கடிந்த சம்பந்தன்

கொழும்பு, நவ. 7

இலங்கை ஜனநாயக நாடு. இது சர்வாதிகார நாடு அல்ல. எனவே, நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் கேவலமான நடவடிக்கையை நிறுத்திவிட்டு நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுங்கள். நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டுங்கள். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.



அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில் சிறப்புச் சந்திப்பு அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. இதன்போதே சம்பந்தன் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

'புதிய தலைமை அமைச்சர் நியமனம், நாடாளுமன்றம் ஒத்திவைப்பு, நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குதல் ஆகியவை சட்டத்துக்கு முரணானவை. இவை ஜனநாயகத்துக்கு விரோதமானவை. இவற்றை நாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம். நாட்டில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படவேண்டும்' என்றும் இரா.சம்பந்தன், அரச தலைவரிடம் இதன்போது எடுத்துரைத்தார். தான் அரசமைப்புக்கு உட்பட்டே அனைத்தையும் செய்வதாக அரச தலைவர் இதன்போது சம்பந்தனிடம் கூறியுள்ளார்.

(5)

## இலங்கை ஜனநாயக கலாசாரத்தை பின்பற்ற வேண்டும்.

### பொதுநலவாய செயலாளர் நாயகம்

கொழும்பு.நவ.7

இலங்கை ஜனநாயக கலாசாரத்தையும் நடைமுறைகளையும் பாதுகாத்து அவற்றை பின்பற்றுமாறும் பொதுநலவாயத்தின் செயலாளர் நாயகம் பட்ரிசீயா ஸ்கொட்லான்ட் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் செயலாளர் நாயகத்தின் பேச்சாளரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தை 14 ஆம் திகதி கூட்டும் அரச தலைவரின் அறிவிப்பை கவனத்திலெடுத்துள்ளார் என தெரிவித்துள்ள அவரின் பேச்சாளர், அரசமைப்பின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நாடாளுமன்றத்தின் முக்கியத்துவத்தை செயலாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கு நாடாளுமன்றம் விரைவில் கூடும் எனவும் அவர் இதன்போது நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் அரசியல் தலைவர்களையும் மக்களையும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறும் நாட்டின் அரசமைப்பும் சட்டத்தின் ஆட்சியும் மதிக்கப்படுவதை உறுதி செய்யுமாறும் செயலாளர் நாயகம் கேட்டுக் கொண்டுள்ளார் என அவர் தெரிவித்தார்.

(ஐ)

## நாட்டின் தற்போதைய பிரச்சினை அதிகாரப் போட்டியே தவிர கொள்கை ரீதியானது அல்ல

கொழும்பு.நவ. 7

அரச தலைவர் அரசை மாற்றத் தீர்மானித்ததற்கும், மகிந்த அதிகாரத்தை உறுதி செய்வதற்கு எடுக்கும் முயற்சியும், ரணில் தலைமை அமைச்சர் நாற்காலியை விடாமல் பிடித்திருப்பதற்கும் அதிகாரத்திற்கான போட்டிதான் காரணமே தவிர கொள்கை ரீதியான பிரச்சினைகள் காரணமல்ல என்று தொழிற் சங்கங்கள், வெகுசன அமைப்புகள், இடதுசாரிய அமைப்புகளின் ஒன்றியம் என்பன வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தற்போதைய நிலைப்பாடுகளும், அவர்களின் கட்சி தாவல்களும் அரசியல் கொள்கைகள் சார்ந்தவையாகவோ, அவர்களுக்கு வாக்களித்த மக்களின் அபிலாசைகள் சம்பந்தமானவையாகவோ இல்லை. அது பணத்திற்காகவும் பல்வேறு சுகபோகங்களுக்காகவுமே இடம்பெறுகின்றது. எனவே, நாடாளுமன்றத்தைக் கூட்டுவதன் மூலமாக மக்களின் கருத்து வெளிப்படுத்தப்படுமென நம்புவது முட்டாள்தனமானது.

மைத்திரிபால சிறிசேனவும், மகிந்த ராஜபக்சவும் ஆரம்பத்திலிருந்தே ஜனநாயகத்திற்கு முரணாகவே செயற்படுகின்றனர். தமது அதிகாரத்திற்காகச் சட்டத்தையும், சமூகக் கருத்தையும் அவர்கள் துச்சமெனக் கருதுவது தொடர்ந்து நிரூபிக்கப்பட்டு வருகிறது. தமது கூட்டரசின் பங்காளிகள் பற்றியே கொஞ்சமும் அக்கறை கொள்ளாத இவர்கள், உழைக்கும் மக்கள் உட்பட அடித்தட்டு மக்கள் சம்பந்தமாக எந்தளவு ஜனநாயகபூர்வமாக அக்கறையுடன் செயற்படுவார்கள் மகிந்த ராஜபக்ச குழுவினர் மாற்றம் குறித்து கூறினாலும் அரச கொள்கையில் மாற்றங்கள் செய்யாமல் நபர்களை மாற்றுவதால் எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை. உதாரணமாக, புதிய அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்தவர்களில் அநேகமானோர் முந்தைய அமைச்சரவையில் அமைச்சர்களாக இருந்தவர்களே.

அவர்கள் இதுவரை பொருளாதாரம், அரசியல் ஆகிய துறைகள் தொடர்பாக எவ்வித மாற்றுக் கொள்கையையோ, மாற்று வேலைத்திட்டத்தையோ முன்வைக்கவில்லை.

எனவே, மக்கள் உண்மையான உரிமைகளை வென்றெடுக்கும் அமைப்பாக அணிதிரள வேண்டுமெனவும், இம் முதலாளித்துவ ஜனநாயகத்திற்கு மாற்றான மக்களின் அரசியல் அதிகாரத்திற்காக அணிவகுக்குமாறும் ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களையும் ஜனநாயகத்தை மதிக்கும் செயற்பாட்டாளர்களையும் கேட்டுக்கொள்கின்றோம். என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ; தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க

### தீபாவளி நிகழ்வில் மாற்றி மாற்றி சொன்ன டக்ளஸ்

கொழும்பு.நவ.7

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவை அரச தலைவர் எனக் கூறியுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

அரச தலைவர் மைத்திபால சிறிசேன தலைமையில் தேசிய தீபாவளிப் பண்டிகை நிகழ்வு நேற்று முன்தினம் அரச தலைவர் மாளிகையில் நடைபெற்றது. இதில் தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச, எதிர்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற்றும் சமயத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் முதலில் பேச அழைக்கப்பட்ட மீள்குடியேற்ற புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி இந்துசமய அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பேச்சை ஆரம்பிக்க முன் அரச தலைவரை வரவேற்றார். அப்போது மதிப்புக்குரிய அரச தலைவர் மகிந்த ராஜபக்ச என்று விளித்துள்ளார்.

இதனையடுத்து அரங்கமே சற்று அதிர உடனே சுதாரித்துக்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மன்னிக்கவும் ('சொரி சொரி') என்று தன்னைத் திருத்திக் கொண்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன என்றார்.

அதன்பிறகு பேச்சைத் தொடர்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவான்ந்தா, ஒவ்வொரு தீபாவளிப் பண்டிகையின்போதும் அடுத்த தீபாவளிக்குள் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம் என்று ஏமாற்றும் கூட்டமல்ல நாம். பொறுப்பேற்றால் அதன்படி செய்துகாட்டுவோம்.

நிலங்கள் மீட்கப்படவேண்டும். அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும். மக்கள் மீள்குடியேற்றப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். மக்களை ஏமாற்றமாட்டோம். போதிய அரசியல் பலம் இல்லாத போதும் நாம் அதில் இறங்கியிருக்கிறோம். எதிர்காலத்தில் மாற்றங்கள் வரும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேபோல் நாம் தலைமை அமைச்சருடன் இணைந்து என்று சொல்ல வரும்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் என்று குறிப்பிட்டார். மீண்டும் அரங்கம் சற்று அதிர சுதாரித்துக்கொண்டு மீண்டும் மன்னிப்புகேட்டுவிட்டு தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து என்று கூறி முடித்தார்.

(ஐ)

## தீபாவளியிலும் வடமராட்சியில் வன்முறைச் சம்பவங்கள் பதிவு

### நால்வர் வைத்தியசாலையில்

வடமராட்சி, நவ.7

வடமராட்சி, நெல்லியடி பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றுத் தீபாவ்ளி தினத்தன்று வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தச் சம்பங்களில் பலர் காயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தீபாவளி தினமான நேற்று வடமராட்சி, நெல்லியடி பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பெருமளவான வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். வாள்வெட்டுக் குழுவினருடைய அட்டூளியத்துக்கும் குறைவிருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. குழு மோதல்கள், வாள்வெட்டுத்தாக்குதல்கள், மது போதையில் வீதிகளில் அட்டகாசம் என்பன இடம்பெற்றுள்ளன. நேற்றுக் காலை முதல் நள்ளிரவுவர்ரை இந்தச் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. இந்தச் சம்பவங்களில் பலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது எனினும் வன்மு றைச் சம்பவங்களில் படுகாயமடைந்த நால்வர் பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவங்கள் தொடர்பில் அந்தந்தப் பிரிவுப் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். மேலதிக விசாரணைகள் இன்று இடம்பெற்று, வன்முறைகளைத் தோற்றும் வித்தவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(21,26)

## தமிழ் அரசுக் கட்சியில் இருந்து சுமந்திரனை நீக்குமாறு கடிதம்

### சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் அனுப்பினார்

யாழ்ப்பாணம், நவ.7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் , தமிழரசுக் கட்சியின் உப செயலாளருமான எம். ஏ. சுமந்திரனை கட்சியில் இருந்து நீக்குமாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு , சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் கடிதம் அனுப்பியுள்ளார்.

வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் இளைஞரணி மாநாட்டில் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவை "நீ" என விளித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் உரையாற்றியிருந்ததைக் கண்டித்தே சச்சிதானந்தன் அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அதில் உள்ளதாவது

நீ என்ற உச்சரிப்பின் தொனிதான் சிக்கலானதாக் உள்ளது. இக்காலத்தில் நீ, உன்னை, வாடா, வாடி போன்ற சொற்களைக் கணவனும் மனைவியும் பரிமாறும் சிற்றின்ப நேரங்களையோ, கடவுளும் அடியவனும் பரிமாறும் பேரின்ப நேரங்களையோ அறியாத வல்லர் தமிழர். தமிழர் சார்பாளர் ஒருவர் சினந்து வெறுப்பைச் சிந்தியவாறு, சிங்களத் தலைமைச் சார்பாளரை நீ என விளித்தல் தமிழரின் மரபல்ல. முதிர்ச்சியற்ற வெறுப்பைத் தூண்டும் பேச்சு. ஆற்றாமையின் உச்ச வெளிப்பாடு. தமிழரின் அறிவார்ந்த அணுகுமுறைக்கு ஊனமானது. சினம் என்னும் சேர்ந்தரைக் கொல்லி என்ற குறள் வரி தெரிந்தவர் இவ்வாறு பேசார். சம்பந்தன் முன்பும் ஆஸ்திரேலியப் பேச்சுக்காக சுமந்திரனைக் கண்டித்தவர். இப்பொழுதும் அவர் இத்தகைய உரையை ஏற்கார்.

1960இன் இரண்டாவது தேர்தலில் 1971 தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் சிலரின் இவ்வாறான பெறுப்பற்ற உரையால் சிங்கள மக்கள் தமக்குத் தாமே தமிழர் ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைத்தார்கள். சிங்கள மக்களை ஒன்றிணைத்துத் தமிழர் ஆதரவில்லாத ஆட்சியை 2018க்குப் பின் வரும் தேர்தலில் சிங்களவர் தேர்வார்கள். 1960இல் வந்த ஆட்சி, 1971இல் வந்த ஆட்சி இரண்டுமே தமிழரைத் திட்டமிட்டு நசுக்கிய ஆட்சிகள். 2018க்குப் பின்னரும் தமிழரை நசுக்கும் ஆட்சியைத் தேர்ந்தெடுக்கச் சிங்களவரைத் தூண்டிய சுமந்திரனை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அனைத்துப் பொறுப்பகளில் இருந்தும் விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது.

(21)

## சபாநாயகரை மிரட்டும் விமல் வீரவன்ச

கொழும்பு,நவ.7

பக்க சார்பாக தொடர்ந்தும் சபாநாயகர் கருஜயசூரிய செயற்படுவாராக இருந்தால் இறுதியில் விவசாயத்திற்கு செல்ல வேண்டிய நிலைமையே ஏற்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மக்கள் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைத் தேர்தல்கள் காலம் தாழ்த்தப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பது மேற்குலக நாடுகள் உட்பட அனைவரும் அறிந்த விடயமாகும். எனினும் தற்போது அரசமைப்பு மீறப்பட்டுள்ளதாகவும், ஜனநாயகத்தை பாதுகாப்பதாகவும் கூறிப் போராட்டங்களை முன்னெடுக்கும் சிவில் அமைப்புக்கள், மக்கள் விடுதலை முன்னணி, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச தலைவரை விமர்சிக்கும் பன்னாட்டு நாடுகள் ஏன் மாகாண சபை தேர்தல் காலம் தாழ்த்தப்படுவதற்கு எதிராக குரல் கொடுக்கவில்லை? சபாநாயகர் கருஜயசூரிய இவ்வாறு பக்க சார்பாக தொடர்ந்தும் செயற்படுவாராக இருந்தால் இறுதியில் விவசாயத்திற்கு செல்ல வேண்டிய நிலைமையே ஏற்படும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காண்பிக்குமாறு அவர் தெரிவித்து வருகின்றார். தலைமை அமைச்சர் மகிந்தராஜபக்ச தன்னுடைய பெரும்பான்மையை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு மாத்திரம் காண்பித்தால் போதுமானது. சபாநாயகருக்கு காண்பிக்க வேண்டிய அவசியமில்லை. தலைமை அமைச்சர் மகிந்த ராஜ பக்சவின் 113 பெரும்பான்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த நாடாளுமன்ற அமர்வு கூடும் முன்னர் அது 125 ஆக அதிகரிக்கும் - என்றார்.

# அட்டையை விட வண்ணத்துப்பூச்சியை விரும்புகின்றேன்

### மைத்திரிக்குப் பதிலடி கொடுத்த மங்கள



**கொழும்பு,நவ.7**

**அட்டையை விட வண்ணத்துப் பூச்சியை நான் விரும்புகின்றேன் என்று இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு பதிலடி கொடுத்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த பேரணியில் உரையாற்றிய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கடந்த மூன்று ஆண்டுகளில் அரசின் முடிவுகளை அமைச்சரவை எடுக்கவில்லை என்றும், ரணில் விக்கிரமசிங்கவைச் சுற்றி யிருந்த வண்ணத்துப் பூச்சிக் குழுவே எடுத்தது என்றும் இரட்டை பாலியல் அர்த்தத்துடன் கூறி யிருந்தார்.

ஓரினச் சேர்க்கையாளரை சிங்களத்தில், வண்ணத்துப்பூச்சி என்று, கூறப்படும் வழக்கம். இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்கவை அரச தலைவர் இவ்வாறு கூறியது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அரச அதிபர் மைத்திரிபால சிறிசேன மிகக் கேவலமான வகையில் சொல்லாடல்களைப் பயன்படுத்தியிருக்கின்றார் என்று ஊடகவியலாளரும், அரசியல் செயற்பாட்டாளருமான சுனந்த தேசப்பிரிய உள்ளிட்ட பலரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், அரச தலைவரின் கருத்துக்கு தனது கீச்சகப் பதிவு ஒன்றில் மங்கள சமரவீர பதிலடி கொடுத்திருக்கிறார். அதில், "அட்டையை விட வண்ணத்துப்பூச்சியை அதிகம் விரும்புகின் றேன்.

மதிப்புக்குரிய அரச தலைவரே" என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம், அவர் மறைமுகமாக, அரச தலைவரை அட்டை என்று வர்ணித்துள்ளார்.

## தமிழ் மக்களிடம் மகிந்தவை மண்டியிடவைத்துள்ளன இறைவன்

### சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவிப்பு

மகிந்த ராஜபக்சவை தமிழ் மக்களிடம் இறைவன் மண்டியிட வைத்துள்ளான் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

'தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை நசிக்கியது மட்டுமல்லாது பல்லாயிரக்கணக்கான தமிழர்களை முள்ளிவாய்க்காலில் கொன்று குவித்து விட்டு இன்று அதே தமிழ் மக்களிடம் வந்து தான்,ஆட்சியில் இருப்பதற்காக மண்டியிடுகின்றார் மகிந்த. இன்று இலங்கையில் யார் ஆட்சியில் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்கின்ற சக்தியை தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியிருக்கின்றார்கள். இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மகிந்த அமைச்சுப் பதவி வழங்குவதாகவும் கோடிக்கணக்கில் பணம் வழங்குவதாகவும் பேரம் பேசி வருகின்றார். இந்த மண்ணின் விடுதலைக்காக தங்கள் உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களினதும் மக்களினதும் உயிர்களுக்கு யாரும் விலை பேசமுடியாது. இதற்குப் பரிகாரமாக தமிழ் மக்களினுடை அபிலாசைகளை நிறை வேற்றக்கூடிய ஒரு தீர்வுத்திட்டத்தை வழங்க வேண்டும். ஆனால் அவ்வாறு தமிழ் மக்களுக்கு ஒருதீர்வை வழங்குவதற்கு மகிந்த ராஜபக்ச தயாராகவில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை பேசுகின்றார்.

தமிழ் மக்களினுடைய இழப்புக்களை ஈடு செய்வதற்கு எவராலும் எந்தவிலையும் பேசமுடியாது. மாறாகத் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு நிரந்தரமான தீர்வை பெற்றுத்தரக்கூடிய வகையில் அரசமைப்பை அமுல்ப்படுத்தவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையிலே ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும். இதுவே அவர் தமிழ் மக்களுக்குச் செய்யும் பரிகாரமாக அமையும். அதை விடுத்து, தொடர்ந்தும் தமிழ் மக்களை எமாற்றுகின்ற வகையிலேயே செயற்பட்டு வருகின்றார்' என்றார்.

## நல்லிணக்கத்துக்கு இந்து மக்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு அவசியம்

### கூறுகின்றார் தலைமை அமைச்சர் மகிந்த

கொழும்பு,நவ.7

நாட்டின் நல்லிணக்கம், சமாதானம், சகவாழ்வு என்பவற்றிற்கு தமிழ் இந்து மக்களின் ஆக்கபூர்வமான பங்களிப்பு அவசியம் அந்தவகையில் தீபத்திருநாள் அதற்கு ஒரு உந்துசக்தியாக அமைந்துள்ளது என்று தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

உலகவாழ் இந்து மக்கள் நேற்றையதினம் தீபாவளிப் பண்டிகையை கொண்டாடினர். அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, தீபாவளியை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் சமய வழிபாடுகள், நிகழ்வுகள் அனைத்தும் நாட்டின் நல்லிணக்கத்துக்கு ஒரு உந்துசக்தியாக அமையும் என்பதில் ஐயமில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## அரச தலைவரை சந்தித்தது உண்மை!

### கூறுகின்றார் ராஜித சேனாரட்ன



கொழும்பு,நவ.7

அரச தலைவர் விடுத்த அழைப்பின் பேரில் அவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்ததாக முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க இல்லாத அரசை ஏற்படுத்துவது தொடர்பில் முன்னாள் அமைச்சர்கள் ராஜித சேனாரட்னவும்,ஜோன் அமரதுங்கவும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர் என்று கொழும்பு ரெலிகிராவ் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவரின் அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்தேன். நான் தனியாக செல்ல விரும்பாததால் ஜோன் அமரதுங்கவை அழைத்துச்சென்றேன். அரச தலைவர்தான் மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்சராக நியமிப்பதற்கு ஏன் தீர்மானித்தார் என்பதை எனக்கு தெளிவுபடுத்தினார். இதன் பின்னர் நான் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இந்த சந்திப்பு தொடர்பான விடயங்களை தெரிவித்தேன், அரச தலைவருடனான எனது சந்திப்பு நாட்டைப் பொறுத்தவரை சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும். எனது சந்திப்பு கட்சி தாவலுடன் தொடர்பற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



## முச்சக்கரவண்டி மீது கற்பாறை விழுந்ததில் இருவர் சாவு

கொழும்பு,நவ.7

முச்சக்கரவண்டி மீது கற்பாறை விழுந்ததில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் படுங்காயமடைந்தனர். இந்த விபத்து உடபுஸ்ஸலாவ கொட்டம்பே பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது.

இராகலையிலிருந்து கொட்டம்பே பகுதிக்குச் சென்று அங்கிருந்து, உள் வீதியினூடாக கல்கொட்டுவ கருடாகல நோக்கி செல்லும் வேளையில், முச்சக்கரவண்டி மீது மரத்துடன் கூடிய கற்பாறைகள் சரிந்து வீழ்ந்துள்ளன.

இதில் முச்சக்கரவண்டியில் பயணித்த 5 பேரும் படுகாயங்களுடன் உடபுஸ்ஸலாவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் இரண்டு பேர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உடபுஸ்ஸலாவ மஸ்பன்ன பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய நிஷாந்த ஜெயகொடி மற்றும் 28 வயதுடைய சுசில் குமார ஜெயகொடி என அடையாளம் காணப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான விசாரணைகளை உடபுஸ்ஸலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பிரிட்டனில் வசிக்காத இலங்கையர்களையும் ஆயுதப்படைகளில் இணைத்துக்கொள்ள முடிவு

கொழும்பு,நவ.7

பிரிட்டனில் வசிக்காத இலங்கையர்களும் கூட பிரிட்டன் ஆயுதப் படைகளில் இணைந்து கொள்ள முடியும் என்று பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, கென்யா, பிஜி, உள்ளிட்ட கொமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்கள் பிரிட்டனில் வசிக்காத போதும், பிரிட்டன் ஆயுதப் படைகளில் இணைந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்களை பிரிட்டன் ஆயுதப்படைகளில் சேர்த்துக் கொள்வதற்கான விதிமுறைகளைத் தளர்த்தும் இந்த முடிவு நேற்றுமுன்தினம் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் இராணுவம், கடற்படை, விமானப்படை,ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்கு, குறைந்தது ஐந்து ஆண்டுகள் அங்கு வசித்திருக்க வேண்டும் என்ற விதிமுறையை தளர்த்துமாறு, பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு, நாடாளுமன்றத்திடம் யோசனையொன்றை முன்வைத்துள்ளது. பிரித்தானிய கடற்படை, விமானப்படை, இராணுவம் ஆகியவற்றுக்கு கொமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 350 பேரைச் சேர்த்துக் கொள்வதற்காக, 5 ஆண்டுகள் பிரிட்டனில் வசித்திருக்க வேண்டும் என்ற விதிமுறையை தளர்த்த முடிவு செய்திருக்கிறோம் என்று பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் கூறப்பட் டுள்ளது.

அனைத்து கொமன்வெல்த் நாடுகளில் இருந்தும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வோம், 18 வயதுக்கு உட்பட்டவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படாது.

பிரிட்டன் ஆயுதப்படைகளில் தற்போது 8 ஆயிரத்து 200 வெற்றிடங்கள் உள்ளன. அதனை நிரப்புவதில் சிக்கல்கள் உள்ள நிலையிலேயே கொமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவர்களை தமது படைகளில் அதிகளவில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# சாவ. கண்ணாடிப்பிட்டியில் திண்மக்கழிவகற்றல் தொகுதி

சாவகச்சேரி, நவ. 7

**திண்மக் கழிவகற்றல் பிரிவின் அலுவலகம், சாவகச்சேரி தனன்களப்புச் சாலை கண்ணாடிப்பிட்டிப் பகுதியில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு, நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் மற்றும் உறுப்பினர்களால் நேற்றுமுன்தினம் கூட்டாகத் திறந்து வைக்கப்பட்டது.**

அரசதலைவரின் பணிப்பின் பேரில் உள்ளூராட்சி திணைக்களத்தினால் திண்மக் கழிவுகளைப் பசளையாக்கும் திட்டத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் கட்டடம் அமைத்து கழிவுகள் உரமாக்கப்பட்டு விற்கப்பட்டு வருகிறது. எனினும் அவ்வாறு உரமாக மாற்றப்பட முடியாத கழிவுகளை மறு சுழற்சி மேற்கொள்வதற்காகவே இந்தத் திண்மக் கழிவகற்றல் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-9,159)



வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம் 2018ஆம் ஆண்டுக்கான தனது நிதி ஒதுக்கீட்டின் மூலம் யாழ் புனித மரியன்னை பாலர் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் இலத்திரனியல் பொருள்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்து கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்கினார். (ம)

## வறட்சி உதவியை பெறக் கோரிக்கை

தென்மராட்சி, நவ. 7

தென்மராட்சிப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்குவது நாளையுடன் நிறுத்தப்படவுள்ளதால் இதுவரை உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிலையத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. பிரதேசத்தில் இந்த வருடம் வறட்சியால் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்து 452 குடும்பங்களுக்கு உருளைக்கிழங்கு, முட்டை உட்பட 12 வகையான பொருள்கள் இடர் முகாமைத்துவ அமைச்சால் பொதி செய்யப்பட்டு கடந்த 19ஆம் திகதி அனுப்பப்பட்டன. இந்தப் பொருள்கள் விநியோகம் முடிவுறுத்தப்படவுள்ளது. இதனால் வறட்சி உதவியைப் பெற்றுக் கொள்ளாத குடும்பங்கள் உடனடியாகப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. (ம-9)


## வடஇலங்கை சங்கீத சபையின் புதிய நிர்வாக சபைத் தெரிவு

யாழ்ப்பாணம், நவ. 7


வட இலங்கை சங்கீத சபையின் புதிய நிர்வாக சபை கடந்த 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெரிவுசெய்யப்பட்டது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இந்தப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெற்றது. இதில் வடமாகாண கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயக்குமாரும் கலந்து கொண்டார். சங்கீத சபையின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டதோடு புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெற்றது.

தலைவராக சு.சுந்தரசிவம் (வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்), உபதலைவர்களாக கலாநிதி ந.வி.மு. நவரத்தினம், சி.சிவசிவா, ந.செல்வச்சந்திரன் ஆகியோர் தெரிவாகியிருந்தனர். செயலாளராக பி.என்.சுதர்சன் மற்றும் உபசெயலாளராக திருமதி ஈ.புனிதகுமாரி ஆகியோர் தெரிவாகியிருந்தனர். பொருளாளராக தே.தேவானந்த் மற்றும் உப பொருளாளராக இ.கிருஷ்ணபிள்ளை ஆகியோர் தெரிவாகினார்கள். (ம-7)



வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தால் பன்னாட்டு நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு இடையில் கட்டுரை, கவிதை, பேச்சு, ஓவியம், நாடகம், விவாதம் ஆகிய போட்டிகள் அண்மையில் நடத்தப்பட்டன. (ம-9)



## நீக்கிலார் முன்பள்ளியின் ஆக்கப்பொருள் கண்காட்சி

கொடிகாமம், நவ. 7

மிருசுவில் புனித நீக்கிலார் முன்பள்ளியின் ஆக்கப் பொருள் கண்காட்சி கடந்த சனிக்கிழமை காலை 9 மணிக்கு முன்பள்ளி ஆசிரியர் திருமதி ஜே.சகாயராணி தலைமையில் நடைபெற்றது.

விருந்தினராக மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் பிரதி அதிபர் அருட்சகோதரி ஜீ.ஐ.சுபாஜினி கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்துப்பார்வையிட்டார். இந்த நிகழ்வில் முன்பள்ளிகளின் பிரதேச இணைப்பாளர் ச.தர்மிலா மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-159)



## தென்மராட்சிப் பகுதியில் அமைக்கப்பட்ட கால்நடை மருத்துவர் அலுவலகத்தின் கட்டடப் பணிகள் பூர்த்தியாகும் நிலை

சாவகச்சேரி, நவ. 7

சாவகச்சேரி தனன்களப்பு சாலையில் அமைக்கப்பட்டு வரும் தென்மராட்சிப் பிரதேச கால்நடை மருத்துவர் அலுவலகக் கட்டடப் பணிகள் தற்போது பூர்த்தியடையும் நிலையில் காணப்படுகின்றன.

சாவகச்சேரியில் 50 வருடங்களுக்கு மேலாக கால்நடை மருத்துவ அலகுக்கென தனியான நிரந்தரக் கட்டடம் இல்லாததால், குறித்த மருத்துவ அலகு காலத்துக்கு காலம் தனியார் கட்டடங்களை வாடகைக்குப் பெற்று இயங்கி வந்தது. பின்னர் பிரதேச செயலகத்தின் ஒரு பகுதி இயங்கி வந்த கட்டடத்தில் கால்நடை மருத்துவர் அலுவலகம் கடந்த பத்து வருடங்களாக இயங்கி வருகிறது.

பிரதேச செயலகத்தில் அலுவலர்களின் எண்ணிக்கை அதிகரித்ததையடுத்து கட்டடத்தினை வழங்குமாறு பிரதேச செயலகத்தால் சுகாதார மற்றும் கால்நடை அமைச்சுக்கு அறிவித்துள்ளதையடுத்து தனன்களப்பு சாலையில் புதிதாக கட்டடம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தன. இந்தத் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன என்று தற்போது தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்குப் போட்டிகள்

சாவகச்சேரி, நவ. 7

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையின் நுணாவில், மீசாலை ஆகிய பொது நூலகங்களின் எல்லைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான போட்டிகளை இன்று தொடக்கம் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நூலக மண்டபத்தில் நடத்தவுள்ளோம் என்று நூலகர்கள் அறிவித்துள்ளனர்.

தரம் 1,2 வகுப்பு மாணவர்கள் ஆரம்பப் பிரிவாகவும், தரம் 3, 4, 5 வகுப்பு மாணவர்கள் கீழ்ப் பிரிவாகவும், தரம் 6, 7, 8 வகுப்பு மாணவர்கள் மத்திய பிரிவாகவும், தரம் 9, 10, 11 வகுப்பு மாணவர்கள் மேற் பிரிவாகவும், தரம் 12, 13 வகுப்பு மாணவர்கள் அதிமேற்பிரிவாகவும் கொண்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இன்று அனைத்துப் பிரிவு மாணவர்களுக்குமான சித்திரப் போட்டியும் நாளை கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியும், நாளைமறுதினம் தரம்- 4 வகுப்பு மாணவர்களுக்கு நுண்ணறிவும் பொது அறிவுப் போட்டியும், எதிர்வரும் 10ஆம் திகதி தரம் 2 வகுப்பு மாணவர்களுக்கு வாசிப்பு போட்டியும், நண்பகல் 11.30 மணிக்கு தரம் 5 வகுப்பு மாணவர்களுக்கு பேச்சுப் போட்டியும் நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், நவ. 7

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் கந்தசஷ்டி விரதம் நாளைவியாழக்கிழமை நண்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஏழு நாள்கள் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு விக்னேஸ்வர வழிபாடு, வாஸ்து சாந்தி மற்றும் பூசை வழிபாடுகளுடன் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும். மறுநாள் வியாழக்கிழமை நண்பகல் 11 மணிக்குக் கொடியேற்றமும் இடம்பெற்று 12ஆம்திகதிதிங்கட்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு திருப்பெருந்திருவருட் காட்சியும் 13ஆம் திகதி செவ்வாய்கிழமை நண்பகல்12.15 மணிக்குவேல் வழங்கும் காட்சியும் தொடர்ந்து 3 மணிக்கு சூரசங்காரமும் நடைபெறும். 14ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் மாலை தூவஜா அவரோகணமும் .15ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்குத் திருக்கல்யாண உற்வசமும் இடம் பெறும்.

**தொண்டமன்னாறு சந்நிதியான் ஆலயம்**

கந்தசஷ்டி உற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை முதல் 12ஆம் திகதி வரை தினமும் காலை 11மணிக்கு சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறவுள்ளன. 'சேவலும் மயிலும்' என்ற தொனிப் பொருளில் இரா.செல்வவடிவேல் இந்தத் தொடர் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ம-17,173)

## மாணவர்கள் மதிப்புறுத்தல்

தென்மராட்சி, நவ. 7

மிருசுவில்விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் இருந்து தரம் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி, சித்திபெற்ற மாணவர்களை மதிப்புறுத்தும் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் இன்று பிற்பகல் 1 மணிக்கு இடம் பெறவுள்ளது.

அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறும்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதனும் சிறப்பு விருந்தினராக வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும் மதிப்புறு விருந்தினராக வலய ஆரம்பப் பிரிவு சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் ந.திருவாசகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-9,159)

## முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த சிலர் மகிந்தவை நேரில் சந்தித்து ஆதரவு

முல்லைத்தீவு,நவ.7

நாட்டின் தலைமை அமைச்சராக அறிவிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் மற்றும் பொதுமக்கள் முன்னணி கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் மகிந்த ராஜபக்சவை வீட்டில் சென்று நேற்றுமுன்தினம் காலை சந்தித்து, கலந்துரையாடியுள்ளதுடன், அவரது மகன் நாமால் ராஜபக்சவையும் சந்தித்துள்ளார்கள்.

இந்த நிகழ்வில் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், மகிந்த ராஜபக்சவுக்கு பொன்னாடை போர்த்தி, தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளார். இவருடன் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் துசார உள்ளிட்ட, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் கட்சி உறுப்பினர்களும் சென்று கலந்துரையாடித் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளார்கள். (ரி 3)



## அபாயப் பிரதேசத்துக்குள் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினர் தவிர்ந்த ஏனையோர் உள்நுழையத் தடை

கிளிநொச்சி, நவ.7

**மிதிவெடி அகற்றும் நிறுவனத்தினர் தவிர்ந்த ஏனையோர் மிதிவெடி அகற்றப்படாத பகுதிக்குள் உள்நுழைவது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதிக்குள் காணப்படும் வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. எதேச்சையாக வெடிபொருள்கள் வெடிப்பதனால் உயிரிழப்புக்களும், அவையவ இழப்புக்களும் ஏற்படுகின்றன. இது தொடர்பாக இந்தப் பகுதி மக்களுக்குப் பல்வேறு கருத்தரங்குகள் வைக்கப்பட்ட போதும், இதுவரை ஆபத்துப் பிரதேசத்துக்குள் நுழைவது குறைந்ததாக இல்லை.

மணற் கடத்தல், மரங்கள் வெட்டப்படுதல், வெடிபொருள்களில் காணப்படுகின்ற மருந்துகள் பிரித்து எடுத்தல், இரும்பு எடுத்தல் எனப் பல்வேறு வகையான வேலைகளை, மிதிவெடி உள்ள பகுதிகளுக்குள் மக்கள் புகுந்து செய்கின்றனர். மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்க் கொண்டு வருவதாகத் தெரிவிக்கின்றனர். இதனை அடுத்து அந்தப் பகுதிகளில் பொலிஸ் திணைக்களம் எனப் பெயரிடப்பட்டு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மிதிவெடி அகற்றும் நிறுவத்தினர் தவிர மற்றவர்கள் மிதிவெடி அகற்றப்படாத பகுதிக்குள் உள்நுழைவது, முற்றிலுமாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், தனியார் வாகனங்கள் உள்நுழைவது வெடிபொருள்களிலுள்ள மருந்துகளை அகற்றுவது,மரங்களைத்தறிப்பது, மண் அகழ்வது ஆகியவை தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும், அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடுமாறு கண்டுபிடிக்கப்பட்டால் வாகனங்கள் பறிமுதல் செய்து அரசுடமையாக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## மன்னாரில் பல இடங்கள் நீரில் முழ்கின

மன்னார்,நவ.7

கடந்த சில நாள்களாகத் தொடரும் மழைக் கால நிலையினால் மன்னாரின் பல தாழ் நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன. சாந்திபுரம், ஜிம்றோன் நகர், எமில் நகர், உப்புக்குளம், எழுத்தூர், இருதயபுரம் போன்ற பிரதேசங்களே இவ்வாறு நீரில் முழ்கியுள்ளன.

வீடுகள், வீதிகள், மைதானங்கள் பேன்றவை அதிகளவில் நீர் சூழ்ந்துள்ளதால், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஒழுங்கான கழிவு நீர் முகாமைத்துவம் இன்மையே மழை நீர் வடிந்து செல்ல முடியாத நிலைக்குக் காரணம்.



வடி நீர் கால்வாய்கள் சில இடங்களில் குப்பை கூழங்களினால் அடைக்கப்பட்டிருப்பதனால், கழிவு நீர் கடலுடன் கலக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (56)



## ஆய்வுகூடமும் அழகியல் கூடமும் திறப்பு

கிளிநொச்சி,நவ .7

வி 4 யு - யுகே அமைப்பின் நிதிப் பங்களிப்பில் கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஒழுங்குபடுத்தலில், கிளிநொச்சி கரடிப்போக்கு விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் ஆய்வுகூடமும், அழகியல் கூடமும் கடந்த 3 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வி 4 யு - யு கே அமைப்பின் செயலர் ஆர்.சிவகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் இயக்குநரும் யாழ் போதனா மருத்துவமனைப் பணிப்பாளருமான மருத்துவர் த.சத்தியமூர்த்தி உள்பட்டோர் கலந்துகொண்டனர். (222)

## மானிய உரம் வழங்கல்

முல்லைத்தீவு,நவ.7

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உரம், உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. தற்போதும் வழங்கப்பட்டுவருகிறது. முத்து ஐயன் கட்டுப் பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கே உரம்வழங்கப்பட்டுள்ளது என, கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.சற்குணநேசன் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழுள்ள, மற்றும் மானாவாரிச் செய்கைகளுக்கான விதைப்புத் தவணை நேற்று முன்தினம் 5 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (500)

## விசாரணைக் குழுவின் பரிந்துரை கிடப்பில்

### மன்.பிரதேச செயலரின்இடமாற்றத்தில் அரசியல்

மன்னார் மாவட்டத்தில் பிரதேசசெயலர் ஒருவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்த அதிகாரிகள் குழு, பிரதேச செயலரை இடமாற்றம் செய்யுமாறு பரிந்துரை வழங்கியுள்ளது. அந்தப் பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டினாலேயே, மேற்படி பரிந்துரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகம் ஒன்றின் பிரதேச செயலருக்கு எதிராக 4 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

4 குற்றச்சாட்டுகளில் மிக் முக்கியமாக பெண் ஊழியர்களுடன் தகாத முறையில் நடக்க முயன்றமை, லஞ்சம் பெற்றமை என பன குறிப்பிடப்பட்டுள்ளன. குற்றம்சாட்டப்பட்ட பிரதேச செயலர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பணியாற்றிய போதும் பலவகையான குற்றச்சாட்டுக்களுக்கு உள்பட்டு பணி இடை நிறுத்தம் செய்து வைக்கப்பட்டார். இதன் பின்னரே மன்னார் மாவட்டத்தின் பிரதேச செயலர் பிரிவுக்குச் செயலராக நியமிக்கப்பட்டிருந்தார். அங்கும் அவர் முறைகேட்டில் ஈடுபட்டதாக சக ஊழியர்களாலேயே குற்றம் சுமத்தப்பட்டது. பிரதேச செயலரை உடனடியாக மாவட்டத்தை விட்டு வெளியேற்றுமாறு .விசாரணைக்குழு செய்த பரிந்துரை அமைச்சின் செயலருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. விசாரணை அறிக்கையின் அடிப்படையில், பிரதேச செயலரை, உடனடியாக மாவட்டத்தை விட்டு வெளியேற்றும் முடிவை மேற்கொள்ள முயன்ற போது மாவட்டத்தில் செல்வாக்குப் பெற்ற அரசியல்வாதிகளில் ஒருவர் இடமாற்றத்தை மேற்கொள்ளவிடாது தடை போட்டுள்ளார். இது தொடர்பில் மாவட்டச் செயலர் மோகன்ராசைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

எமது மாவட்டத்தில் ஓர் பிரதேசசெயலர் தொடர்பில் சில முறைப்பாடுகள் கிடைத்தமை உண்மை. முறைப்படி விசாரணைகள் இடம் பெற்று அதன் உண்மைத் தன்மையை அமைச்சின் செயலருக்கு அனுப்பி வைத்துள்ளோம். அதில் என்ன விடயம் உள்ளது, எது உண்மை என தற்போது கூறுவது பொருத்தமற்றது. இருப்பினும் இதற்கான மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பொறுப்பு அமைச்சைச் சார்ந்தது -என்றார். (105)



## வீதிகளைச் சீரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, நவ .7

கல்லாறு கால் ஏக்கர் மற்றும் அரை ஏக்கர் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் வீதிகளைச் சீரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறுக் கிராமத்தில் தாம் அன்றாடம்பயன்படுத்தும்வீதிகளைச்சீரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர். மழையுடனான காலநிலை ஆரம்பித்துள்ளது. வீதிகளின் நிலை மேலும் மோசமாக பாதிக்கப்படும். வீதிகளில் காணப்படுகின்ற பள்ளங்களில் மழை நீர் தேங்கி நின்று, மக்கள் பயணிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும். இது போன்ற சம்பவங்கள் கடந்த வருடங்களிலும் ஏற்பட்டுள்ளது. இந்த வீதிகளைச் சீரமைப்பதற்கு எவரும் முன்வரவில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாடசாலை மாணவர்கள் உள்பட்ட வெளியில் செல்பவர்கள் வீதியில் தேங்கி நிற்கும் நீரில் நனைந்து செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது. இதனை கருத்திற்க்கொண்டு சீரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர். இது தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளரிடம் கேட்டபோது: குறித்த வீதி ஐ வீதி வேலைத் திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

வேறு எந்தத் தற்காலிக சீரமைப்புக்களைக் கூட செய்யமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.'ஐ' வீதி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கும்போது இந்த வீதியும் சீரமைக்கப்பட வேண்டிய சூழல் காணப்படுவதாகத் தெரிவித்தார். (6)

ஆண்டு முடிவுக்கு 53 நாள்களேயுள்ள நிலையில்

# வடக்குக்கு ஒதுக்கிய நிதியில் ரூ,1,945 மில்.கிடைக்கவில்லை!

## தற்போதைய அரசியல் குழப்பங்களால் நிதி கிடைக்குமா என்று சந்தேகம்

யாழ்ப்பாணம், நவ. 7

வடக்கு மாகாணத்தில் கொழும்பு அரசின் நிதியில் மாவட்டச் செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 945 மில்லியன் ரூபா நேற்றுவரை விடுவிக்கப்படவில்லை. தற்போதைய அரசியல் குழப்பங்களால் இந்த நிதி விடுவிக்கப்படுமா என்பது தொடர்பில் அதிகாரிகள் பலரும் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

வடக்கு மாகாணத்துக்கு மொத்தமாக 8 ஆயிரத்து 628 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. நேற்றுவரையில் 6 ஆயிரத்து 683 மில்லியன் ரூபாவே மாவட்டச் செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டதாக மாவட்டச் செயலகங்கள் உறுதிப்படுத்துகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 2 ஆயிரத்து 420 மில்லியன் ரூபா ஒதுக்கிய நிலையில் 2 ஆயிரத்து 320 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஆயிரத்து 882.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில் ஆயிரத்து 128.5 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு ஆயிரத்து 691 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்ட நிலையில் ஆயிரத்து 65 மில்லியனும் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கு ஆயிரத்து 407.5 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்ட நிலையில் இதுவரையில் ஆயிரத்து 190 மில்லியன் ரூபா விடுவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு ஆயிரத்து 187 மில்லியன் ரூபா பணம் அனுமதிக்கப்பட்ட நிலையில் 980 மில்லியன் ரூபா பணம் விடுவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட 5 மாவட்டங்களுக்கும் ஆயிரத்து 945 மில்லியன் ரூபா பணம் இந்த ஆண்டுக்காக இதுவரை கிடைக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நடப்பாண்டு நிறைவடைவதற்கு இன்னமும் 53 நாள்களே உள்ள நிலையில் நிதி இதுவரை கிடைக்காததால் ஒப்பந்தகாரர்களுக்கு நிதி உரிய காலத்தில் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுவதாக அதிகாரிகள் பலரும் தெரிவிக்கின்றனர். (4,105)



## முன்னாள் முதலமைச்சரின் படத்துடன் சுவரொட்டிகள்

கிளிநொச்சி, நவ. 7

'தமிழ்த் தேசியத்தின் காவலனே வருக' என்ற வாசகம் எழுதி முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் படத்துடன்கூடிய சுவரொட்டிகள் கிளிநொச்சியில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

'தமிழ்த்தேசியத்தின் காவலனே வருக வருக தடை தகர்த்து தமிழர் எம் உரிமை காக்க உங்களுடன் நாங்கள்' என்று அதில் எழுதப்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரில் ஒட்டப்பட்டுள்ள இவற்றுக்கு உரிமை கோருவோராக 'வன்னி மக்கள்' என்று எழுதப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி தமிழ் மக்கள் கூட்டணி என்ற புதிய கட்சியை விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார். (4,214)

வடக்கில்

# அமைதியாக இடம்பெற்ற தீபாவளிக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 7

வடக்கில் அமைதியான முறையில் தீபாவளி நேற்றுக் கொண்டாடப்பட்டது. இந்து ஆலயங்களில் காலையில்சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. ஏராளமானோர் வழிபாடுகளில் கலந்துகொண்டிருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர், செல்வச்சந்நிதி உள்பட பிரசித்தி பெற்ற, வரலாற்றுச் சிறப்புமிக்க பல கோவில்களிலும் மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் கோவில், முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மற்றும் கிளிநொச்சி, வவுனியாவிலும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன.

கடந்த வருடத்தைவிட இந்த பட்டாசு வெடிக்க வைப்பது மிகக் குறைவாகவே காணப்பட்டது.

மழையுடன் கூடிய காலநிலையால் பட்டாசுகள் தெருக்களில் விற்பனை செய்யப்படுவதை அரிதாகவே காணமுடிந்தது.

நகர் புறத்தை அண்டிய கடைகளில் புத்தாண்டு ஆடை வியாபாரம் நேற்றும் களை கட்டியிருந்தது.

வவுனியா மாவட்ட செயலகமும் பாதுகாப்பு படையினரும் இணைந்து ஏற்பாடு செய்த தீபாவளி திருநாள் நிகழ்வுகள் வவுனியா கந்தசுவாமி கோவிலில் நேற்று இடம்பெற்றது.

நாட்டில் அனைத்து மக்களும் இன, மத பேதம் கடந்து சகோதர பாங்குடன், சமாதானமாகவும், அசாதாரண சூழ்நிலைகள் நீங்க வேண்டும் என்ற தொனிப்பொருளில் பூசைவழிபாடுஏற்பாடுசெய்யப்பட்டது. வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம்.கனீபா, வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதி ஜெனரல் குமுது பெரகரா, வவுனியா மேலதிக மாவட்டச்செயலர் தி.திரேஸ்குமார் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள், வர்த்தக சங்கத்தலைவர் உட்படப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (4,7,56,110,127,17)



திருக்கேதீஸ்வரம்



செல்வச் சந்நிதி



நல்லூர்



# வவுனியா கல்லுமலை விநாயகர் கோவிலில் தொல்பொருள் திணைக்களத்தினர் அடாவடி

## பிரதேசத்தவர்களின் எதிர்ப்பால் பதற்றம் பொலிஸார் தலையிட்டுத் தடுத்தனர்

வவுனியா, நவ. 7

வவுனியா சமளங்குளம் கல்லுமலை விநாயகர் கோவிலில் தொல்பொருள் திணைக்களத்தினர் நேற்று அத்துமீறிக் கட்டுமானப் பணியில் ஈடுபட முற்பட்டனர். அங்கு பதற்றம் ஏற்பட்டது.

அரசியல்வாதிகள் மற்றும் பொலிஸார் அங்கு சென்று தொல்பொருள் திணைக்களத்தினருடன் பேசியதால் நிலமை சுமுக நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

1952ஆம் ஆண்டு கோவில் அமைக்கப்பட்டது. பிரதேச மக்கள் இன்றுவரை வழிபாடு செய்துவருகின்றனர். இந்தக் கோவில் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற் தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டடங்கள் காணப்படுகின்றன.

சில நாள்களுக்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தினர் கல், மணல் மற்றும் பல கட்டடப்பொருள்களை அங்கு கொண்டுசென்று இறக்கி நேற்றுக் கட்டுமான வேலைகளில் ஈடுபட்டனர்.

அதன்போதே பிரதேச மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் அங்கு பதற்ற மான சூழல் ஏற்பட்டது.

"இந்தக் கோவிலில் பரம்பரையாக நாம் வழிபட்டு வருகின்றோம். தற்போது இந்தக் கோவில் தொல்பொருள் திணைக்களத்துக்குச் சொந்தம் என்ற கூறி புத்தர் சிலையை அங்கு நிறுவ முயற்சிக்கின்றனர்" என்று பிரதேசவாசி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைத் தவிசாளர் து.நடராஜசிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று இது தொடர்பாகப் பிரதேச மக்களுடன் கலந்துரையாடினர்.

பின்னர் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் அலைபேசியில் கலந்துரையாடினர்.

அதன்பின்னர் தற்போதைய நிலை குறித்து வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டது.

அங்கு வந்த பொலிஸார் கோவில் பரிபாலன சபையினர், தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோரிடம் விசாரணை நடத்தினர். அதன்பின்னர் நிலமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

"இந்த இடம் அனுராதபுரகாலத்து புராதன சின்னங்கள். இவை அழியாமல் தடுப்பதற்காக இந்தச் சின்னங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தொல்பொருள் திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளனர்" என்று தொல்பொருள் திணைக்கள பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (4,110)

# ஈரான் மீதான பொருளாதாரத் தடை

## சில நாடுகளுக்குத் தற்காலிக தடைவிலக்கு

வோஷிங்டன்.நவ.7

ஈரான் மீது ஏராளமான பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது அமெரிக்கா. ஆனால், ஈரானிடமிருந்து பெட்றோலிய கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதற்குச் சில நாடுகளுக்குத் தற்காலிக விதிவிலக்கு அளித்துள்ளது.





ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்ததுடன், அந்த நாட்டிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்வனவு செய்யும் நாடுகள் மீதும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்திருந்தார். அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் படிப்படியாக விலக்கப்பட்ட அனைத்துத் தடைகளையும் ஈரான் மீது தற்போது ட்ரம்ப் ஒன்றுசேர விதித்துள்ளார். இதனால் அந்த நாட்டின் பொருளாதாரம் மிகப்பெரிய பின்னடைவைச் சந்திக்க நேரிடும் என பன்னாட்டு அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், ஈரானிடம் இருந்து பெட்றோலிய கச்சா எண்ணெயைக் கொள்வனவு செய்வதற்குச் சில நாடுகளுக்குத் தற்காலிக விலக்கு அளிக்க அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளதாக அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்ப்பியோ அறிவித்துள்ளார். இதுதொடர்பாக, வோஷிங்டன் நகரில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த மைக் பாம்ப்பியோ சீனா, இந்தியா, இத்தாலி, கிரீஸ், ஜப்பான், தென் கொரியா, தைவான் மற்றும் துருக்கி ஆகிய 8 நாடுகளுக்கு இந்தத் தற்காலிக விலக்கு அளிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

**பின்னணி**

ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்தை முறிப்பேன் என்றும் ஈரானுடனான அணு ஆயுத ஒப்பந்தம் பைத்தியக்காரத்தனமானது என்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக விமர்சித்து வந்தார். ஈரானுடன் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் 2015ஆம் ஆண்டில் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் செய்து இருந்தன. கடந்த மே மாதம் அமெரிக்கா அதிலிருந்து விலகியது. விலகிய கையுடன் ஈரான் மீது விலக்கி இருந்த பொருளாதாரத் தடையை மீண்டும் விதிப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். எப்போதும் இல்லாத வகையில் பொருளாதாரத் தடை இருக்கும் என்றும் எச்சரித்தார். ஈரான் மட்டுமின்றி அதனுடன் வர்த்தக தொடர்பு வைத்திருக்கும் நாடுகளுக்கும் இந்தத் தடை பாயும் என்றும் தெரிவித்தார். ஆனால் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த பிற நாடுகள் ஈரானுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன. ஈரானுடனான அணு சக்தி ஒப்பந்தத்திலிருந்து வெளியேறியவுடன் அந்த நாட்டின் மீது பொருளாதரத் தடைகளை அமெரிக்கா விதித்து வருகிறது. அதேசமயம் திட்டமிட்டபடி ஈரான் மீது கடுமையான பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்துள்ளது. இதை ஈரான் மக்கள் எதிர்த்துப் போராட்டங்களை நடத்தினர். அமெரிக்காவின் தடைகளை உடைப்போம் என ஈரான் அதிபர் கூறினார்.



## ஆப்கானிஸ்தானில் சோகம் ஒரே நேரத்தில் 12 குழந்தைகள் சாவு!

காபூல்.நவ.7

ஆப்கானிஸ்தான் மருத்துவமனையில் 12 குழந்தைகள் ஒரே நேரத்தில் புதுவித நோய்த் தொற்று ஒன்றின் காரணமாகச் சாவடைந்திருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் அங்கு சோகத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் நாட்டின் பன்ஷிர் மாகாணத்தில் உள்ள அவசர சிகிச்சைக்கான மருத்துவமனையில் புதிதாகப் பிறந்த 12 குழந்தைகள் ஒரே நேரத்தில் உயிரிழந்துள்ளன. இதற்கான காரணம் தெரியாமல் மருத்துவர்கள் குழப்பத்தில் உள்ளனர்.

ஆனால், இறந்த 12 குழந்தை களுக்கும் ஒரே மாதிரியான நோய்த் தொற்றுக்கான அறிகுறிகள் இருப்பதாகவும், அந்த நோய் குறித்து ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தலைநகர் காபூலில் உள்ள ஆராய்ச்சிக்கூடத்துக்கு ஆய்வு மாதிரிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

பிறந்த குழந்தைகளின் இந்தச் சாவுக்கு வேறு ஏதேனும் காரணங்கள் இருக்குமா? என்ற கோணத்திலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## கமேரூனில் கடத்தல்; தேடுதல் ஆரம்பம்

யவுன்ட்.நவ.7

கமேரூன் நாட்டில் பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் உள்பட 79 பேரைத் துப்பாக்கி முனையில் ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றாக விளங்குவது கமேரூன். அந்த நாட்டில் தனி நாடு கேட்டு 'ஆங்கிலோபோன்' என்னும் இயக்கத்தினர் போராடி வருகின்றனர். இந்த நிலையில், கமேரூனின் வடமேற்குப் பகுதித் தலைநகரான பமெண்டா அருகே நீவின் என்ற கிராமத்தில் உள்ள ஒரு பாடசாலைக்குள் துப்பாக்கிகள் சகிதம் நுழைந்த ஆயுததாரிகள் அங்கு படித்துக்கொண்டிருந்த 10 முதல் 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் 78 பேர் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர்களையும், வாகன ஓட்டுநர் ஆகியோரைத் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளனர். கடத்தி செல்லப்பட்டவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டனர், கடத்தியவர்களின் கோரிக்கைகள் என்ன என்பன போன்ற விவரங்கள் இதுவரை தெரியவரவில்லை. கடத்தலில் ஈடுபட்ட ஆயுததாரிகளைத் தேடும் பணியைக் கமேரூன் அரசு முடுக்கி விட்டுள்ளது.



## 16 மாணவிகள் கர்ப்பம் சிம்பாவேயில் முறைகேடு!

ஹராரே.நவ.7

சிம்பாவே நாட்டில் ஒரே பள்ளிக்கூடத்தைச் சேர்ந்த 16மாணவிகள் கடந்த 10மாதங்களில் கர்ப்பமாகியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. சிம்பாவேயின் சிருமன்சு மாவட்டத்தில் உள்ள ஓர்டன் டிரிவிட் பாடசாலை மாணவிகள் 16 பேரே இவ்வாறாகக் கர்ப்பமாகி உள்ளனர்.

இதில் சில மாணவிகள் பாடசாலைக்கு வராமல் எங்கோ ஓடி விட்டார்கள். கர்ப்பமான மாணவிகள் அனைவரும் ஏழ்மையான நிலையில் உள்ளவர்கள்.

பள்ளிக்கூடம் அருகில் உள்ள பகுதிகளில் சுரங்கத் தொழிலாளிகள் அதிகம் உள்ளனர். இவர்கள் அமெரிக்க டொலர்களை ஊதியமாகப் பெறுகிறார்கள். அந்தப் பணத்தை குறித்த ஏழை மாணவிகளுக்குக் காட்டி, அவர்களை மயக்கி முறைகேட்டுக்கு உட்படுத்தியிருக்கிறார்கள் என்றும் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## ஈராக்கில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் இராணுவச் சிப்பாய் உட்பட 6 பேர் சாவு



பக்தாத்.நவ.7

ஈராக்கில் ஆயுததாரிகள் நடத்திய தொடர் குண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் உட்பட 6 பேர் சாவடைந்துள்ளனர். ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஷியா பிரிவினர் அதிகம் வாழும் பகுதிகளைக் குறி வைத்து ஆயுததாரிகள் குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தியுள்ளனர். பாக்தாத்தின் வடக்குப் பகுதியில் உள்ள ஏடன் நகரில் பேருந்து நிலையத்தில் நடந்த குண்டு வெடிப்பில் 2பேர் உடல் சிதறிச் சாவடைந்தனர். மேலும் 6 பேர் பலத்த காயம் அடைந்தனர். அதே போல் தா்மியா என்கிற நகரில் இராணுவச் சிப்பாய்களின் அணிவகுப்பின் போது குண்டு வெடித்தது. இதில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். 2 சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர். அல் சாகா நகரில் அரச ஊழியர் ஒருவரின் மகிழுந்தில் ஆயுததாரிகள் வெடிகுண்டை வெடிக்கக் கூடிய ஆயத்த நிலையில் வைத்தனர். இதை அறியாமல் அவர் அந்த மகிழுந்தில் பயணித்த போது, குண்டுவெடித்துச் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார்.

சர்தார் நகரில் நடந்த குண்டு வெடிப்பில் 2 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் படுகாயம் அடைந்தனர். அதே போல் பாக்தாத்தின் வடகிழக்கு பகுதியில் அடுத்தடுத்து 2 பேருந்துகளில் குண்டு வெடித்ததில் 7 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு எந்த ஓர் அமைப்பும் உடனடியாகப் பொறுப்பு ஏற்கவில்லை.

## இனிப்புச் சாப்பிடும் போட்டியில் பங்குபற்றிய குத்துச்சண்டை வீரர் மூச்சுத்திணறிச் சாவு!

பியூனஸ் அயர்ஸ்.நவ.7

பாரம்பரிய இனிப்புப் பண்டத்தை யார் அதிகம் சாப்பிடுவது என்ற போட்டியில் கலந்து கொண்ட தென் அமெரிக்காவின் புகழ்மிக்க முன்னாள் குத்துச்சண்டை வீரர் மரியோ மெலொ மூச்சுத்திணறிச் சாவடைந்துள்ளார்.



ஆர்ஜெண்ரீனாவின் 'மிடியாலுனா' எனப்படும் பாரம்பரிய இனிப்புப் பண்டத்தை சாப்பிடும்போட்டி நடைபெற்றது. இதில் ஒரு போட்டியாளராகக் கலந்துகொண்ட மெலொ, நிகழ்ச்சி நடத்துபவரின் பின்புறம் திடீரென மூச்சுத்திணறிச் சரிந்து விழுந்தார். போட்டியின்போது இவ்வாறு ஏற்பட்டதால் பார்வையாளராக அங்கு நின்ற ஓர் மருத்துவர் வரவழைக்கப்பட்டார். பின்னர் பினாமரில் உள்ள உள்ளூர் மருத்துவமனைக்கு மரியா மெலோ கொண்டுசெல்லப் பட்டதர். அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மரியா மெலொ, 1980கள் மற்றும் 90களில் தென்அமெரிக்காவின் 'மிகு எடை' (ஹெவி வெய்ட்) சம்பியனாகத் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கூட்டமைப்பு - ஜே.வி.பி. இணைவு காலத் தேவை

மக்களாட்சித் தத்துவத்துக்கு முரணாகச் செயற்படும் சக்திகளுக்கு எதிராக ஒன்றிணைவது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் முடிவு செய்துள்ளன. இரண்டு கட்சிகளின் தலைவர்களும் கொழும்பில் கூடிப் பேசி இந்த முடிவை எட்டியுள்ளனர். பல கெட்டவற்றுக்குள்ளும் நடந்த நல்லது என்று இதை எடுத்துக்கொள்ளலாம்.

தலைமை அமைச்சராக இருந்தவரான ரணில் விக்கிரமசிங்கவை அவரது பதவியிலிருந்து நீக்கியமை, புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்சவை நியமித்தமை என்பனவற்றின் பின்னணியில் பெரும் அரசியல் சதி இடம்பெற்றுள்ளது என்று இந்த இரண்டு கட்சிகளும் கருதுவதால் அதற்கு எதிராக அணி திரள்வதற்கு முடிவெடுத்திருப்பதாக இரண்டு கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் இந்தச் செயல் மக்களாட்சிக்கு எதிரானதுடன் மக்களின் இறைமையைப் பாதிக்கும் செயலுமாகும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் மக்களாட்சிக்கு முரணான சதித்திட்டங்களை நாடாளுமன்றத்தில் ஓரணியில் நின்று எதிர்ப்பது என்றும் இரண்டு கட்சிகளும் முடிவு செய்துள்ளன. அதாவது மக்களாட்சிக்கு முரணாகப் பதவிக்கு வந்த மகிந்தராஜபக்சவை ஐக்கிய தேசியக்கட்சியுடன்சேர்ந்து இந்தக் கட்சிகள் தோற்கடிக்கப்போகின்றன என்பதே இதன் சுருக்கமான தெளிவு.

கொழும்பில் தோன்றியிருக்கும் அதிகாரப் போட்டியில் தாம் யார்பக்கமும் இல்லை, நடுநிலை வகிக்கப்போகிறோம் என்று முன்னதாகத் தெரிவித்திருந்தது ஜே.வி.பி. அதுபோன்றே ஐ.தே.க. மற்றும் சுதந்திரக் கட்சி இணைந்த கூட்டு அரசு தொடரவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் முன்னதாகத் தெரிவித்திருந்தது.

இந்தவகையிலானதத்தமது நிலைப்பாடுகளில் இருந்து வழுகி மகிந்தவை எதிர்ப்பது என்கிற நிலைப்பாட்டுக்கு இந்த இரண்டு தரப்புகளும் வந்துள்ளன. தாம் இப்போது எடுத்துள்ள நிலைப்பாடு எந்தவகையிலும் ரணிலுக்கான ஆதரவாக வெளிப்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருக்கின்றன இந்த இரண்டு கட்சிகளும். அதனாலேயே மக்களாட்சிக்கு முரணான, அரசியல் சதிக்கு எதிராக ஒன்றிணையப்போவதாக அவை அறிவித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான இந்த ஒன்றிணைவுக்கான அடித்தளத்தைக் கடந்த சில காலங்களாகவே அவதானிக்க முடிந்திருக்கிறது. ஜே.வி.பி. யாழ்ப்பாணத்தில் நடத்திய தொழிலாளர் தினக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பங்கேற்றது முதல் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நல்லுறவை வளர்ப்பதில் ஜே.வி.பியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிக ஈடுபாடு காட்டியது ஈறாக இதைக் காணலாம். அதன் தொடர்ச்சியாக மக்களுக்கு எதிரான சக்திகளுக்கு எதிராக இணைவதற்கு இவை இரண்டும் முன்வந்துள்ளன.


எந்த உள்நோக்கத்துக்காக இருந்தாலும் சரி, இலங்கையில் பலமான மூன்றாவது அரசியல் சக்தி ஒன்றின் தேவை மிகையாக உள்ள நிலையில் இந்த இணைவு அதற்கான உறுதியான அடித்தளத்தை இடும் என்று எதிர்பார்க்கலாம். எதிர்காலத்தில் முஸ்லிம் கட்சிகளும் மலையகக் கட்சிகளும்கூட இந்த மூன்றாவது அரசியல் சக்தியுடன் இணையும் ஒருநிலை வருமாக இருந்தால், கொழும்பின் எந்தவோர் ஆட்சியையும் தீர்மானிக்கும் தெளிவான சக்தியாக இந்த மூன்றாம் தரப்பால் வளர முடியும். ஒரு நிலையில் ஐ.தே.க. அல்லது சு.கவுக்கு மாற்றாக எழுச்சி பெற முடியும்.

எனவே இந்தப் பாதையில் இரண்டு கட்சிகளுமே எத்தகைய சவால்கள் வந்தாலும் தொடர்ந்து உறுதியாகப் பயணிப்பது காலத்தின் தேவை.



# இளைஞர்களின் பங்குபற்றுதல் அரசியலுக்கு அவசியமானது

சேரலாதன்



தமிழ் அரசுக் கட்சியை வழிநடத்துவதற்கு இளைஞர்கள் முன்வர வேண்டும் என அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா அறைகூவல் விடுத்துள்ளார். வடக்கின் அரசியல் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாக நினைக்கத் தோன்றுகிறது. எதிர்காலத் தலைவர்களாக உருவாகக் கூடிய வல்லமை இளைஞர்களிடத்திலேயே காணப்படுகின்றது. கூட்ட மைப்பின் முதன்மைப் பங்காளிக் கட்சியாகத் தமிழ் அரசுக்கட்சி விளங்குகின்றது. தந்தை செல்வாவினால் புனிதாமானதொரு நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சி அசையாத கொள்கைகளைக் கொண்ட தொண்டர்களைக் கொண்டுள்து. அந்தக் கட்சிக்கு வடக்கில் மட்டுமல்லாது கிழக்கிலும் மிகப்பெரிய ஆதரவுத் தளம் காணப்படுகின்றது.

### தமிழ் - முஸ்லிம்கள் ஒற்றுமையில் தந்தை செல்வாவின் பங்கு

வடக்கிலும் கிழக்கிலும் வாழுகின்ற தமிழர்கள் ஒத்தமனத்துடனும் ஒற்றுமையுடனும் காணப்படுவதற்குத் தமிழ் அரசுக் கட்சியே முக்கிய காரணமாகும். ஒரு கால கட்டத்தில் கிழக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்களும் செல்வாவின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுத் தமிழ் அரசுக் கட்சியில் இணைந்திருந்தனர். வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களும் முஸ்லிம் மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதில் தந்தை செல்வா அதிக அக்கறை காட்டினார். ஆனால் காலப்போக்கில் அவரது விருப்பம் ஈடேற முடியாது தடைப்பட்டு நிற்கின்றது. தமிழர்களும் முஸ்லிம்களும் திட்டமிட்ட வகையில் பிரிக்கப்பட்ட வரலாற்றை அனைவரும் அறிவார்கள்.

### கூட்டமைப்பு எதிர்கொண்டுள்ள நெருக்கடி

இன்றைய அரசியல் குழப்பநிலை காரணமாகக் கூட்டமைப்பு ஒரு சோதனையான கால கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கின்றது. வடக்குக் கிழக்கில் மட்டுமல்லாது தேசிய ரீதியிலும் பல்வேறு நெருக்கடிகளை அது எதிர்கொண்டு வருகின்றது. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மகிந்தவின் பக்கம் தாவி அமைச்சுப் பதவியொன்றைப் பெற்றுக்கொண்டுள்ளார். தமிழ்த் தேசியத்துக்கு வீழ்ந்த ஒரு பலத்த அடியாகவே இது கருதப்படுகின்றது. பணத்துக்காகவும் பதவிக்காகவும் இனவுணர்வை மறந்து சோரம் போவதைவிடக் கேவலமான செயல் வேறெதுவும் இருக்கமுடியாது. இது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற புளொட்டுக்கு மட்டுமல்லாது தமிழ் அரசுக் கட்சிக்கும் பலத்த அவமானத்தைக் கொடுத்துள்ளது. அத்துடன் கூட்டமைப்புக்கு அதிக நெருக்கடியையும் கொடுத்துள்ளது.



### இளைஞர்களை ஈர்ப்பதே புதிய கட்சிகளின் நோக்கம்


வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் புதிய அரசியல் கட்சியொன்றைப் பெரும் ஆரவாரத்துக்கு மத்தியில் ஆரம்பித்திருந்தார். இளைஞர்களைத் தனது பக்கம் ஈர்ப்பது அவருடைய முதன்மையான நோக்கமாகக் காணப்படுகின்றது. இளைஞர்கள் மூலமாகத் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு அவர் தீர்மானித்துள்ளதை அவரது செயல்கள் நிரூபிக்கின்றன. இந்த நிலையில்தான் மாவையின் அறிவிப்பும் வெளியாகியுள்ளது. மூப்புக் காரணமாகத் தளர்ந்த நிலையில் காணப்படும் அரசியல் தலைவர்களுக்கு ஓய்வு வழங்குவது அவசியமாகும். எதிர்காலத்தில் இளைஞர்கள் அவர்களது இடங்களை நிரப்புவதே சாலச் சிறந்த செயலாகும். அதற்குத் தகுதியும் அரசியல் நேர்மையும் கொண்ட இளைஞர்கள் துணிந்து முன்வர வேண்டும். தமிழ் அரசுக் கட்சியில் பல இளம் தலைவர்களை செல்வா உருவாக்கியதால் அவரது மறைவுக்குப் பின்னர் கட்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு முடிந்தது. ஆனால் இன்று அந்த நிலைமை இல்லையென்றே கூற வேண்டும். இதனால் தமிழ் அரசுக்கட்சியை எதிர்காலத்தில் கொண்டு செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுவிடும்.

### இளைஞர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்குவது அவசியம்

எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கும் தேர்தல்களில் இளைஞர்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டும். பழைய முகங்கள் தேர்தல்களில் திரும்பத் திரும்ப நிறுத்தப்படுவதைக் குறைத்துக்கொள்வது அவசியமானதாகும். இதனால் பதவிகள் தொடர்பான அனுபவங்களை இளைஞர்கள் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்துவிடும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இந்தத் தேர்தலில் கூட்டமைப்பு அதிக சவால்களை எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்பதை மறுத்துவிட முடியாது. இந்தத் தேர்தல்களில் இளைஞர்களை அதிகளவில் களமிறக்குவதன் மூலமாக அந்தச் சவால்களுக்கு ஈடுகொடுக்க முடியும். அதுமட்டுமல்லாது நேர்மையும் திறமையும் கொண்ட இளைஞர்கள் கட்சிக்குள் உள்வாங்கப்படுவது மக்களின் மத்தியிலும் நம்பிக்கையை ஏற்படுத்திவிடும். அத்துடன் இளைஞர்கள் புதிய சிந்தனைகளுடன் அரசியலில் ஈடுபட்டு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்வார்கள். தற்போது பணமும் பதவிகளும் அரசியலை நிர்ணயிக்கின்ற சக்திகளாக விளங்குவதை இளைஞர் சமுதாயம் அருவருப்புடன் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. அந்தத் தவறை இந்தச் சமுதாயம் புரியமாட்டாது என்று நம்பமுடியும்.

“எதிர்காலத்தில் இடம்பெறவிருக்கும் தேர்தல்களில் இளைஞர்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டும். பழைய முகங்கள் தேர்தல்களில் திரும்பத் திரும்ப நிறுத்தப்படுவதைக் குறைத்துக்கொள்வது அவசியமானதாகும்.”



நவரத்தினம் தனுஜா

# கால இழுத்தடிப்பு கட்சி தாவல்கள் வாசுவின் புதிய விளக்கம்

இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அதிரடியாக மேற்கொண்ட நடவடிக்கையால் தலைமை அமைச்சர் யார்? என்கிற குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குழப்பத்துக்குத் தீர்வு காணும் வாய்ப்பை ஏற்படுத்துகின்ற நாடாளுமன்ற அமர்வும் தள்ளிப்போய்க்கொண்டே இருக்கிறது. இதனால் தற்போது அதிகாரத்திலுள்ள தலைமை அமைச்சர் யார்? எனும் கேள்வி பதிலற்றதாகத் தொடர்கிறது. ரணில் விக்கிரமசிங்க எதிர் மகிந்த ராஜபக்ச என்கின்ற இரண்டு தரப்பு மோதல்களுக்கும் சபை அமர்வு தீர்ப்பளிக்கும் என்று கருதப்படுகின்ற நிலையில் அந்தச் சமை அமர்வு தள்ளிப்போய்க் கொண்டிருக்கிறது. இதனால் இழுபறிகளும், தலைமை அமைச்சர் யார்? என்கின்ற குழப்பமும், கட்சி உட்பூசல்களும், முரண்களும் நீடிக்கவே செய்கின்றன.

**19ஆவது திருத்தத்திலுள்ள குறைபாடு**


அரச தலைவர் மைத்திரிபாலவால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை, மைத்திரிபாலவே அந்தப் பதவியிலிருந்து நீக்கியிருக்கிறார். இந்தப் பதவி நீக்கத்துக்கு 19ஆவது திருத்தச் சட்டத்தின்படி தனக்கு அதிகாரமிருப்பதாக ரணிலைப் பதவி நீக்கியதற்குரிய தனது பக்க நியாயத்தை அவர் குறிப்பிடுவதாகச் செய்திகள் வெளியாகின்றன. குறிப்பாக அந்தத் திருத்தச் சட்டத்தின் சிங்கள வரைவிலேயே அரச தலைவருக்குரிய அந்த அதிகாரமிருப்பதாகவும் 19ஆவது திருத்தத்தின் ஆங்கில, தமிழ் மொழியாக்கங்களில் அதுபற்றித் தீர்க்கமாகக் குறிப்பிடப்படவில்லை என்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பொன்றில் அவர் கூறியிருப்பதாகவே அந்தச் செய்திகள் அடிபடுகின்றன. அரச தலைவரால் தலைமை அமைச்சரைத் தகுதிநீக்கம் செய்ய முடிவது பற்றிக் கூறுகின்ற அரச உயர் ஆவணமான ஒரு சட்ட மூலத்தை வெவ்வேறான மொழியாக்கங்களில் எப்படி வெவ்வேறு அர்த்தங்கள் அளிக்கும் வகையில் உருவாக்கிக் கொள்ள முடியும்? என்பது கேள்விக்குரியது. குறிப்பிட்ட வகைக் குறைபாடுடைய அவ்வகை ஆவணத்தைச் சரிசெய்யாமல் இருந்ததும் கவலைக்குரிய விடயமே.

**சபாநாயகர் எதிர் அரசு**

எது எப்படியிருப்பினும் அரச தலைவரால் தலைமை அமைச்சர் நீக்கப்பட்டுப் புதியதொருதலைமைஅமைச்சர்நியமிக்கப்பட்டுவிட்டார். இந்தக் குழப்பநிலைக்குத் தீர்வு காண்பதற்கு இப்போது இருக்கின்ற ஒரே வழியாகக் கருதப்படுவது நாடாளுமன்ற அமர்வைக் கூட்டி, நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் தெரிவு செய்கின்ற நபரைத் தலைமை அமைச்சராகப் பதவியிலமர்த்துவதே. ஆனால், தீர்க்கமான ஒரு முடிவைத் தரக்கூடிய இந்த நாடாளுமன்ற அமர்வும் தள்ளிப்போய்க் கொண்டே இருக்கிறது. சபாநாயகர் கருஜெயசூரிய நாடாளுமன்றைக் கூட்டு வதற்கக் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். ஆனால், அரச தலைவர் மற்றும் மகிந்த தரப்பிலிருந்து சபாநாயகரின் முயற்சிக்குத் தடைகள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. இந்த விட யத்தில் இழுத்தடிப்புக்களைச் செய்து வருகிறது தற்போதைய அரச அணி. சபாநாயகரான கரு ஜெயசூரிய ஐக்கியதேசியக் கட்சியைச் சார்ந்தவராயினும் அவருக்குரிய கடமையை மாத்திரமே அவரால் ஆற்ற முடியும். வாக்களிக்கும் தகுதிப்பாடற்ற அவர் நாட்டில் நிலவுகின்ற குழப்ப நிலைக்குத் தீர்வு காணவேண்டித் தன்னுடைய பணியைச் செய்ய முயன்றாலும், அரசால் இப்போது சமை முதல்வராகத் தினேஸ் குணவர்த்தன நியமிக்கப்பட்டிருக்கிறார். நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய இந்தப் பிரச்சினை மைத்திரி – மகிந்த அணி தமது பக்கத்தைப் பலப்படுத்தவேண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமது பக்கத்துக்குச் சேர்த்துக்கொள்வதற்கு எடுத்துக்கொள்கின்ற கால அவகாசம் காரணமாக இழுபறிப்பட்டு,காலம் நீடிக்கவே செய்கின்றது.

**ஜனநாயகத்துக்கு முரணான தாவுதல்கள்**

மக்களின் வாக்குகளால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள். நாடாளுமன்றத்தில் இத்தகையதொரு நிலை ஏற்படும்போது அதாவது தமக்கு வாக்களிக்கின்ற கடப்பாடு எழும்போது, இந்தச் சமயத்தில் மக்கள் தம்மைத் தெரிவு செய்து. எந்த நோக்கத்துக்காக வாக்களித்தார்களோ அதே நோக்கத்துக்காகவோ அல்லது மக்களின் நோக்க ஈடேற்றின் தொடர்ச்சியாகவோ தான் உறுப்பினர்கள் தமது வாக்குகளைச் செலுத்தவேண்டும். அதுவே அவர்களுடைய கடப்பாடும் ஜனநாயகமும். அன்றிப் பேரம் பேசுதல்களுக்கும், பணம், பதவிகளுக்கும் ஏலம் போய்விட முடியாது. இது ஜனநாயகத்துக்கு முரணானது. ஆனால், தலைமை அமைச்சர் யார் என்பதற்குத் தீர்வு காணவிருக்கின்ற நாடாளுமன்றைக் கூட்டுவதற்கான கால இழுபறிக்குக் காரணம் இந்தப் பேரம் பேசல்களாகவே இருக்கின்றன. அத்துடன் பேரம் பேசிப் பணத்துக்கு விலைபோகின்ற இவ்வகைச் செயலுக்குத் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரான வாசுதேவ நாணயக்கார புதிய விளக்கமொன்றை அளித்திருக்கிறார். கட்சி மாறுதல்கள் என்பது சாதாரண விடயம் என்றும், அதற்காக யாருக்காவது சன்மானங்கள் வழங்கப்பட்டால் அதை இலஞ்சமாகக் கருதக்கூடாது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். அதாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நடாளுமன்ற உறுப்பினர்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள இத்தகைய அரசியல் நெருக்கடியின்போது பணம் பதவிக்காகக் கட்சி தாவுவதை அவர் ஊக்கமளிக்கின்றார். மக்களுக்கு நல்லது செய்ய வேண்டிக் கட்சி தாவுகின்றவர்களாக இருந்தால்கூட அதில் பல விட யங்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டியிருக்கும். இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற குழப்ப சூழலில் சமயம் பார்த்துக் கட்சி தாவுகின்றவர்கள் தமக்குக் கிடைக்கின்ற பணத்தை இலஞ்சமாகக் கொள்ளக்கூடாது என்கிறார் வாசுதேவ. இத்தகைய அரசியல் பிரதிநிதிகளை நாடு கொண்டிருக்கும் வரையில் மக்களின் எதிர்காலம் கேள்வியுடனேயே தொடரும்.



## ஆசிரியருக்கான கடிதம்

# வலி தெற்குப் பிரதேச சபையினர் கவனத்தில் கொள்வார்களா…?

சுன்னாகம் பஸ் நிலையம் நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளது. போதிய இட வசதியும் உண்டு. ஆனால், 'டாக்டர் சுப்பிரமணியம்' வீதியிலுள்ள வாய்க்கால் மற்றும் பழைய பஸ் நிலையத்தின் கட்டட எச்சம் ஆகியவற்றின் அமைவு காரணமாக, வாகனங்களை, குறிப்பாக இலங்கைப் போக்குவரத்துச் சபையினரின் பஸ்களை பஸ் நிலையத்துக்குள் கொண்டு செல்வது மிகவும் சிரமமாக உள்ளது. பாடசாலை நாள்களில் காலையிலும், பிற்பகலிலும் (பாடசாலை மாணவர்கள் போக்குவரத்துச் செய்யும் நேரங்களில்) இந்தப் பகுதியில் பயணிப்பது அதிக சிரமமாக உள்ளது. முதன்மை வீதியூடாகப் பயணித்து பஸ் நிலையத்துக்குள் செல்கின்ற பஸ்ஸை ஒரே தடவையில் திருப்பி பஸ் நிலையத்துக்குள் கொண்டு செல்ல முடியாததால் மீண்டும் மீண்டும் பின்னாலும் முன்னாலு மாக நகர்த்தி பஸ்ஸை நேர்ப்படுத்திய பின்னரே பஸ் நிலையத்துக்குள் பஸ்ஸை நுழைக்க முடிகிறது. இதனால், 'டாக்டர் சுப்பிரமணியம்' வீதியில் பெரிய அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அத்தோடு சுன்னாகம் சந்தியில் போக்குவரத்துச் சமிக்ஞை விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அதற்கேற்ப சுன்னாகம் சந்திக்குப்போக வேண்டியவர்களும் சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை நோக்கிச்செல்வோம், இவ்விடத்தில் ஏற்படுகின்ற நெருக்கடியால் மிகவும் சிரமம்பட வேண்டியுள்ளது. இரண்டு வழிகளிலும் பயணிக்கவேண்டிய குறித்த இரண்டு தரப்புக்கள் இறுகிப்போகும் பட்சத்தில் சுன்னாகம் சந்தியிலுள்ள சமிக்ஞை விளக்கின்படி பயணிக்கவேண்டிய ஏனையவர்களும் நெருக்கடிக்குள்ளாகின்றனர்.

இந்தப் பகுதிக்குப் பொறுப்பான வலி தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர், செயலாளர் மற்றும் ஊழியர்கள் அனைவரும் சுன்னாகம் பஸ் நிலையத்துக்கு ஒரு தடவை வந்து இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பகுதியால் உண்டாகும் நெருக்கடியைப் பார்வையிடுவது நல்லது. பழைய எச்சத்தை உடைப்பதற்கும், அங்குள்ள வாய்க்காலைக் கொங்கிறீட் செய்து மூடுவதற்கு ஒரு பிரதேச சபையிடம் தொழில் நுட்ப வல்லுநர்களும் போதுமான பணமும் இல்லையென்று சொல்லிவிட முடியாது.

தமிழர்கள் தமக்குத் தேவையான சிறு சிறு வேலைகளைக் கூடச் செய்யமுடியாதிருக்கும் போது அதிகாரம் போதாது என்று சண்டைபிடிப்பதில் அர்த்தமில்லை. பஸ் நிலையச் சூழலைச் சீர்படுத்துவதன் மூலம் பல்வெறு அசௌகரியங்களையும் விபத்துக்களையும் நேர விரயத்தையும் தவிர்க்க முடியும். அதைவிட அந்தச் சூழலை அழகாகவும் வைத்திருக்க முடியும்

*தி.நிரோஜன், கந்தரோடை.*

உதயன்
புதன் பொய்கை
நவம்பர் 07, 2018
@UthayanPrint

உனக்குச் சிரிப்பதற்கும் பேசுவதற்கும் நேரம் இல்லையென்றால் நீ உன் வாழ்வில் முன்னேறிக் கொண்டிருக்கிறாய் என்று அர்த்தம்.

-அலெக்சாண்டர்



க.உமாமகேஸ்வரி

# தாய் மண்ணின் கூரையிலே போர்!

## விலங்கொடு கூடிய விடுதலை மட்டும் வேண்டவே வேண்டாம் பார்!



"ஈழத் தமிழர்களின் போர்க்கால வாழ்வியல் குறித்த பார்வை



சமுதாய அமைப்பில் மனிதன் பாதுகாப்புக் கருதி ஒருவருடன் ஒருவர் கூடி வாழத் தொடங்கினான். நாகரீக வளர்ச்சியும், மனிதர்களின் பகுத்தறிவுச் சிந்தனையும் வளர்ந்து வரும் இந்தக் காலகட்டத்தில், மனிதர்கள் கொஞ்சம் கொஞ்சமாக மனிதநேயத்தை இழந்து வருகின்றனர். எத்தகைய உயிருக்குப் பாதுகாப்புக் கருதி ஒன்றுபட்டு வாழத் தலைப்பட்டனரோ, அந்த உயிர்களைக் கொன்றும், ஒரு சமூக அமைப்பை அழித்தும் இடத்துக்காகவும், மண்ணுக்காகவும் சண்டையிட்டுக் கொண்டுள்ளனர். இந்தச் சண்டை ஒரு பெரும் போராக உருவெடுக்கிறது.

ஒன்றுபட்டுச் செழிப்புடன் வாழவேண்டிய மண்ணில், 'புதைகுழிகளும், குழிகளில் மிஞ்சிக்கிடக்கும் எலும்புக் கூடுகளுமே' ஏராளமாக உள்ளன. சிறிய குழந்தைகள் முதல் வயதுமுதிர்ந்த முதியோர் வரை கை, கால்களை இழந்து வாழ்ந்து வருகின்றனர்.

"மனிதன் தொடக்கத்தில் தனித்து வாழும் இயல்பு கொண்டவனாகத் திகழ்ந்தான். பின்னர் பாதுகாப்புக் கருதி மனிதர்கள் சிலர் ஒன்று சேர்ந்து, கூட்டம் கூட்டமாக வாழும் முறை தோன்றிய போதே சமூக அமைப்பு அல்லது சமுதாயம் என்ற ஒரு நிலை உருவானது. கட்டுப்பாடின்றித் திரிந்த நிலைமாறி, மக்கள் கூட்டம் ஒரு கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய சமுதாயமாக மாறிய நிலையில், அது தனக்கென ஒரு சில வாழ்க்கைப் பண்புகளையும், நெறிகளையும் கொண்டதாகத் திகழத் தொடங்கியது. தொடக்கத்தில் உணர்வு நிலையில் வாழத் தொடங்கிய மக்கள் கூட்டம் பின்னர் பகுத்தறியும் ஆற்றலால் அறிவு நிலையில் வாழத் தலைப்பட்டபோது சமுதாயம் என்ற ஒரு முழு அமைப்பு உருவானது" என்று வரையறை தருகிறார் மு.கலைவேந்தன்.

போர் என்றாலே கொடிய தன்மையுடையது. பல உயிர்களைப் பறிக்கக் கூடியது. தமிழர் தாயகத்தில் அத்தகைய போர் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்த பின்னும் ஓயாமல் நடைபெற்றது போர்.

போரில் குழந்தைகள், பெண்கள், வீரர்கள் என ஏராளமானோர் தங்களது உயிரை இழந்துள்ளனர். போர்க்களம் சென்று போரிட்டு உயிர் நீத்தோர் பலர். இன்பம் மறந்தவர்களாய் இரவு வேளைகளில் கூட நிம்மதியின்றி, தூக்கம், பசி என அனைத்தையும் இழந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

*தாய் மண்ணின் கூரையிலே போர்*
*சேய்கூட மாய்கின்ற சோகமய கோலங்கள்!*

*(வேதா கவிதைகள்)*

என்ற வேதாவின் கவிதை வரிகளிலே புலப்பட்டுவிடும் போரின் அனைத்துத் தன்மைகளும். 'துப்பாக்கிச் சூடு, வெடிகுண்டு வீச்சு, ஷெல் மழை' எனப் பலவகைகளில் மனித உயிர்கள் மலினப்படுத்தப்பட்டன. வீதிகள் தோறும் குருதியும் சதையுமாய், வீதிகள் தோறும் கை, கால்களை இழந்தவர்களுமாய் காட்சியளித்தது ஈழமண். உயிரைக் காத்துக் கொள்ள இப்போதுமாய் வாழ்க்கைப் போராட்டம் நடத்துகின்றனர்.

*துப்பாக்கி வெடிச்சத்தம்*
*தொடர்ந்து கேட்கின்றது!*
*பதுங்கு குழிகளில்*
*மனிதர்கள் தவிக்க*
*தொடர்கிறது அந்த இரவு!*
*மானிடத்தின் மரணத்திற்கு*
*இரத்தம் தோய்ந்த இந்த*
*தெருச் சடலங்கள்*
*கற்பிழந்த பெண்கள்*
*கருகிக் காய்ந்த குழந்தை!*
*(விலங்கிடப்பட்ட மானுடம்)*

கவிஞர் சுல்பிகாவின் இந்தக் கவிதை வரிகள், விடிகின்ற பொழுதுக்குள் மீளாத துன்பங்களைத் தருகின்ற போரின் கொடிய நடவடிக்கைகளை எடுத்தியம்புகின்றன. இரவு விடிவதற்கு முன், கற்பை இழந்து உயிரைத் துறந்த பெண்கள், குண்டுகளின் தீப்பசிக்கு இரையான குழந்தைகள் ஆகியோரது சாவைப் பறைசாற்றுகின்றன.

கொட்டும் குருதியுமாய், உடலில் உறுப்புகளை இழந்தவர்களாய் பலர் நடைபிணமாக இறந்தும் வாழ்கின்ற துயரமான நிலையில் பொழுதுகளைக் கழித்துக் கொண்டிருக்கின்றனர். விலை மதிப்பற்ற மனித உயிர்களைப் பறித்தெடுத்து செழிப்பான ஈழபூமி வெற்றுடல்கள் கிடக்கின்ற பிணக்காடாக மாற்றிவிட்டது.

*எங்கள் பெண்களும் குழந்தைகளும்*
*அப்பாவி இளைஞரும்*
*துப்பாக்கிகள் மீதும்*
*அதிகாரங்கள் மீதும்*
*வெறிகொண்டவர்களால் மட்டுமே*
*சூழப்பட்டுள்ளனர்!*
*கிழக்கிலும் மேற்கிலும்*
*வடக்கிலும் தெற்கிலும்*
*தீவின் திசையெங்கும்*
*வெறிகொண்டவர் அலைகின்றனர்!*


*(மை கவிதைத் தொகுதி)*


என்ற தர்மினியின் கவிதை, போரால் மக்கள் எந்தத்திசையிலும் எங்கு சென்றாலும் நிம்மதியற்ற, சாத்தியமற்ற வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதைக் கூறுகின்றது.



**போரில் பெண்களுக்கு ஏற்பட்டக் கொடூரச் செயல்கள்**

போர்ச் சூழலில் சிங்கள இராணுவப்படையினர், இரவு வேளைகளில் தமிழ் மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள பெண்களை வன்புணர்வுக்குள்ளாக்கினர்.





அவர்களின் 'கற்பை' சூறையாடினர். அந்த அரக்கர்களின் செயல் அவற்றோடு மட்டும் நின்றுவிடவில்லை. அந்தப் பெண்களின் மீது மேல் வெடி வைத்து அவர்களது உயிரையும் பறித்துவிட்டனர்.

இந்தவகையில் உயிர் வாங்கப்பட்ட பல பெண்களின் கொடூரக்கொலையை கவிஞர்கள் தங்களுடைய கவிதைகளில் பதிவு செய்துள்ளனர்.
இத்தகைய மிகப் பெரிய கொடுமை தமிழர் தாயகத்தில் இடம்பெற்றது. எவரும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத அளவுக்கு நடைபெற்றுள்ளது.

*என்னை உற்றுக் கிடக்கும்
அம்மிருகம் துயின்று
நாட்கள் பலவாகியிருக்கும்!
அதன் கண்கள்
நான் அறியாததோர்
மிருகத்தின் கண்களைப் பறைசாற்றிற்று!
அவற்றின் பாலைத் தாகம்
அறியாப் பாஷையை
எனக்குள் உணர்த்திற்று!
அழகி மன்னம்பேரிக்கும்
அவள் கோணேஸ்வரிக்கும்
புரிந்த வன்மொழியாகத்தான்
இது இருக்கும் என
அவதியாய் எட்டிக் கடந்து போனேன்!*

(பெயல் மணக்கும் பொழுது)

ஒவ்வொரு விடியலும் ஏதேனும் ஒரு வகையிலாயினும் வாழ்வுக்கு இனிமை சேர்க்கக் கூடியதாக அமைதல் வேண்டும். மக்கள் அனைவரும் ஒன்றுகூடித் திருவிழாக்கள், பண்டிகைகள் போன்றவற்றைக் கொண்டாடி மகிழ்வுடன் வாழ வேண்டும். 'இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கை' என்பது வாழ்க்கையின் உண்மைக் கருத்தாகும். ஆனால் ஈழத் தமிழ் மக்கள் வாழ்க்கையில் துன்பத்தையும் துயரத்தையும் மட்டுமே அனுபவித்துக் கொண்டுள்ளனர். இன்பம் கையில் எட்டாக் கனியாக மாறி விட்டது.

### தொடரும் சாவுகள்

போரில் உறவுகளை இழந்து தான் மட்டும் தனித்து வாழும் வாழ்வை ஒவ்வொருவரும் வாழ்ந்து வருகின்றனர். குருதியையும் சதைகளையும் பார்த்துக் கொண்டே வாழ்க்கை நகர்கிறது. துன்பங்கள் நீங்கி விடுதலை கிடைக்கும் என்று எத்தனை நாட்களுக்கு நம்பிக் கொண்டு இன்னும் வாழ்வது என்று விழித்துக் கூறும், வாழ்வு பற்றிய நம்பிக்கையற்ற தன்மை,

*இரத்த வாடைகளைச் சுவாசித்துக் கொண்டு
இயலாமைகளைச் சுமந்து கொண்டு
துரோகங்களைச் சகித்துக் கொண்டு
இரத்தக் கண்ணீர் வழித்தபடியே
இன்னும் எத்தனை நாட்களுக்கு
அப்பாவிப் பொதுமக்களாய்
புதிய பூமியை எதிர்பார்த்தபடியே வாழ்வது?*

(மை கவிதைத் தொகுப்பு)

எனக் கூறும் கவிஞர் மரியாவின் இந்தக் கவிதை மூலம் புலப்படுகிறது. இரவும் பகலும், சாவின் தடையங்களும், வன்மத்தின் நிழல்களுமே சூழ்ந்து கொண்டு நகரும் தருணங்களில் இனிய வாழ்வை உணர்வது கனவிலும் கூட சாத்தியமற்றது.

### நிச்சயமற்ற வாழ்க்கை

*இரத்த சமூகத்தின் தொப்புள்
கொடிக்கு
துப்பாக்கி நீட்டப்படும் போது!*

(பெயல் மணக்கும் பொழுது)


எனக் கூறும் கவிஞர் சிவரமணியின் கவிதை வரிகளே மனிதாபிமானம் அற்ற மனிதனின் மிருகச் செயலால் இன்னொரு மனித உயிர் அழியக் கூடிய தன்மை, பிறக்கும் பொழுதே சிதறடிக்கப்படும் வாழ்க்கையைப் பறைசாற்றுகின்றன.
வாழ்க்கைப் போராட்டத்தில் உயிர் வாழ்வதே போராட்டமாக, ஒவ்வொரு நொடிப்பொழுதும் வாழ்வதற்கான சாத்தியமற்ற தருணமாக நகர்ந்துள்ளது மக்களின் வாழ்வு. மனித வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகளாகக் கருதப்படுவது உணவு, உடை, உறையுள். ஆனால் தமிழ் மக்கள் உண்ண உணவின்றி, புதைகுழிகளே இல்லங்களாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். எந்த நேரமும் குண்டுகள் வீசப்படலாம், ஷெல் மழை பொழியப்படலாம் என்ற வாழ்க்கைப் புலத்தில் வாழ்ந்துள்ளனர். இப்படியான ஓர் வாழ்வை வாழ்ந்த அவர்களது நிலையைப் பற்றி எடுத்துரைக்கிறார் கவிஞர் உமையாள்.

*பதுங்கு குழியும் கூடப்
பாதுகாப்பற்றதே
எமது இன்றைய வாழ்வு.
அஸ்தமித்த சூரியன்
அரங்கிற்கு வருமுன்பே
குண்டு கொட்டிச்
செல்லும் கொலை விமானங்கள்
நாளைய இருப்பு பற்றிய
நம்பிக்கையற்ற நடமாடும்
உயிர்ப் பிணங்கள் நாம்!*

(பெயல் மணக்கும் பொழுது)

உயிரிழந்தவர்களைத்தான் மண்ணைத் தோண்டிக் குழிக்குள் புதைப்பது மரபு. அந்தக்குழிகள் பாதுகாக்கப்படும் விதத்தில் முள்வேலி அல்லது கல்லறை எழுப்பப்படுவது வழக்கம். ஆனால் புதை குழிகளுக்குள் இருக்கும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் துப்பாக்கிச் சூட்டுக்கு மட்டுமே தப்பி உயிர் பிழைக்க இயலும். குண்டுகள் கொட்டும் பொழுது அவர்களது நிலை பாதுகாப்பற்றதே. ஈழ மண்ணில் தமிழர்களின் வாழ்விடமே புதை குழிகளாகவும், அதில் உயிருடன் பதுங்கி இருப்பதனாலும் உயிர்வாழும் பிணங்கள் எனக் குறிப்பிடுகின்றார் கவிஞர்.

### அகதிகளின் துயரம்



புலம்பெயர்ந்து அகதிகளாகச் செல்லும் மக்கள் அகதி முகாம்களில் பெரும் துயரங்களை அனுபவிக்கின்றனர். கிராமங்களில் ஆடு, மாடுகளை அடைத்து வைப்பது போன்று, அனைவரும் ஒரே இடத்தில் கம்பிவேலிகளுக்கிடையில் பாதுகாப்பும், சுகாதாரமும் அற்ற நிலையில் கட்டுப்பாட்டில் அடைபட்டு வாழ்ந்துள்ளனர். குழந்தையை இழந்த பெற்றோரும், பெற்றவர்களை இழந்த குழந்தைகளும் துன்பப்படும் வாழ்க்கை. உண்ண உணவும், உறங்க இடமுமின்றி அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குக் கூட வழியற்ற நிலையில் வாழ்கின்றனர். அகதி முகாமில் குழந்தையின் இருப்பைப் பதிவு செய்ய, அந்தக் குழந்தையிடம் அம்மாவைப் பற்றிக் கேட்ட பொழுது அங்குள்ள அனைவரின் முகத்தையும் பார்த்துத் தன் தாயைத் தேடும் குழந்தையின் பரிதாபமான நிலையைக் கவிஞர் ஆதிலட்சுமி சுட்டிக்காட்டுகிறார்.

*அகதிமுகாம் வாசலிலே
அம்மாவைத் தேடு என்று
ஐ.நா. கூறியதாமே!
யாரைப் பார்த்தாலும்
அம்மாவாய்த் தெரிகிறதா?*

(பெயரிடாத நட்சத்திரங்கள்)

அகதிமுகாமில் பசித்த வயிறுகளுக்கு உமிழ்நீரையே உணவாக மாற்றிக்கொண்டு, உறவுகளுடன் கலக்கும் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். பல்வேறு இடங்களிலிருந்து வந்து அகதி முகாம்களில் தஞ்சம் கொண்ட ஈழத் தமிழர்கள் ஒவ்வொருவரும் தாம் கொண்ட துயரங்களை மனவெளியில் புதைத்து, இன்பங்களைப் பரிமாறியவர்களாய் வாழ்ந்து ஆறுதல் அடைந்து கொள்கின்றனர்.
நம்பிக்கையின்றி வாழ்க்கையை வாழ்பவன் மரணத்தை வேண்டித் தன்னுடைய கல்லறை நோக்கிச் செல்பவன் ஆகிறான் எனக் கூறலாம். ஈழத் தமிழர்கள் பல இன்னல்களைக் கடந்து நம்பிக்கையோடு போராடி வாழ்வை வெற்றிபெற வேண்டும் என்பதைக் கவிதைகள் எடுத்துரைக்கின்றன. மேலும் சிலர் மட்டும் விடுதலையை அனுபவித்து, பலர் துன்பப்படும் நிலையை ஒழித்து அனைவரும் விடுதலை பெறுவோம் என்ற நம்பிக்கையைச் சிவரமணியின் கவிதை தருகிறது.

*இன்பமும் இளமையும்
இழந்து நின்றோம்!
ஏக்கமும் ஏழ்மையும்
சுமந்து வந்தோம்!
நாம் எல்லாம் இழந்தோம்
எனினும்
வேண்டவே வேண்டாம்
எங்களில் சிலரது விடுதலை
மட்டும்
விலங்கொடு கூடிய
விடுதலை மட்டும்
வேண்டவே வேண்டாம்!
விலங்குகளுக்கெல்லாம்
விலங்கொன்றைச் செய்தபின்
நாங்கள் பெறுவோம்
விடுதலை ஒன்றை!*

(சொல்லாத சேதிகள்)

ஒன்றுபட்ட வாழ்ந்து செழிப்புடன் வாழ வேண்டிய மண்ணில், புதைகுழிகளும், குழிகளில் மிஞ்சிக்கிடக்கும் எலும்புக்கூடுகளுமே ஏராளமாக உள்ளன. சுற்றங்களையும், சொந்தங்களையும் இழந்து, நிச்சயமற்று வாழும் துயர் மிகுந்த தங்களது வாழ்வில் துன்பம் நீங்குவது எப்பொழுது என்ற ஏக்கம் கவிஞர்களின் கவிதைகளில் வெளிப்படுகிறது.
போர் ஏற்படுவதற்கு முன்பு இயல்பான மனித வாழ்வில் ஏற்படக் கூடிய இன்பங்களையும் சிற்சில துன்பங்களை மட்டுமே கலந்தொரு அழகான வாழ்வையும், போருக்குப் பின்னரான வாழ்வு துன்பங்களை மட்டும் தருவதாய் பழைய நினைவுகளைச் சுமந்து கொண்டு ஆறுதல் அடையும் நிலையை கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

# ‘வலிகாமத்தின் வர்ணங்கள்’


## மாணவர்களின் படைப்பாற்றல் ஆளுமைகளை வெளிப்படுத்திய கண்காட்சி நிகழ்வு

மனிதன் தனது உணர்ச்சிகளை வெளிப்படுத்திக்கொள்வதற்கானகளமாகக்கலையை பயன்படுத்திக்கொண்டான். கலைகளில் முதன்மையானதாக அல்லது ஆரம்பகாலக் கலை வெளிப்பாடாக ஓவியக்கலையைக் குறிப்பிடுகின்றனர். மனிதன் கொண்டிருந்த வேட்டையாடல் வாழ்வியல் முறைமையில் குகை வாழ்க்கை என்ற காலப்பகுதியை ஓவியக் கலையின் வெளிப்படுத்தல்களுக்கான ஆரம்பகாலமாகக் கொள்ள முடியும்.

வேட்டையாடலின் போது தமக்கு விலங்குகளால் நேர்ந்த கொடுமைகள் அல்லது விலங்குகளில் இருந்து தம்மை எந்தவகையில் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற வகையில் உள்ளத்து உணர்வுகளைத் தமது கலை வர்ண்ணங்களாக வெளிப்படுத்தினர். அந்த வெளிப்படுத்தல்கள் காலங்களை கடந்து வெவ்வேறு பரிமாணங்களுடனும், புதிய கோணங்களிலும், அணுகு முறையுடனும் தற்காலத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.







ஓவியக்கலையைக் காண்பியல் ரீதியான புரிதலுடன் தொடர்புடைய வகையிலும், அதைக் கண்டுணர்ந்து கொள்கின்ற வகையிலும் அதன் தரத்தையும், வெளிப்படுத்துகை உணர்வையும் உய்த்துணர்ந்து கொள்ளமுடியும். உள்ளத்து உணர்வுகளையும், பௌதீக ரீதியான பரிமாணங்களையும் தமது மனவெளியின் நிலைப்பாட்டில் நின்று காண்போரின் புரிதலுக்கு, காண்பியப்பெறுமானத்தைக் கொடுப்பதில் ஓவியக் கலைக்கு நிகர் ஓவியக் கலையே தான். தொழில்நுட்பத்தின் மேம்பட்ட வளர்ச்சிப் பாதையில் இருந்து விலகித் தம்மை வேறு திசையில் வளப்படுத்திக் கொண்டபோதிலும் இந்தப் படைப்புக்களின் புரிதல்சார் பெறுமானங்கள் கனதியானவை.

அந்தவகையிலே வலிகாமம் வலய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களது படைப்புக்களைத் தாங்கிய வகையில், ‘வலிகாமத்தின் வர்ணங்கள்’ எனும் காண்பியக்கலைகளது கண்காட்சி கடந்த மாதம் 12 ஆம் மற்றும் 13 ஆம் திகதிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் ஆசிரியர்களது ஆக்கங்கள், மாணவர்களது ஆக்கங்கள் எனும் வகையில் காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மாணவர்களது ஆக்கவியல் சார்ந்த காண்பியல் பெறுமானங்களை இந்தக் கண்காட்சியின் ஊடாகக் கண்டு கொள்ள முடிந்தது.

மாணவர்களிடையே உள்ள படைப்பாற்றல் ஆளுமைகளை இவ்விதம் வெளிக்கொண்டுவருவதன் மூலம் அவர்களிடையே உள்ள ஆளுமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ளமுடியும் என்பதைத் தாண்டி, அவர்களிடையே உள்ள உணர்வு வெளிப்பாட்டின் வடிகால்களைச் சீர் செய்துகொள்ளவும், ஆக்கபூர்வமான நல்ல பொழுதுபோக்குச் சிந்தனை வெளியைக் கட்டமைத்துக் கொள்ளவும் முடியும்.

திறமைகள் உள்ள போதும் அவற்றை வெளிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்ற போது தான் ஆளுமையுள்ள தலைமைத்துவ தேசத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். இதற்குப் பாடசாலை மட்டங்களில் கண்காட்சியை ஒழுங்கமைக்க வேண்டும். இவை மாணவ நிலை சார் படைப்பாளிகளுக்கான அங்கீகாரமாக அமையும். இந்தக் காண்காட்சி நிகழ்வு வலய ரீதியாக நடத்தப்பட்டபோது பல பாடசாலைகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது என்பதைத் தாண்டி, வலய ரீதியான வெளிப்படுத்தலை வெளிக்கொணர்வதற்கு மாண்வர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டமை சிறப்புக்குரிய விடயமாகும்.

இத்தகைய கண்காட்சியை ஒழுங்கமைப்பதற்கான களத்தை ஏற்படுத்திக் கொடுத்த வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், சித்திரபாட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்களை வழிப்படுத்தி ஆக்கங்களை வழங்கிய சித்திரப்பாட ஆசிரியர்கள், படைப்புக்களைக் காட்சிப்படுத்திய மாணவர்கள் என அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

# பண்பாட்டுப் பெருவிழா!







வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள்திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையோடு வவுனியா மாவட்ட கலாசார பேரவையும், மாவட்டச்செயலகமும் இணைந்து நடத்திய, வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா கடந்த புதன்கிழமை நகரசபை கலாசார மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், வவுனியா மாவட்ட மாவட்டச் செயலர் எம்.ஐ. கனீபா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நிகழ்வில் கலைஞர்கள், ஊடகவியலாளர் எனப் பல்துறைசார்ந்தோர் குறிப்பாக, ‘வாத்தியம், இசை நாடகம், ஓவியம், ஊடகம், ஒளிப்படம், நடிப்பு, இலக்கியம்’ ஆகிய துறைகளில் சாதித்தோர் ‘வவுனியம் மூத்த கலைஞர் விருது’ மற்றும் ‘வவுனியம் கலை இளவல் விருது’ வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். கலைஞர்களுக்கான விருதுகளை முதன்மை விருந்தினர் வழங்கி வைத்தார்.

வவுனியா பிரதேச செயலர் பிரிவில்; வாத்தியத் துறை சார்ந்து மாசிலாமணி தர்மகுலசிங்கம், இசைநாடகத் துறை சார்ந்து கனகசபை கோபால் ஆகியோர் வவுனியம் மூத்த கலைஞர் விருதை பெற்றுக்கொண்டனர்.

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில் நாடகத் துறை சார்ந்து மரியம்பிள்ளை செபமாலை, வாத்தியத் துறை சார்ந்து மாணிக்கம் மயில்வாகனம் ஆகியோர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். வவுனியா பிரதேசசெயலர் பிரிவின் கீழ் ஓவியத் துறை சார்ந்து சிங்காரம் சந்திரகாசன், ஊடகத்துறை சார்ந்து கிருஸ்ணகுமார் வசந்தரூபன் ஆகியோருக்கு வவுனியம் கலை இளவல் விருது வ்ழங்கப்பட்டது.

செட்டிகுளம் பிரதேசசெயலர் பிரிவில் ஒளிப்படத் துறை சார்ந்து ஜேசுதாசன் ஜெபநேசன், நடிப்புத் துறை சார்ந்து சொக்கலிங்கம் கிருசன் ஆகியோரும், வவுனியா சிங்கள பிரதேச செயலர் பிரிவில் இசைத் துறை சார்ந்து சதுனிகா மதுகாசினி ஜினதாச, இலக்கியத் துறை சார்ந்து கயானி மதுசிகா ஆகியோரும் விருது வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர். அதுவிதமே வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் இசைத் துறை சார்ந்து ஸ்ரீராம் ரயிதன், நாடகத் துறை சார்ந்து திருநாவுக்கரசு புஸ்பகரன் ஆகியோர் விருது வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் உதவி மாவட்டச் செயலர் ந.கமலதாஸ், பிரதேச செயலர் கா.உதயராசா, கலாசார திணைக்கள உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(ஓ 110)

# கேதார கௌரி விரதம்!

## மகத்துவங்கள் நிறைந்த இறை திருத்தொண்டு

அபிராமவல்லி

கேதார கௌரி விரதம் என்பது சிவபெருமானை நினைத்து ஆண்டுதோறும் கடைப்பிடிக்கப்படும் முக்கியமான விரதம் ஆகும். கேதார கௌரி விரதம் மேற்கொண்டே பார்வதி தேவி சிவபெருமானின் இடப்பாகத்தைப் பெற்றார். அதனால் இறைவன் அர்த்த நாரீஸ்வரர் ஆனார் என்று கூறப்படுகிறது. இது ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாத வளர்பிறையான தசமி (விஜய தசமி) தொடக்கம் ஐப்பசி மாதம் தீபாவளி அமாவாசை வரை எல்லாமாக 21 நாள்கள் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இந்த விரதத்தை ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி எல்லோரும், எல்லா வயதினரும் கடைப்பிடிக்கின்றனர். இந்த விரதத்தின் போது இறைவனுக்குப் பிரசாதமாக அதிரசம் எனப்படும் பச்சரிசி மா, வெல்லம் கலந்து தயாரிக்கப்படும் பதார்த்தம் முதன்மை நைவேத்தியமாகப் படைக்கப்படுகிறது.

வழிபாட்டின்போது நோன்புக் கயிறு வைத்து வழிபட்டு இறுதியில் நோன்பிருக்கும் எல்லோருடைய கைகளிலும் அது அணியப்படுகிறது. இந்த வழிபாடு வீடுகளிலும், ஆலயங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது. வழிபாட்டின்போது உணவருந்தாமல் விரத முறை பின்பற்றப்படுகிறது.

இந்த விரத முறையை மேற்கொள்வதால் கணவன்-மனைவி ஒற்றுமையு



டன் வளமான வாழ்க்கை வாழ்வார்கள் என்றும், நற்புத்திரப்பேற்றுடன் இணை பிரியாத சுக வாழ்வு கிடைக்கும் என்றும், நல்ல எண்ணங்கள் ஈடேறும் என்றும் கருதப்படுகிறது.

**நாமகரணம்!**

'கேதாரம்' என்ற சொல்லுக்கு இமய மலைப் பகுதியைச் சார்ந்த வயல் பகுதி என்பது பொருளாகும். கௌரி எனப் போற்றப்படும் பார்வதி அம்மை கேதாரப் பகுதியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை நினைத்து மேற்கொண்ட விரதமாகையால் இது கேதார கௌரி விரதம் என அழைக்கப்படுகிறது.

இந்த விரத முறையைப் பின்பற்றி உமாதேவியார் சிவனுடன் ஐக்கியமானார் என்பதே இதன் சிறப்பாகும். இதற்கு, 'கௌரி நோன்பு, அம்மன் விரதம், கௌரிக் காப்பு நோன்பு' என பல நாமகரணங்கள் வழங்கப்படுகிறது.

**கதையாடல்!**

முன்னொரு சமயம் பிருங்கி முனிவர் என்ற ஒரு சிவபக்தர் இருந்தார். அவர் ஒரு சமயம் திருக்கயிலை சென்றார். அங்கு சிவபெருமான் உமாதேவியுடன் தேவசபையில்வீற்றிருந்தார். அம்மையப்பரைக் காண்பதற்கு மகா விஷ்ணு, பிரம்மா ஆகியோர் தத்தம் தேவியருடனும், தேவேந்திரன், தேவர்கள், கந்தவர்கள், சிவனடியார்கள் என எல்லோரும் வந்திருந்த னர். எல்லோரும் அம்மையப்பரை வலம் வந்து வணங்கினர். பிருங்கி முனிவர் மட்டும் வண்டு உருவம் எடுத்து, சிவனை மட்டும் வலம் வந்தார். அதைக் கண்ட உமாதேவி சிவபெருமானிடம், "ஐயனே ஏன் பிருங்கி தங்களை மட்டும் வண்டு உருவம் கொண்டு வலம் வந்தார்?" என்று வினவினார்.

அதற்குச் சிவபெருமான், "தேவி பிருங்கி பரமபதத்தை வேண்டுபவன். உலக சுகத்தை வேண்டுபவன் அல்ல. அதனால் பரமபதத்தை அருளும் என்னை மட்டும் வலம் வந்தான். இதில் தவறேதும் இல்லை." என்று கூறினார். அதனால் கோபம் கொண்ட பார்வதி தேவி தனது அம்சமான சக்தியை பிருங்கியிடம் இருந்து எடுத்துவிட்டார். இதனால் பிருங்கி முனிவர் நிற்க முடியாமல் தடுமாறினார். அது கண்ட சிவபெருமான் பிருங்கிக்குக் கோல் ஒன்றைக் கொடுத்தார். அதைப் பிடித்துக் கொண்ட பிருங்கி முனிவர் மீண்டும் சிவபெருமானை மட்டும் வணங்கிவிட்டுச் சென்றார். இந்தச் செயலால் கோபம் கொண்ட பார்வதி தேவி கயிலையை விட்டு அகன்றார்.

கௌதம முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றார். பார்வதிதேவியின் வரவால் 12 ஆண்டுகள் வறட்சியிலிருந்த முனிவரின் ஆசிரமம் செழிப்படைந்தது. செழிப்பைக் கண்ட முனிவர் செழிப்புக்குக் காரணம் பார்வதி தேவியின் வரவுதான் என்பதை உணர்ந்து பார்வதி தேவியை வரவேற்றார். அங்கு சில காலம் தங்கிய பார்வதி தேவி சிவபெருமானை விட்டு நீங்கியதற்காக வருந்தினார்.


மீண்டும் சிவனை அடையவும், எப்பொழுதும் சிவத்துடன் இணைந்து இருப்பதற்கான வழியைக் கூறுமாறும் கௌத முனிவரை வினவினார்.

அப்பொழுது கௌதமர், "புரட்டாதி மாத வளர்பிறை தசமியிலிருந்து (விஜய தசமி) ஐப்பசி அமாவாசை (தீபாவளி அமாவாசை) வரை எல்லாமாக 21 நாள்கள் சிவனை நினைத்து நோன்பிருக்க வேண்டும். வழிபாட்டில் இறைவனுக்கு அதிரசம், அப்பம், வடை, சக்கரைப்பொங்கல் ஆகியவற்றைப் படைத்து தீப தூபம் காட்டி மனதால் சிவனை நினைத்து வழிபாடு மேற் கொள்ள வேண்டும். விரத நாள்களில் பிரசாதமாகப் படைத்த அதிரசத்தை மட்டும் உண்டு விரதம் மேற்கொள்ள வேண்டும். விரதத்தின் முடிவில் இறைவன் தோன்றி விரும்பியதைத் தருவார்." என்று கூறினார்.

அம்மையும் சிரத்தையுடன் பயபக்தியாக விரதத்தைக் கடைப்பிடித்தார். விரதத்தின் முடிவில் சிவபெருமான் தோன்றி அம்மையின் விருப்பத்தைக் கேட்டார். அதற்கு அம்மை, "தங்களை ஒருபோதும் பிரியாது இருக்க வேண்டும்" என்று கேட்டார்.

அதற்கு இறைவனார், "தேவி யாம் உமக்கு எமது உடலின் இடப்பாகத்தை அருளினோம். இன்று முதல் சக்தியானது சிவத்துடன் கலந்து சிவசக்தி யாகும். இனி உன்னை யாராலும் என்னிடமிருந்து பிரித்துப் பார்க்க இயலாது" என்றுகூறிதேவியின்மனவருத்தத்தைப் போக்கினார். பின் தனது உடலின் இடப்பாகத்தை அம்மைக்கு அளித்து அர்த்தநாதீஸ்வரர் ஆனார்.

அப்போது அம்மை "ஐயனே இந்த விரதத்தைக் கடைப்பிடிக்கும் எல்லோருக்கும் சகல நன்மைகளுடன் ஐஸ்வர்யத்தையும் தரவேண்டும். கணவன் மனைவி ஒற்றுமைக்கு இந்த நிகழ்வு எடுத்துக்காட்டாகவும், உலகில் ஆணும் பெண்ணும் சமம் என்பதை எல்லோரும் உணர இந்த நிகழ்வு உதாரணமாகவும் திகழ வேண்டும்" என்று வேண்டினார். சிவபெருமானும் அவ்வாறே அருளி னார்.



**விரதம் கடைப்பிடிக்கும் முறை**

விரத முறையில் வழிபாடானது வீடுகளிலோ அல்லது கோவில்களிலோ மேற்கொள்ளப்படுகிறது. எல்லாமாக 21 நாள்கள் இந்த விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. முதலில் கலசத்தில் தேங்காய் வைத்து கும்பம் தயார் செய்யப்படுகிறது. பின் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைக்கப்படுகிறார். வழிபாட்டில் பூக்கள், அதிரசம், அப்பம், சக்கரைப் பொங்கல், நோன்புக் கயிறு ஆகியவை படைக்கப்படுகின்றன.

நோன்புக் கயிறானது 21 இழைகளால் பின்னப்பட்டுள்ளது. முதலில் விநாயகருக்கு தீப, தூபம் காட்டி வணங்கப்படுகிறது. பின்பு கும்பத்தில் அம்மையப்பரை ஆகவாகனம் செய்து, தீப தூபம் காட்டி சிவன் மற்றும் சக்திக்கான பாடல்கள் பாடப்பட்டு வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. வழி பாட்டின் ஒவ்வொரு நாளும் நோன்புக் கயிற்றில் முடிச்சு ஒன்று போடப்படு கிறது. விரத நாள்களில் பகலில் உணவு உண்ணாமல் இரவில் படையலிடப்பட்ட அதிரசம் மட்டும் உட்கொள்ளப்படுகிறது.

இவ்வாறாக 21 நாள்கள் விரதம் பின்பற்றபடுகிறது. 21 ஆம் நாளான அமாவாசை அன்று முழுவதும் உணவு உண்ணாமல் வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. அன்றைய தினம் பிரதோச வேளைக்கு பின் நோன்புக் கயிறு கட்டப்படுகிறது. நோன்புக் கயிறு முழங்கைக்கும் தோளுக்கும் இடைப்பட்டப்பகுதியில் அணியப்படுகிறது.

ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் நோன்புக் கயிற்றை அணிகின்றனர். முந்தைய வருடம் கட்டப்பட்ட நோன்புக்கயிறு பூஜையின் மறுநாள் நீர்நிலைகளில் போடப்படும்.

**விரத மகிமை**

இந்த விரதத்தைப் பின்பற்றியே மகாவிஷ்ணு வைகுண்டத்தைப் பெற்றார் எனவும், பிரம்ம தேவன் படைப்புத் தொழிலை பெற்றார் எனவும், தேவேந்திரன் பொன்னுலகை ஆண்டு வெள்ளை யானையை பெற்றார் எனவும் கருதப்படுகிறது.

திருமணமான பெண்கள் கணவரின் தீர்க்க ஆயுள் வேண்டியும், தம்பதி ஒற்றுமைக்காகவும் குடும்ப சுபிட்சம் வேண்டியும் இந்த விரத முறையை மேற்கொள்கின்றனர். கன்னிப் பெண்கள் நல்ல கணவர், நிறைந்த திருமண வாழ்க்கை, நற்புத்திரர்கள் வேண்டி விரதத்தை மேற்கொள்கின்றனர்.

இந்த விரதத்தை கடைப்பிடிப்பதன் ஊடே கணவன் மனைவி ஒற்றுமை, நல்ல வளமான திருமண வாழ்க்கை நற்புத்திரர்கள், நல்ல எண்ணங்கள் ஈடேறுதல் ஆகியவை ஏற்படுவதாகக் கருதப்படுகிறது. நாமும் இந்த விரத முறையை மேற்கொண்டு குடும்ப ஒற்றுமையுடன் இறையருளால் இம்மை மறுமைகளில் சுக வாழ்வு வாழ்வோமாக!








# இன்றைய நாள்

**மேடம்:** வாழ்வில் பெற்ற நன்மைகளை எண்ணி மனம் மகிழ்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு அளவில் முன்னேற்றம் பெறும். ஆதாயம் உயரும். விரும்பிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள்.

**இடபம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் நற்செயலை மனமுவந்து பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும். பணியாளர்கள் சலுகை பெறுவர்.

**மிதுனம்:** திட்டமிட்ட பணியில் மாற்றம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பாதுகாப்பது நல்லது. சராசரி பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** மனதில் அன்பும் கருணைத் தன்மையும் அதிகரிக்கும். தன்னைச் சார்ந்தவர்களுக்கு உதவுவீர்கள். தொழில் வியாபாரம் சிறப்பான முறையில் இருக்கும். பணப்பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு.

**சிங்கம்:** உதவி பெற்றவர் நன்றி மறந்து செயல்படுவர். தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** இஷ்ட தெய்வ அனுகிரகம் புதிய நன்மைகளை பெற்றுத் தரும். தொழிலில் உருவான தாமதம் விலகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். உடல் நல ஆரோக்கியம் பலம் பெறும்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணப் பரிவர்த்தனையில் பாதுகாப்பு அவசியம்.

**விருச்சிகம்:** வாழ்வில் முன்னேற புதிய வழி பிறக்கும். பிறர் வியக்கும் வகையில் பணிகளை மேற்கொள்வீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். உபரி பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** இனிய பேச்சு நண்பரின் மனக் கஷ்டம் தீர உதவும். பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை அபரிமிதமான வளர்ச்சி பெறும்.

**மகரம்:** பணிகள் நிறைவேற கூடுதல் கவனமும் உழைப்பும் அவசியம். தொழிலில் உருவாகிற இடையூறை நண்பரின் உதவியால் சரிசெய்வீர்கள்.

**கும்பம்:** மனதில் குழப்பமான சூழ்நிலை ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை புதிய நம்பிக்கை தரும். பெண்களுக்கு கூடுதல் செலவு ஏற்படும்.


**மீனம்:** நண்பரிடம் ஆன்மிக கருத்துக்களை பேசுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை இலக்கு குறித்த காலத்தில் நிறைவேறும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

# ராய்லட்சுமி இரு வேடங்களில் நடிக்கும் 'சின்ட்ரல்லா'



நடிகர்களுக்குச் சமமாக நடிகைகளும் தங்களது கதாபாத்திரத்துக்கு முக்கியத்துவம் வாய்ந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து நடித்து வருகின்றனர்.

நயன்தாரா, அனுஷ்கா, திரிஷா, கீர்த்தி சுரேஷ் என முன்னணி நடிகைகள் பலரும் தற்போது நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள கதைகளில் நடித்துத் தமது திறமையை வெளிப்படுத்தி உள்ளனர். அவர்கள் நடித்த படங்கள் வசூல் சாதனைகளும் நிகழ்த்தி உள்ளன. இதனால் கதாநாயகிகளை முதன்மைப்படுத்தும் கதைகளை இயக்குநர்கள் உருவாக்கி வருகிறார்கள். இந்த வரிசையில் தற்போது ராய்லட்சுமியும் இணைந்துள்ளார். எஸ்.ஜே.சூர்யாவிடம் பணிபுரிந்த வினோ வெங்கடேஷ் இயக்கும் திகில் படத்தில் ராய்லட்சுமிக்கு முன்னணி கதாபாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. திகில் படமாக உருவாகும் இந்தப் படத்துக்கு 'சின்ட்ரல்லா' என்று பெயர் வைத்துள்ளனர்.



Kana Praba

## உங்கள் தொலைக்காட்சி வழங்கும் தீபாவளிச் சிறப்புத் திரைப்படங்கள்

மைத்திரி நடிப்பில் "சதி லீலாவதி"

மகிந்த அதிரடி ஆட்டத்தில் "இதற்குத் தானா ஆசைப்பட்டாய் பாலகுமாரா"

ரணில் சோக நடிப்பில் "வசந்த மாளிகை"

கோத்தபாய வழங்கும் "கட்டப்பாவைக் காணோம்"

நாமல் ராஜபக்ச வழங்கும் "மை டியர் குட்டிச்சாத்தான்"

டக்ளஸ் நடிப்பில் "உன்னைத் தேடி வருவேன்"

சுமந்திரன் அதிரடி நடிப்பில் "எவனா இருந்தா எனக்கென்ன"

சம்பந்தனின் "மாயாண்டி குடும்பத்தார்"

வியாழேந்திரன் மாறுபட்ட வில்லனாகத் தோன்றும் "நான் மகான் அல்ல"

கருணா இயக்கி நடிக்கும் "ஒரு கைதியின் டயரி"

வாசுதேவநாணயக்காரா குணச்சித்திர நடிப்பில் "பணம் பத்தும் செய்யும்"


ஆறுமுகம் தொண்டமான் நடிப்பில் "மானஸ்தன்"

வடிவேல் சுரேஷ் வழங்கும் "நாகராஜ சோழன் எம்.எல்.ஏ"

ஹிஸ்புல்லாவின் வழக்கமான நடிப்பில் "வேலைன்னு வந்துட்டா வெள்ளைக்காரன்"

அணி பாயத் தயாராக இருக்கும், குழம்பியிருக்கும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உறுப்பினர்களின் புதுமையான நடிப்பில் "பொறந்த வீடா புகுந்த வீடா"







# அறிவு பொதுவானது

எதையும் ஆராயாது, கண்டபடி முடிவுகளைச் சொல்வது, குடிகாரன் பிதற்றுவதற்குச் சமமானது. ஆய்வு மேற்கொள்பவர்கள் அதிகம் படிக்க வேண்டும்; அனுபவசாலிகளுடன் பழகிப் பேசவும் வேண்டும். ஆய்வுகளில் சிலசமயம் தொய்வு ஏற்பட்டாலும் மனம் சோராது இயங்கி, முன்செல்ல வேண்டும்.

ஒழுங்காகத் தெளிவாக ஆராய்ந்து, மேற்கோளுடன் சொல்வதே முறையானது.

ஆன்மிகம் பற்றிப் பேசும்போது, அவதானம் தேவை. ஆன்மிகம் உணர்வு சார்ந்தது. கருத்துச் சொல்லும்போது, அவதானம் அவசியம். பிறமதங்களையும் பின்பற்றும் மக்களையும் எக்காரணம் கொண்டும் கேலி கிண்டல் செய்து, தவறான கருத்துகளைக் கூறுவதை அறவே அகற்றுக.

எல்லாமே எமக்குத் தெரியும் என்ற மமதையில் பேசற்க. அறிவு பொதுவானது. எல்லோருக்கும் அது உண்டு.

இணுவில் கந்தசுவாமி கோவில்

# சத்குரு சங்கார திரிசதி ஹோமமும் கந்தசஷ்டி பெருந்திருவிழாவும்

## 08.11.2018 - 14.11.2018



உலகின் சகல ஜீவராசிகளையும் படைத்தும், காத்தும், அழித்தும் உலக இயக்கத்தை நிகழ்த்திவருகிறான் இறைவன். தன்பாலும், தான் படைத்த உயிர்கள் பாலும் அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் இறைவனிடம் எமது சுய நலன்களுக்காக செய்யும் பிரார்த்தனைகளைத் தவிர வேறு எதையும் இறைவனுக்காக நாம் செய்வதில்லை. அந்தக் குறையை தீர்ப்பதற்காக செய்யப் படுவதே ஹோமங்கள் ஆகும். முற்காலங்களில் உலக நன்மைக்காகவும். இறைவனாக நாம் காணும் இயற்கையைக் குளிர்விப்பதற்காகவுமே ஹோமங் கள் நடத்தப்பட்டுவந்தன. ஆயினும் இன்று தனிப்பட்டவர்களின் நலனுக்காக வும் ஹோமங்கள் ஆற்றப்பட்டு வருகின்றன. ஹோமங்களின்போது பல்வேறு இயற்கைப் பொருள்களை கொண்டு வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து வெளி வரும் புகையானது காற்றில் கலந்து அந்தச் சூழல் முழுவதுமாக பரவி இயற்கை யில் ஒரு சுகந்தத்தை, மாற்றத்தைக் கொடுக்கின்றது. இக்கருத்தை நவீன விஞ்ஞானமும் ஏற்றுக்கொண்டுள்ளது. அது மட்டுமல்லாது ஹோமங்களின் போது உச்சரிக்கப்படும் பல்வேறுபட்ட மந்திரங்களின் ஒலி அசைவுகள் அந்த ஹோமம் எதற்காக செய்யப்படுகிறது என்ற நோக்கத்தை நிறைவேற்றி வைப்ப தாக அமைந்துள்ளது.

முருகனுடைய சடாக்ஷர மூல மந்திரத்தை மாற்றி மாற்றி உருச் செபித்து ஆறு உருவத் தோற்றத்தையும் மனக் கண் முன்னே நிறுத்தி நிகழ்த்தப்படுகின்ற சத்ரு சம்ஹார ஹோமமானது வசீயம், மோகனம், ஆகர்ஷணம், ஸ்தம்பனம், உச்சாடனம், மாரணம் ஆகிய 6 வகையான செயல்களையும் கைகூட வைக்கும் தகைமை வாய்ந்தது. இவை மட்டுமன்றி ஒவ்வொருவரும் தமது உடலில் இருக்கும் நோய் பிணிகளிலிருந்து விடுபட்டு நீண்ட ஆயுள் ஆரோக்கியங்களை அடைவதுடன், தமது மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சத்துருக்களாகிய அகங்காரம், மமகாரம், காமக்ரோதம், பொறாமை, வஞ்சகம், சூது முதலான வற்றை அடியோடு சம்ஹரித்து புனிதர்களாக பக்தனை மாற்றி இதயக் கோவிலுக்குள் முருகப் பெருமான் ஞானப்பிரகாசமாக நினைத்த சன்மார்க்கத்தை நிறைவேற்றும் ஆற்றலைத் தருவார் என்பது உறுதி.

எனவே இக் கந்தஷஷ்டி காலமாகிய இப் புண்ணிய காலத்தில் முருகப் பெருமானுடைய சந்நிதியில் நடைபெறும் ஹோம வழிபாட்டிலும் கலந்து பேரானந்தத்தில் அமிழ்த்தும் சிவ சாகித்திய முக்திப் பேற்றை அனைவரும் பெறுவோமாக..

*" சர்வே ஜனாஹ சுகினோபவந்து "*

தர்மகர்த்தா சபை
இணுவில் கந்தசுவாமி கோவில்

(CS/21057)(10)



YARL HOSPITAL

யாழ். திருநெல்வேலியில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட

# யாழ் வைத்தியசாலை

24 மணிநேர சேவை

## தற்போது அதிநவீன வசதிகளுடன் கூடிய சத்திர சிகிச்சைக் கூடம்

**✓ Laproscopy Surgery** (வீடியோ மூலம் சத்திரசிகிச்சை)

- -Hernia (ஹேணியா) — 130,000/=
- -Appendectomy (அப்பன்டிஸ் சத்திரசிகிச்சை) — 110,000/=
- -Hysterectomy (கருப்பை அகற்றல்) — 130,000/=
- -Cholecystectomy (பித்தப்பை அகற்றல்) — 130,000/=
- -Lap & Dye Examination — 55,000/=
- -LRT (கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை) — 70,000/=

**✓ Gyn & Obs** (பெண்ணியல் சத்திரசிகிச்சைகள்)

- -LRT (கர்ப்பத்தடை சத்திரசிகிச்சை) — 55,000/=
- -Vaginal Hysterectomy (குடல் இறக்க சீர் செய்தல்) — 110,000/=
- -Abdominal Hysterectomy (கர்ப்பப்பை அகற்றல்) — 120,000/=
- -D & C (கர்ப்பப்பை சுத்திகரித்தல்) — 39,000/=

**✓ Laser Surgeries**

- -Laser Vericose Surgery (வரிகோஸ் சத்திரசிகிச்சை)

**✓ Eye Laser Treatment**

நீரிழிவு நோயினால் தாக்கமடைந்த விழித்திரையின் நரம்பு பகுதி மற்றும் குருதி கசிவை நிறுத்துவதற்கான லேசர் சிகிச்சை

**Video Colonoscopy** (வீடியோ மூலம் (மலவாசல்) பெருங்குடல் பரிசோதனை) 50,000/=

**Video Endoscopy** (வீடியோ மூலம் உணவுக்கால்வாய் பரிசோதனை) 12,500/=

அக்ரகாரா, அரச/ ETF தனியார் நிறுவனங்களின் காப்புறுதி அங்கீகாரம் பெற்றது.

**✓ General Surgeries**

- -Vericosevein (வரிகோஸ் சத்திரசிகிச்சை) — 95,000/=
- -Hernina (ஹேணியா சிகிச்சை) — 95,000/=
- -Appendectomy (அப்பண்டிஸ் சத்திரசிகிச்சை) — 80,000/=
- -Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்) — 130,000/=
- -Parotidectomy (உமிழ் நீர் சுரப்பி அகற்றல்) — 110,000/=
- -Anal Fissure — 45,000/=
- -Anal Fistula — 45,000/=
- -Haemorrhoids (Piles) Surgery — 55,000/=

**✓ E.N.T சத்திர சிகிச்சைகள்**

Nose மூக்கு

- -Septoplasty (மூக்கு சீராக்கல்) — 90,000/=
- -Septorhinoplasty — 170,000/=
- -Endoscopic Sinus Surgery — 95,000/=
- -Endoscopic Nasal Polypectomy — 85,000/=

Ear காது

- -Myringoplasy (காது சௌவு துவாரம் அடைத்தல்) — 80,000/=
- -Mastoidectomy — 120,000/=

Larynx & Throat தொண்டை

- -Tonsilectomy / Adenoidectomy — 75,000/=
- -Phono Surgery (குரல் மாற்ற சத்திரசிகிச்சை) — 60,000/=
- -Thyroidectomy (தைரொட்டு சுரபி அகற்றல்) — 130,000/=


மேலே குறிக்கப்பட்ட கட்டணங்கள் அனைத்தும் சத்திரசிகிச்சை கூடம், வைத்திய நிபுணர்கள், அத்துடன் ஒரு நாள் இணைந்த குளியலறையுடனான தங்கும் விடுதி அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 222 3533, 021 222 1011, 0777 781 005

மேலதிக தகவல்களுக்கு: 077 310 7685

(SUP/1506)(10)

## மரண அறிவித்தல்



தோற்றம்: 14.06.1958 மறைவு : 05.11.2018

### தியாகராசா தில்லைராசன்

காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் வவுனியா, பூந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தி.தில்லைராசன் கடந்த (05.11.2018) திங்கட்கிழமை வவுனியாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா - தேவமங்கை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசசேகரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஞானபூபதியின் அன்புக் கணவரும் சசிகரன், கலைமகள் (கனடா), கேதீசன் (UK), தர்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதிமலர், திருக்குமரன் (கனடா), ஜெனனி (UK) ஆகியோரின் மாமனும் தர்னிகாவின் அன்புப் பேரனும் தேவராசா, தர்மராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வத்தளை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (07.11.2018) புதன்கிழமை மாலை 4.00 மணிமுதல் 7.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (08.11.2018) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஈமைக்கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக வத்தளை கெரவலப்பிட்டிய இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**103/A, வெலியமுனை றோட், ஹேகித்த, வத்தளை.**

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**

(CJ3207I)(10)

**T.P: 077 111 7012, 077 038 6396**

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 01 . 1952

மறைவு 07 . 11 . 2012

### அமரர் ராஜினி தேவதாஸ்


எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த
உங்களை நாம் எண்ணாத
நாளில்லையம்மா!

**சேர்ச் லேன், திருநெல்வேலி கிழக்கு, கல்வியங்காடு**

என்றும் நினைவில் **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி தர்சீலன்



பூதர்மடம் கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்சீலன் கடந்த (05.11.2018) திங்கட்கிழமை அகால மரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பிமற்றும் குண பூபதி (இராசன்) தம்பதியரின் அன்புமகனும் தனுஜா, தர்சிகா ஆகியோரின் அன்புச்சகோதரரும் கமல்ராஜ், ஆதுஷன் ஆகியோரின் மைத்துனரும் கவிதாஸ், சாருஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2018) புதன் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**

## கார் விற்பனைக்கு

Zen Estilo, VXI (Maruthi Suzuki)

2005 ஆம் ஆண்டு மொடல்

80 000 Km ஓடியது.

KJ - XXXX

**தொடர்பு - 077 353 0368**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், கனடா PR, 21.10.1988, சதயநட்சத்திரம், கும்பராசி, கிரகபாவம் 61 (வித்தியாசம் 25 வரை எதிர்பார்க்கலாம்), உயரம் 5' 6" உடைய மணமகனுக்கு நற்குணம் உடைய அழகிய படித்த மணமகள் தேவை. (மணமகன் கொழும்பு வந்துள்ளார்)

**077 978 0205 (தந்தை)**

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.08.1936

மறைவு 07.11.2005

### அமரர் பிலேந்திரன் ஜேம்ஸ்

அன்பான அப்பாவே
ஆண்டுகள் பதின்மூன்றானாலும்
உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சைவிட்டகலாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS/21055)(10)





செலான் சேமிப்புக் கணக்குகளுக்கு
இருமடங்கு வட்டி வழங்கும் மூன்று மாத போனஸ் வரம்

நடைமுறையில் உள்ள சேமிப்புக் கணக்குகளின் மீதித் தொகையை அதிகரியுங்கள்.
அல்லது புதிய வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பியுங்கள்.

போனஸ் வட்டிச் சலுகை 2018 ஒக்டோபர் 01 முதல் டிசெம்பர் 31 வரை செல்லுபடியாகும் என்பதுடன் செலான் சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு மாத்திரம் செல்லுபடியாகும்.

செலான் சேமிப்பு

011 200 88 88

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

## தீபாவளி...

கொக்குவில் பகுதிகளில் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

கல்வியன்காடு பேச்சியம்மன் ஆலய வழிபாடுகளை முடித்து கால் நடையாக வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணின் 13 பவுண் தாலிக் கொடியை, உந்துருளியில் வந்த இரு இளைஞர்கள் அறுத்துச் சென்றுள்ளனர். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சிவன் ஆலயத்தில் தீபாவளி வழிபாடுகளை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணிடம் 3 பவுண் சங்கிலியை அறுத்துக் கொண்டு இளைஞர் ஒருவர் தப்பித்துச் சென்றுள்ளார். சங்கிலியைப் பறிகொடுத்தவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆலய வழிபாட்டுக்குச் செல்வதற்காக கொக்குவில் பகுதியில் சென்று கொண்டிருந்த மூதாட்டியை உந்துருளியில் வந்த இளைஞர்கள் தள்ளி வீழ்த்தினர். அவர் அணிந்திருந்த 2 பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். (5,105)

## அதிகவேகத்தால்...

குப்பிளானில் இருந்து ஏழாலை நோக்கிப் பயணித்தபோதே உந்துருளி கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. அதிக வேகமே விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

விபத்துத் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ற-21,26)


## பிக்குகள்...

கொழும்பு 7இல் உள்ள புதிய நகர மண்டபத்தில் நேற்று மாலை கூடிய பிக்குகள் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

(ற-5)

# மரண அறிவித்தல்கள்

## ச.க. இராசா



இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ச.க. இராசா என அழைக்கப்படும் இராசையா கடந்த (03.11.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - மாணிக்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற முத்துலிங்கம் - இரத்தினம் தம்பதிகளின் மூத்தமருமகனும் பொன்மலரின் அன்புக்கணவரும் வளர்மதி (U.K), ஐங்கரன் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் குமரகுரு (MSc in Biomedical Science, U.K), சாந்தமலர் (ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும் ஆகீஷன் (U.K), ஏரகன் (U.K), இலம்போதரன் (யா /கொ. இ. க), புராந்தகி (உடுவில் ம.க.) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**இணுவில் கந்தசுவாமி கோவிலடி, இணுவில்.**

**தி. வேணுகானன் (பொறியியலாளர், பெறாமகன்) 077 486 4079**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்

தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற 04 மாணவர்களையும் 100% சித்திபெற்ற ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



| | |
|---|---|
| ஜெ. தேனுசன் - 184 | ம. தமிழினி - 101 |
| ப. கபிசாந் - 176 | செ. கலையரசன் - 100 |
| பி. மிதுர்சிகா - 171 | ச. பிரதீபன் - 92 |
| சி. கதிர்நிலா - 171 | சு. சுபர்தன் - 74 |
| ஆ. ஆர்த்திகா - 150 | |
| சி. சங்கீதன் - 134 | |
| ச. தமிழ்ச்செல்வி - 126 | |
| கே. ஜசினா - 124 | |
| ஜெ. தேனுசன் - 123 | |
| நே. தர்மினா - 112 | |
| யோ. துஷ்யந்தினி - 107 | |



பரீட்சையில் மாணவர்கள் 100% சித்திபெற ஊக்குவித்து வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் : பாடசாலைச்சமூகம்.

Congratulations!

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19 | 07 |
| 01 | 11 |
| 1950 | 2012 |

## சவிரிமுத்து தோமஸ்

மறப்பதற்கு உங்களை மனதிலும் வைக்கவில்லை
இழப்பதற்கு உங்களை இதயத்திலும் வைக்கவில்லை
உயிராய் வைத்திருக்கிறோம் அப்பா உங்களை
மறைந்து போனாலும் என்றும் மறந்து போகாத
அன்பைத் தந்த தந்தையே
நாம் இறந்து போகும் வரை உம் அன்பு எம்முள் வாழும்



**இல.18, சேமக்காலை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS/21059)(10)

## திருமதி

## சுவக்கீன்பிள்ளை சூசானம்மா (புஷ்பம்)



மாத்தளன், இரணைப்பாலையைப் பிறப்பிடமாகவும் 4ஆம் கட்டை, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுவக்கீன்பிள்ளை சூசானம்மா(புஷ்பம்) கடந்த(05.11.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - வெரோணிக்கா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுவக்கீன்பிள்ளை (சலமோனின்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை, யோன்பிள்ளை மற்றும் மலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான பூமணி, றோஸ்மணி மற்றும் வசந்தன் (இத்தாலி), இராக்கினி, ஜெறோம், பாலதாஸ், வவா, ஜீவா (அமெரிக்கா), வதனா, ரவி (பிரான்ஸ்), பாஸ்கரன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயன், அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ஜெனிற்றா (அமெரிக்கா), ராணி, இன்பராணி, குமார், புனிதா (பிரான்ஸ்), தேவராசா, றெலி ஞானம் (இத்தாலி) ஆகியோரின் மாமியாரும் கௌசலா, சுபா (பிரான்ஸ்), சுமிதா (டென்மார்க்), ஜெலிதா (அமெரிக்கா), விஜிதா, றொசான், றொசானி (இங்கிலாந்து), றிச்சேட் (இத்தாலி), கஜானி (அமெரிக்கா), பிரதீபன் (அமெரிக்கா), சஞ்சீவன், சலீபன் (இங்கிலாந்து), சோபா, நிஷாந்தினி, நிஷாந்தன், செல்வி, காலஞ்சென்ற சூட்டி மற்றும் பிரியா, பாரத் (இங்கிலாந்து), றூபினா (கனடா), அமலதாஸ் (அமெரிக்கா), சியானா, சாளினி, தங்கா (ஆஸ்திரேலியா), அனோஜன் (நியூசிலாந்து), ஆனா, சிந்துஜா (அமெரிக்கா), ஜெமினா, றோஜிகா, ஸ்ரெப்னி, றவ்மியன் (பிரான்ஸ்), ஜன்ஸ்ரன் (இத்தாலி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.11.2018) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.**

**077 836 5330 (வதனா), 077 039 8884 (வவா)**


**தகவல்:**

**குடும்பத்தினர்.**

(CS 18511/15/18)

# மரண அறிவித்தல்

## மாணிக்கம் மகேந்திரம்




தம்பாலை அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் மகேந்திரம் நேற்று (06.11.2018) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - கனகம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வனும் அற்புதமலரின் பாசமிகு கணவரும் வரதாயினி (தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), வரதாஞ்சனி, கிருஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஈஸ்வரியின் அன்புச் சகோதரரும் கணதாசாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**தம்பாலை, அச்சுவேலி.**

(C 8259/15/17)

**குடும்பத்தினர்.**

## மழை...

சூழவுள்ள கடற்பரப்பிலும் மழையுடனான காலநிலை தொடரும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

பொதுமக்களும், கடலுக்குச் செல்வோரும் இது தொடர்பாக விடுக்கப்படும் அறிவுறுத்தல்கள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் வட அரைப் பாகத்தில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வரை அதிகரித்து ஓரளவு பலத்த காற்று வீசலாம். வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யலாம். ஏனைய பிரதேசங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையே பெய்யலாம்.

வடக்கு, வடமத்திய, கிழக்கு, வடமேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாகப் பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

பொத்துவிலிலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலை, காங்கேசன்துறை, புத்தளம் மற்றும் கொழும்பு ஊடாக காலி வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் சில இடங்களில் பலமான மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

பொத்துவிலிலிருந்து திருகோணமலை, காங்கேசன்துறை, மற்றும் புத்தளம் ஊடாக கொழும்பு வரையான கடற்பரப்புகளில் காற்று வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் காற்று வடமேற்கு திசையிலிருந்து வீசக்கூடும். நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 20 40 கிலோ மீற்றர் வரை காணப்படுவதுடன் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரை அதிகரித்து வீசலாம். அப்போது கடல் கொந்தளிப்பாக அல்லது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ற)

## ஐ.தே.கவுக்கு...

நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசமும் இதே கருத்தை முன்வைத்தார். தனது கருத்தை ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள் என்றும் அவர் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, புதிய அரசில் அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டிருந்த மனுஷ நாணயக்கார தான் பெற்றுக் கொண்ட பதவியில் இருந்து நேற்று விலகியிருந்தார். மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கே தான் ஆதரவு வழங்குவேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தமது பெரும்பான்மையை நாடாளுமன்றில் நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். தற்போது கட்சி தாவல்கள் சூடுபிடித்துள்ள நிலையில் அஜித் பி பெரேராவும், அகிலவிராஜ் காரியவசமும் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளனர். (ற)

## கிளிநொச்சி...

செ.கஜீபன் (வயது-18), கௌரீசன் தனுசன் (வயது-19) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த எரிபொருள் தாங்கி வாகனத்துடன் பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கி உந்துருளியில் பயணித்த இளைஞர்கள் விபத்துக்குள்ளாகியுள்ளனர். சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றையவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளார்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ற-35,214,6,105)


## வேலையாள்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் புதிய உயர்தர சைவ ஹோட்டல் ஒன்றுக்கு

- காசாளர்
- சிட்டை எழுதுனர் (Bill Clerk)
- உணவு பரிமாறுபவர்கள்

உடன் தேவை. அனுபவமுடையவர்கள் விரும்பத்தக்கது.

**077 773 0590**

(CS 00638) (4.17)

## வாடிக்கையாளர் கவனத்துக்கு

எமது அரிசி ஆலையில் புதிய தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட தவறு காரணமாக சில மாதங்கள் அரிசியின் தரத்தில் ஏற்பட்ட தவறினை தற்போது திருத்தம் செய்துள்ளோம் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**Maapiyan Mill**
Maapiyan mill Road,
Suthumalai, Manipay. 077 772 2215

(CS 21049/15/17)


## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 01, பிரதான வீதி, ஆதன இல. 34 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் M.S. சுல்தான் காஜியார் என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தை இல. 92, கலீபா அப்துல்காதர் வீதி, யாழ்ப்பாணம் தற்பொழுது இல. 24B சமகி மாவத்தை, கௌடான வீதி, தெஹிவளையைச் சேர்ந்த சுல்தான் மொகிதீன் மொகமது றவீக், பிரசித்த நொத்தாரிசு M.M.M.ரமீஸ் முகதாவில் 2004.07.02 ஆம் திகதியிட்டு 577 ஆம் இலக்கத்தில் உறுதிப்படுத்தப்பட்ட உறுதியில் தனது தந்தையார் நையினா மொகமட் சுல்தான் மொகிடீனுக்கு 1964ஆம் ஆண்டு குறித்த ஆதனம் நன்கொடையாக வழங்கப்பட்டதென்றும் குறித்த உறுதி 1990 இடம்பெயர்வின்போது தொலைந்துவிட்டதாக வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு Y.சத்தியநாதன் முகதாவில் 2004.12.28(4)ஆம் திகதியிட்டு 861 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிமூலம் சுல்தான் மொகிதீன் மொகமது றபீக்.குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், குருநகர், கடற்கரை வீதி, இல. 18/8 என்ற முகவரியைச் சேர்ந்த சவரிமுத்து டொமினிக் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

**ஆதன விவரம் :** யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, கரையூர் இறை இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S. சுப்பிரமணியம் அவர்களின் வரைபட இல. 0467/2004.06.11 இல் துண்டு 1 எனக் காட்டப்பட்ட நில. பர 1குளி 12.19 ஆகும்.

வடக்கு : கண்டி வீதி
கிழக்கு : தேசிங்கநாதன் பார்த்தீபன்
தெற்கு : இராசையா இராஜசூரியரின் ஆதனம்
மேற்கு : கண்டி வீதி, 8ஆம் இலக்க ஆதனம்

தற்போது இவ் ஆதனத்தை சவரிமுத்து டொமினிக் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சவரிமுத்து டொமினிக் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

(C 8258/15)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 15 . 12 . 1960

விண்ணில் 30 . 10 . 2016

## இராசரட்ணம் இராஜசிங்கம்

*திதி: அமாவாசை (07.11.2018)*

ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
உங்கள் நினைவுகள் அகலாது
அனைவரின் நெஞ்சங்களையும்
கொள்ளை கொள்ளும் உங்கள் அன்பு
இன்று நினைத்தாலும் எமது விழியோரம்
நீரைச் சிந்தச் செய்கிறது.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**தேவாலய வீதி,**
**சங்கானை.**

**உங்கள் நினைவில்**
**மனைவி, பிள்ளைகள்,**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆரம்பப்பிரிவு உபஅதிபர்
செல்வி சுமதி கந்தசாமி அவர்களின் தாயார்
அமரர்
**கந்தசாமி இராசம்மா** (மகேஸ்வரி)
(02.11.2018) அன்று காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## மரண அறிவித்தல்

### துரைச்சாமி பாலதேவன்

**(ஓய்வு பெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத்திணைக்களம்)**



அராலி மத்தி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இல. 516, கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி பாலதேவன் (ஓய்வு பெற்ற பொறியியலாளர், நீர்ப்பாசனத்திணைக்களம்) நேற்று (06.11.2018) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி அம்பிகை தம்பதியரின் அன்புமகனும் சுப்பையா அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் சகாதேவன், வாமதேவன், காலஞ்சென்ற ஞானேஸ்வரி மற்றும் ஞானதேவன், ஞானதேவி ஆகியோரின் அன்புச்சகோதரரும் பரமேஸ்வரியின் (ஓய்வுபெற்ற கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்) அன்புக்கணவரும், சபேஷன் (மென் பொறியியலாளர், Pearson Lanka (Pvt) Ltd, கொழும்பு), ஜெகாம்பிகா (ஆசிரியர், கிளி/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் கோபிராஜின் (நிறை வேற்று அதிகாரி Print Care, கொழும்பு) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2018) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 516, கே.கே.எஸ் வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 021 222 8036

தகவல் :
**குடும்பத்தினர்.**


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 878
சீட்டிழுப்பு திகதி 2018.11.05 திங்கட்கிழமை
Q 28 49 63 66
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,415,404/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
பச்சை நிற டிக்கட்டுகள் 2018.11.08ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


ராசி அதிர்ஷ்டம்
திகதி 06.11.2018 | வெற்றி வாரம் 2395 | வர்ணம் நீலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 10 29 36 57
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000,000/=
2018.11.07 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும் அல்லது துரித அழைப்பு 1919

நியத ஜய
சீட்டிழுப்பு வாரம் : 717 வர்ணம் : ஆரஞ்சு
திகதி : 2018.11.06
வெற்றி இலக்கங்கள் 11 16 40 42 ஆங்கில எழுத்து F
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 17,608,668/-
தொலைபேசி : 0112 333 546 - 47 web : www.dlb.lk

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 364
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.11.06
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 101,532,818/-
P 05 16 44 59
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 426
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.11.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 66,824,085/-
வெற்றி இலக்கங்கள் 11 27 33 65 ஆங்கில எழுத்து U
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# ஔவையார் காணும் இலக்கிய நயமும் மனிதப் பண்புகளும்



## வாழ்வியலுக்கான அடிப்படைப் பாடங்கள்

சு.அகிலன்

ஔவையாரை ஒரு புலவர் என்று மட்டும் அறிமுகம் செய்து விட முடியாது. அவர் ஒரு பயணி. நாடு முழுவதும் ஓயாமல் சுற்றிச் சுற்றி வந்து மக்களைச் சந்தித்த ஓர் இலக்கிய ஆளுமை. ஔவையாரின் பாடல்கள் அத்தனையும் சமுதாயப் பதிவேடுகளாகும். அவர் மன்னர்களுடனும் நட்புக் கொண்டிருந்தார். சாதாரண மக்களுடனும் அன்பு பூண்டிருந்தார். புல்லையும் பாடுவார். நெல்லையும் பாடுவார். படைப்பில் புல்லும் நெல்லும் ஒரே தரமானவைதான். படைப்பாளர்களுக்கும் புல்லும் நெல்லும் ஒரே தரத்தில் அமைவனதான். இது உயர்வானது. இது தாழ்வானது என்று பார்க்கும் பார்வை அவருக்குக் கிடையாது. எல்லாவற்றையும் ஒரே தரத்தில் ஒரே நிலையில் பார்த்துச் சமூகத்தைப் பாடிய பெண் ஔவையார்.

**இயற்கை நேயம்!**

அவர் ஒரு முறை நன்றாக விளைந்து கொண்டிருக்கும் வயல் பக்கமாகச் சென்று கொண்டிருக்கிறார். பச்சைப் பசேல் என்று நெற்பயிர்கள் வளர்ந்து நிற்கின்றன. பால் பிடித்துத் தலை தூக்கி நிற்கின்றன கதிர்கள். இந்தக் கதிர்கள் நன்றாக முற்றித் தலை சாய்ந்து நிற்க வேண்டும். அந்தத் தலைசாய்தலில் நெற்கதிர்கள் அதிகம் விளைந்திருக்க வேண்டும். இந்த வளத்தை எதிர்பார்த்து உழவர் பெருமக்கள் உறுதியாக விவசாயம் செய்து வருகிறார்கள்.

ஔவையார் அந்த நெல் வயலைப் பார்க்கிறார். இந்த வயல் வளம் தர வேண்டும். வேறு எந்த விதமான துன்பங்களும் இந்தக் கதிர்களுக்கு வந்துவிடக் கூடாது என்று அவர் மனதில் எண்ணி அந்தக் கதிர்களை வாழ்த்துகிறார். வீட்டில் செடிகள் வளர்க்கிறோம். அவற்றுக்கு வெறும் தண்ணீர் மட்டும் ஊற்றுவதை விட, அவை நன்றாக வளரவேண்டும் என்று வாழ்த்துக்களோடு தண்ணீர் ஊற்றினால் அந்த வாழ்த்து இன்னும் அந்தச் செடியை நன்றாக வளரச் செய்யும். வளம் பெருகச் செய்யும். தண்ணீர் ஊற்ற ஊற்றத் தலையாட்டி அந்த வாழ்த்தையும், நீரையும் அந்தச்செடிகள் ஏற்றுக்கொண்டு மகிழும். ஓர் அறிவு உயிர் என்றாலும் அதற்கும் உயிர் உண்டு. அன்பு உண்டு. பாசம் உண்டு. எதிரிகள் உண்டு. நம்பிக்கை உண்டல்லவா. இதோ இந்த நெற்பயிர்களும் ஔவையாரின் வாழ்த்துக்களைப் பெற்று வளமாக வளர்ந்து நிற்கின்றன. இன்னும் சில நாள்களில் இதைக் களத்தில் இட்டு நெல்மணிகளை இந்த உழைப்பாளர்கள் பெற்று விடுவார்கள். ஒரு புறத்தில் வைக்கோல் போராக நிரம்பி இருக்கும். மற்றொரு புறத்தில் மூடை மூடையாக நெல்மணிகள் குவிந்து நிற்கும். உழைத்துப் பெற்ற நெல்மணிகளைக் காணும் போது ஏற்படும் சுகமே சுகம். அதனைத் தொட்டுத் தடவி அதன் வாசத்தை உணரும் போது ஏற்படும் சுகமே சுகம். இதோ இந்த நெல்மணிகள் என் வீட்டுத் தேவைக்கு எடுத்துக் கொண்ட பிறகு மற்றவர்களின் வயிற்றை நிரப்பப் போகின்றன. ஒன்று ஓராயிரம் ஆகி பல வயிறுகளின் வயிற்றுப் பசியைப் போக்கப்போகின்றன.

**படைப்பியல்பின் தாற்பரியம்!**

அவர்கள் நெல்மணிகளைப் பெற்று அதன் மீதுள்ள உமியைத் தீட்டி எடுத்து விடுவார்கள். கைக்குத்தல் அரிசியாக அதை ஏற்றுக் கொண்டால் நெல்லின் சத்தெல்லாம் சாப்பிடும் உயிருக்கும் வந்து விடுகிறது.

நெல்லில் இருந்து பதமாக உமியை நீக்கி அதை முழுமையான அரிசியாக உருவாக்க வேண்டும். இயந்திரங்கள் இதைச் செய்யலாம். மனிதர்கள் செய்யலாம். என்றாலும் முனை முறியாமல் அரிசிக் கோலங்கள் உருவாக்கப்படும் போது ஏற்படும் மகிழ்ச்சி உலகத்துக்கு ஒரு புதுமை. அதிலும் கல் நீக்கி, குப்பை நீக்கி, பட்டை தீட்டப் பெற்ற வைரமாக அரிசி காட்சி தருகிறது.

மற்றொரு பக்கம் தங்க மயமாய் உமி குவிந்து கிடக்கிறது. உமி என்று அதை ஒதுக்கி விட முடியுமா? உமிதான் உண்பதற்கு ஆகாதே. அதனால் அது எதற்கும் உதவாதா? அதில் இருந்து எண்ணெய் தயாரிக்கக் கற்றுக் கொண்டுவிட்டது மனித குலம். உமியை எரிபொருளாக்கக் கற்றுக் கொண்டது மனித குலம். ஆனாலும் உமியை அப்படியே உண்ண இயலாது அல்லவா. இதுதான் அரிசிக்கும் உமிக்கும் உள்ள வேறுபாடு.

அரிசிக்கு என்ன பெருமையோ, அதே பெருமை உமிக்கும் உண்டு. இயற்கை தரும் எந்தப் பொருளும் ஒதுக்கத்தக்கதல்ல. அதைப் பயன்படுத்தத் தெரியாத காரணத்தால்தான் அவை ஒதுக்கப் பெற்று விடுகின்றன. குப்பைகளைப் குப்பைகள் என்று அள்ளி வைத்தது ஒரு காலம். அவற்றில் இருந்து மின்சாரம் தயாரிக்க முனைகிறது இந்தக்காலம்.

எல்லாவற்றையும் பயன்படுத்தும் மனித ஆற்றல் இயற்கைக்கு மிகவும் நன்றி செலுத்த வேண்டியுள்ளது. சரி உமியும் பெருமை உடையது. அரிசியும் பெருமை உடையது. ஔவையார் என்ற சமுதாயக் கவிஞர் இந்த உமிக்குள் ஒரு சமுதாயத் தெளிவை வைத்துக் கவிதை படைத்துள்ளார். மனிதர்களே விளைந்த நெல்லில் உமியை நீக்கி உண்கிறீர்களே. உங்களிடம் ஒரு கேள்வி. உமியை நீக்கிய அரிசியை மண்ணில் போட்டு முளைக்கச் செய்ய இயலுமா?

ஔவையாரின் கேள்வி புரிகிறதா? உண்ணும் போது உமியை நீக்குகிறீர்களே. உமியை நீக்கிய அரிசியை விதையாகக் கொள்ள இயலுமா? முடியாதே. விதை நெல் என்று எடுத்து வைத்த வீரியம் மிக்க நெல்லில் உமியும் இணைந்துதான் நிற்கிறது. எனவே மேலே உள்ள உமிதான் நெல்லை முளைக்கச் செய்கிறது. இந்த உமி இல்லாவிட்டால் நெல்லும் இல்லை, அரிசியும் இல்லை, உண்ணச் சோறும் இல்லை. பஞ்சம் பட்டினி என்று உலகமே இல்லாமல் போய்விடும்.

**பெருமை**

எனவே உமியின் பெருமை நெல்லை விளைவிப்பதில் இருக்கிறது. உமி இல்லாமல் நெல் இல்லை!. ஔவையார் எழுதுகிறார்,

*பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்*
*விண்டு உமிபோனால் முளையாதாம்!*

உமி என்ற போர்வையில் அரிசி என்ற மணி அற்புதமாகக் பாதுகாக்கப்படுகிறது. அந்தப் போர்வையை உண்ணும் போது நீக்கிவிடுகிறவர்கள். விளைவிக்கும் போது ஏன் நீக்குவதில்லை. அரிசிதான் முளைக்கிறது என்றாலும் உமியை நீக்கி விட்டால் அரிசி முளைக்காது. அரிசி மீண்டும் விளையும் பொருள் அல்ல. அதனால் அது உமியுடன் இருந்தால் மட்டுமே விளையும் சக்தியைப் பெறுகின்றது.

**வெற்றியின் இரகசியம்**

அரிசிக்கும் உமிக்கும் இத்தனை பெருமைகளை ஏன் ஔவையார் சொல்ல வேண்டும்? அரிசி என்ற பொருள் உமி என்ற துணை கொண்டே முளைக்கும் சக்தியைப் பெறுகின்றது. அதுபோல வல்லமை மிக்கவர்களாக இருந்தாலும் பக்கபலமாக துணை செய்ய பலர் இருக்க வேண்டும். தனிமனிதர்கள் எவ்வளவுதான் வல்லைமை மிக்கவர்களாக இருந்தாலும், அவர்கள் தனிமரமாக இருந்தால் வெற்றி பெறமுடியாது. தனக்குத் துணையானவர்களைத் தக்க முறையில் சேர்த்துக் கொண்டு வாழ்வில் நடைபோட்டால் முன்னேற முடியும்.

*கொண்ட பேர் ஆற்றல் உடையார்க்கு*
*ஆகாது அளவு இன்றி ஏற்றக்*
*கருமம் செயல்!*

என்பதே அரிசியையும் உமியையும் வைத்துச் சொல்லப்படும் பாடம் ஆகும். அரிசி என்பது மிக உயர் நிலை. உமி என்பது அடிப்படை நிலை. ஆனால் இவையிரண்டும் பல இயல்புகளில் ஒன்றாக இருக்கின்றன. குறித்த நேரத்தில் அவை ஒன்றை விட்டு ஒன்று விலகி விடுகின்றன. அரிசியின் உயரத்தை உமி நின்று பார்த்து அமைதி காக்கிறது.

**இயற்கை நியதியும் வாழ்க்கையின் அர்த்தப்பாடுகளும்**

அரிசியின் பெருமை சிறப்பா? உமியின் அமைதி சிறப்பா? இந்தக் கேள்விக்கு விடை காண்பது கடினம். எனவே செயற்கரும் செயலாக இருந்தாலும் ஒருவரால் மட்டும் அதை நிறைவேற்ற முடியாது. அவர் தக்க துணைவர்களைத் தேடிக் கொள்ள வேண்டும். அவர்கள் தன்னையிழந்து செயற்கரும் செயல் செய்பவரை முன்னிறுத்தும் தியாக உணர்வு உடையவராக இருக்க வேண்டும்.

காற்றுப் பெட்டிக்குள் உமியும் அரிசியும் ஒன்றாய்த்தான் செல்கின்றன. காற்றின் வேகத்தில் உமி பறந்து விடுகிறது. அரிசி எடையோடு நிற்கிறது. இந்த நிமிடம் எத்தகைய சோதனையான நிமிடம். இது வரை உடனிருந்து அரிசியை விட்டுப் பிரிகிறது உமி. அழமுடியுமா? அல்லது அரிசியின் உயரத்தைத் தடுத்து விடமுடியுமா?

அரிசியின் உயரத்தை அண்ணாந்து பார்க்கிறது உமி. அமைதி காக்கிறது. என்னுடன் வந்தவன் உயரத்தில் ஏறி நிற்கிறான். அவன் உயர்வில் நான் மகிழ்கிறேன். அவனுடன் சிலகாலம் இருந்தேன் என்பதே எனக்குப் பெருமை என்று உமி அமைதி காக்கிறது.

அரிசி போன்றவர்கள் செயல் ஊக்கம் மிக்கவர்கள். இவர்களைப் பேராற்றல் மிக்கவர்கள் என்கிறார் ஒளைவயார். அவர்களுக்கு உமியாகத் துணை செய்பவர்கள் தியாகம் மிக்கவர்கள். இதனால்தான் ஔவையார் இந்தப் பாடலில் அரிசிக்குத் தந்திருக்கும் எடையைவிட உமிக்குத் தந்திருக்கும் எடை சற்று அதிகம்.

தனிமனிதன் ஒவ்வொருவரும் தன் வாழ்வை மட்டுமே நடத்திச் சென்று விடாமல் சமுதாயம் நலமடைய செயல்கள் செய்யவேண்டும் என்பது இந்தப் பாடலில் இருந்துக் கிடைக்கும் மற்றொரு பாடம். சமுதாயத்திற்குச் செய்யப்படும் செயல்களே செயற்கரும் செயல்களாகும். அந்தச் செயல்களையே ஏற்ற கருமம் என்று குறிப்பிடுகிறார் ஔவையார்.



இத்தனை பாடங்களையும் அரிசியும் உமியும் சொல்கின்றன. ஓர் ஓரமாய் வீட்டில், அரிசி உற்பத்திச் சாலையில் கிடைக்கும் இந்தப் பொருள்களில் இலக்கியத்தையும் மனிதப் பண்புகளையும் காண்கிறது ஔவையார் உள்ளம்.



# அரசியல் நெருக்கடியால் பொருளாதாரம் பாதிப்பு!

## ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

தற்போதைய அரசியல் நெருக்கடியால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க.

ஐக்கிய தேசியக் கட்சி நேற்று அலரி மாளிகையில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி பெற்ற வெற்றி மீறப்படுகின்றது. ஒரு சர்வாதிகார் ஆட்சியை அகற்ற முயன்ற பொதுமக்கள் மறுபடியும் ஒரு சர்வாதிகார ஆட்சியைப் பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையால் அப்பாவிப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய அரசியல் நெருக்கடியால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி, ஜப்பான், அமெரிக்காவில் இருந்து பெறப்பட்ட மானியங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன - என்றார். (ற)

# தலைமை அமைச்சருக்கான பாதுகாப்பை வழங்குங்கள்

## பொலிஸ் மா அதிபரிடம் ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, நவ.7

தலைமை அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பே ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பான கடிதம் ஒன்று பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கியதேசியக்கட்சியாளர்நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பு, அலரி மாளிகையில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் பொலிஸ் தலைமை அலுவலகத்துக்குச் சென்றபோது அங்கு பொலிஸ் மா அதிபரோ அல்லது வேறு மூத்த அதிகாரிகளோ இல்லை. அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் கடிதத்தைக் கையளித்துவிட்டுப் பொலிஸ் மா அதிபரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவித்தோம்.

சபாநாயகர் ரணில் விக்கிரமசிங்கவையே தலைமை அமைச்சராக ஏற்றுக் கொண்டுள்ளார். அதனால் தலைமை அமைச்சருக்கு வழங்கப்படும் பாதுகாப்பை அவருக்கு வழங்க வேண்டும் என்று பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளோம் - என்றார். (ற)

## நாடாளுமன்றத்தைக்...

எதிர்கட்சித் தலைவருக்கும் அமெரிக்கத் தூதுவருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்புத் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடக அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

கடந்த வாரத்தில் தலைமை அமைச்சரை நீக்கியமை உள்ளடங்கலாக இடம்பெற்ற சம்பவங்கள் அரசமைப்புக்கு விரோதமானவை யாகும். நாடாளுமன்றம் கூடுவதை காலம் தாழ்த்தப்பட்டமை, ஜனநாயக விழுமியங் களுக்கு எதிராக செய்யப்பட்ட ஒரு செயலை கட்சி தாவும் நபர்களுக்கு பல்வேறு பதவி களையும் வேறு காரியங்களையும் கொடுத்து சட்டபூர்வமான ஒன்றாகக் காட்டுவதற்கு வழிவகுக்கின்றது. உடனடியாகச் செயற்பட்டு நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் எழுத்து மூலமாகக் கோரிக்கை விடுத்திருந்தோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசு போதியளவு கையாளவில்லை. அரசியல் கைதிகளின் விடுதலை, மீள்குடியமர்வு, மறுவாழ்வு, படையினர் வசமுள்ள காணிகள் விடு விப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை போன்ற விடயங்களில் அரசு மந்தகதியிலேயே செயற்பட்டது. இந்த விடயங்களில் போதியளவு முன்னேற்றம் காணப்படாமையானது, தமிழ் மக்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பிளவுபடாத பிரிக்கமுடியாத நாட்டுக்குள் உண்மையான ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தீர்வொன்றை அடைவது அவசியம். அத்தகைய தீர்வை அடைய முடியாத பட்சத்தில், இந்த நாடு எதிர்நோக்கியுள்ள எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியாது போகும். அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கும், ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் நோக்கில், அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கை தொடர்பில் ஆக்கபூர்வமான பங்களிப்பை கொடுக்கவேண்டும் என்று அமெரிக்கத் தூதுவரிடம் இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டார்.

பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட அமெரிக்கத் தூதுவர், ஜனநாயக வழிமுறைகள் பின்பற்றப்படுவதை அமெரிக்கா வலியுறுத்துகின்றது. தற்போது நிலவும் சூழ்நிலைக்கு ஜனநாயக வழிமுறைகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தின் நோக்கத்துக்கும் அதன் நடைமுறைப்படுத்தலுக்கும் அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று உறுதியளித்தார் என்று அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சபாநாயகர் கரு ஜயசூரியவையும் அமெரிக்காவின் புதிய தூதுவர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். தற்போதைய அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத்தைக் கூட்டுவதன் முக்கியத்துவம் தொடர்பாகச் சபாநாயகருடனான சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது என்று அமெரிக்கத் தூதரகத்தின் கீச்சகப் பதிவில் கூறப்பட்டுள்ளது.

'இந்த ஜனநாயக நிறுவனங்கள் இலங்கை மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைச் சொல்ல விடுங்கள்' என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ற-5)

## ஐ.தே.க. வசம்...

வித்துள்ளது.

அலரி மாளிகையில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

புதிய அரசில் பிரதி அமைச்சராகப் பதவி வகித்த மனுஷ நாணயக்கார தற்போது எம்முடன் இணைந்து கொண்டுள்ளார். இனிவரும் நாள்களில் பல அமைச்சர்கள் படிப்படியாக விலகுவார்கள். ரணில் விக்கிரமசிங்க அணியுடன் இணைந்து கொள்வார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றதில் 130க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமக்கு ஆதரவாக உள்ளனர். நாட்டில் ஏற்பட்டுள்ள ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் தொடர்பான விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குச் சரியான முறையில் செயற்பட வேண்டும்.

ஜனநாயகத்தை மதிக்கும் அரசியல்வாதிகள் நாடாளுமன்றில் இன்னும் இருப்பது மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## நீதிபதிக்கு...

முழுமையான விசாரணை நடத்துங்கள் என்று தலைமை நீதியரசர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் இடம்பெற்றவழக்குத்தொடர்பில், நீதிமன்றுக்கு அழைக்காத ஒருவருக்கு எதிராகக் கட்டளையிடப்பட்டதுடன், அரச தலைவரால் வழங்கப்பட்ட நியமனத்துக்குரிய பதவி நிலையில் இருக்கும் அவருக்கு எதிராக மாவட்ட நீதிமன்றம் கண்டனம் தெரிவித்திருந்தது. இந்த இரண்டு விடயங்களும் தவறு என்றும் பக்கச் சார்பான நடவடிக்கை என்றும் தெரிவித்தே நீதிச் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீதிச் சேவை ஆணைக்குழு இந்த விடயத்தை ஆராய்ந்ததுடன், தலைமை நீதியரசரிடம் பாரப்படுத்தியுள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்க வேண்டும் என்று தலைமை நீதியரசர் அதிகாரி ஒருவரை நியமித்துள்ளார்.

நீதிச் சேவை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தவர் தன்னால் நியமிக்கப்பட்ட அதிகாரியிடம் ஆவணங்களைக் கையளிக்க வேண்டும் என்றும் தலைமை நீதியரசர் பணித்துள்ளார். (ற-5.105)

## மகிந்தவின்...

இருந்து விலகுகின்றேன் என்று அரச தலைவருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். அதன் பின்னர் அலரி மாளிகைக்குச் சென்ற அவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து ஆதரவு தெரிவித்துள்ளார்.

பதவியேற்புச் செய்துகொண்ட புதிய அரசை நாடுகள் எவையும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனது ஜனநாயக அரசியல் நம்பிக்கைகள் மற்றும் மனச் சாட்சியின் அடிப்படையில் எனது பதவி விலகலைச் சமர்ப்பிக்கின்றேன் என்று மனுஷ அரச தலைவருக்கு அனுப்பிய பதவி விலகல் கடித்தில் குறிப்பிட் டுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி தேர்தலில் உங்களுக்குக் கிடைத்த ஆணையையும், அதன்பின்னர் கூட்டு அரசு உருவாக்கப்பட்டதும் அதிகார வரமுறை மீறல்களையும், ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை ஒழிப்பதற்கே என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். இன்று முதல் நான் சபாநாயகரின் நிலைப்பாட்டை ஏற்று தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவையே ஏற்பேன் என்றும் அவர் அரச தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவை நீங்கள் தலைமை அமைச்சராக நியமித்து நாடாளுமன்ற அமர்வுகளை இடைநிறுத்தியதைத் தொடர்ந்து கடந்த சில நாள்கள் குழப்பம் மிக்கவையாகக் காணப்படுகின்றன. நான் உங்களுடன் பேச்சு நடத்தினேன். நீங்கள் கூறியவற்றை ஏற்றுக் கொண்டு புதிய அரசில் பிரதி அமைச்சராகப் பணியாற்றும் அரசியல் முடிவை எடுத்தேன் என்றும் மனுஷ தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

உங்களின் நடவடிக்கையால் ஏற்படக் கூடிய பாரதூரமான விளைவுகளைத் தெளிவுபடுத்தி சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையை வாசிக்க நேர்ந்தது. பதவியேற்புச் செய்துகொண்ட புதிய அரசை எந்த நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. இது எனது ஜனநாயக மனச்சாட்சியை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியது. நான் எனது அரசியல் சகாக்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் தீவிர ஆலோசனையை மேற்கொண்டேன். அரசமைப்புக்கு முரணான நடவடிக்கைகளுக்குத் துணை போகக் கூடாது என்று முடிவுக்கு வந்துள்ளேன் என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

## பெரும்...

நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார.

ரஞ்சித் மத்தும பண்டார கூட்டரசு ஆட்சியில் இருந்தபோது சட்டம் ஒழுங்கு அமைச்சராகப் பதவி வகித்தார். தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற விழுமியங்களைத் தாண்டிப் பெரும்பான்மையின்றிப் புதிய அரசு ஒன்றை அமைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நான் சட்டம் ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் அனைத்து அமைச்சின் செயலாளர், திணைக்களங்களின் நிறுவனங்களின் தலைவர்களுக்கு எழுத்துமூலமான கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன். அரசமைப்புக்கு முரணாக புதிய தலைமை அமைச்சரும், அமைச்சரவையும், செயலாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்றச் சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்றைக் கூட்டிப் பெரும்பான்மையை நிரூபிக்கக் கோரியுள்ளார். புதிய தரப்பினருக்கு பெரும்பான்மை இல்லை என்பது இதில் தெளிவாகின்றது.

புதிய தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர்களின் நியமனங்கள் சட்டத்துக்கு முரணானவை. சட்டத்துக்கு முரணாக நியமனம் பெற்றவர்களின் உத்தரவுகளை அரச அதிகாரிகள் செயற்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவ்வாறானவர்களுக்கு ஆதரவளிப்பது, அவர்களின் உத்தரவை ஏற்று நடைமுறைப்படுத்துவது தவறானது. அவ்வாறு செயற்படுவோர் மிகப் பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படும் ஆபத்து உள்ளது.

சட்டத்துக்கு விரோதமாகச் செயற்படும் அமைச்சர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. அவர்களின் உத்தரவுகளாலும், அவர்களின் உத்தரவுகளை ஏற்றுச் செயற்படும் அரச அதிகாரிகளாலும் ஏற்படும் பண விரயம் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ற-31)

## உந்துருளியில்...

கடத்திச் செல்லப்பட்டபோதே கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று காங்கேசன்துறைக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாருக்கு கஞ்சா கடத்தப்படுவது தொடர்பில் இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகம சூரியவின் தலைமையிலான பொலிஸ் குழு பருத்தித்துறை குடத்தனை, பொற்பதியில் சோதனை நடவடிக்கையில் இறங்கியது.

அந்தப் பகுதியில் பயணித்த உந்துருளி மடக்கிச் சோதனையிடப்பட்டது. பொதி செய்யப்பட்ட நிலையில் அதிலிருந்து 4 கிலோ 200 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. உந்துருளியைச் செலுத்தி வந்தவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். உந்துருளியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். கஞ்சா விற்பனைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,26)

## ஆடைகள்...

(வயது-20) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இவர் தனது நண்பருடன் நேற்றுமுன்தினம் மாலை கோப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துள்ளார். ஆடை வாங்குவதற்காகவே அவர் சென்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நல்லூர், சங்கிலியன் வீதிக்கு அருகே இளைஞரும், நண்பரும் பயணித்த உந்துருளி, லாண்ட் மாஸ்ரருடன் விபத்துக்குள்ளானது. அதில் தர்மசீலன் மயக்கமடைந்தார்.

அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சேர்க்கப்பட்ட சிலமணி நேரத்தில் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். உடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-8)






# மானிப்பாய் இந்து - யூனியன் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், நவ. 7
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி இன்று மோதவுள்ளது.

தீபாவளித் திருவிழாவை முன்னிட்டு மகாதேவான் பூமாதேவி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக 'நட்சத்திரங்களின் உதைபந்தட்டம்' என்னும் இந்த தொடர் நடத்தப்பட்டு வருகிறது. நேற்று முந்தினம் இடம்பெற்ற இத் தொடரில் சுன்னாகம் ஸ்கந்தவரோதய,' தெல்லிப்பழை யூனியன், தெல்லிப்பழை மகாஜனா, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய நான்கு அணிகள் இந்தத் தொடரில் பங்குபற்றின. இறுதியாட்டம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-23)

# கோக்லி என்னும் 'கிங்'




தனது 30ஆவது பிறந்த நாளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொண்டாடிய இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோக்லிக்கு சமூக வலைத்தளங்களில் வாழ்த்துச் செய்திகள் குவிந்த வண்ணமுள்ளன. அடுத்த 5 அல்லது 7 ஆண்டுகள் தொடர்ந்து இவ்வாறு கோக்லி விளையாடினால் எவ்வளவு சாதனைகளை முறியடிப்பார் என்று பல கணிப்புகள் மற்றும் விவாதங்கள் நடந்து கொண்டு இருக்க, அவர் ஒரு தனித்துவமான வீரராகச் சிறந்து விளங்க காரணம் என்ன? அவரிடம் உள்ள சிறப்பு அம்சம் என்ன? என்பது பற்றி எடுத்தியம்புகிறது இந்தக் கட்டுரை.

**உடல்தகுதி**

உடல்தகுதி என்ற அம்சத்தில் மிகவும் அக்கறை உள்ளவர் விராட் கோக்லி. தொடர்ந்து உடற்பயிற்சிக் கூடத்தில் பயிற்சி எடுக்கும் அவர், எந்தளவு தன்னுடைய உடலைத் தயார் செய்துள்ளார் என்பது அவரது களத்தடுப்பு மற்றும் துடுப்பாட்டத்தில் நன்றாகவே எதிரொலிக்கும். தனது அசாத்திய உடல்தகுதியால் நீண்ட நேரம் துடுப்பெடுத்தாடுவது மற்றும் களைப்பின்றி, தொய்வின்றி களத்தடுப்பில் ஈடுபடுவது அனைத்தும் கோக்கிலிக்கு கைதேர்ந்த கலை.

**கிரிக்கெட்டா, குடும்பமா?**
**கோலியின் தெரிவு எது?**

ஒருமுறை டெல்லி அணிக்காக ரஞ்சி கிண்ணத் தொடரில் கோக்லி விளையாடிக் கொண்டிருந்த போது அவரது தந்தை திடீரென இறந்துபோனார். தனது பயிற்சியாளரை தொடர்பு கொண்ட கோக்லி, "என் தந்தை இறந்து விட்டார். நான் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருக்கிறேன். நாளை என்ன செய்ய வேண்டும்?" எனக் கேட்டார். "உனக்கு விருப்பமானதைச் செய்" என்று பயிற்சியாளர் கூற, "நான் நாளை விளையாட போகிறேன்" என்றார் அப்போது 18 வயதேயான கோக்லி. கோக்லியை பரிசோதிக்கும் ஆட்டமாக அமைந்த அந்த ஆட்டத்தில்; பொறுமையாக விளையாடி 90 ஓட்டங்களை கோக்லி சேர்த்ததால் டெல்லி அணி தோல்வியில் இருந்து தப்பியது.

**சச்சினுக்கு பதிலாக**
**களமிறங்கிய கோலி**

அண்மையில் சமூகவலைத் தளங்களில் உலவும் ஒரு முக்கியமான விவாதம் விராட் கோக்லி மற்றும் சச்சின் ஆகிய இருவரில் யார் சிறந்த வீரர் என்பது. ";நான் சச்சினின் உயரத்தில் இல்லை" என்று இதற்கு கோக்லி தெளிவாக கூறிவிட்டாலும், விவாதம் தொடர்ந்த வண்ணமுள்ளது. இது ஒருபுறமிருக்க முதல்முறையாக இந்திய அணியில் விராட் கோக்லி இடம்பிடித்ததே சச்சினுக்கு பதிலாகத்தான். 2008ஆம் ஆண்டில் நடந்த இலங்கை சுற்றுப்பய ணத்தில் சச்சின் காயமடைந்த பிறகு 12ஆவது வீரராக இருந்த கோக்லி இந்திய அணியில் இடம்பிடித்தார். அந்த ஆட்டத்தில் அவர் 12 ஓட்டங்களே எடுத்தார். ஆனால், அதன்பின் ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் விராட் கோக்லி ஒரு தலைசிறந்த வீரராக உருவெடுத்தது தனிக்கதை.

**விரட்டல் மன்னன் கோக்லி**

பொதுவாக முதலில் துடுப்பெடுத்தாடும்போது இந்திய வீரர்கள் சிறப்பாக விளையாடுவார்கள். ஆனால் இரண்டாவதாக விளையாடும்போது சிறப்பாக சோபிப்பதில்லை என்ற கருத்தை தகர்த்தவர் கோக்லிதான். குறிப்பாக 2012ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்புத் தொடரில் இலங்கைக்கு எதிராக இந்தியா 40 பந்துப்பரிமாற்றங்களில் 320 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்ற நிலை. விராட் கோக்லி அன்று ஆடிய ஆட்டம் ருத்ர தாண்டவம் என்றே கூறவேண்டும்.

86 பந்தில் 133 ஓட்டங்களை அவர் குவிக்க, இந்தியா ஆட்டத்தில் வென்றது இது ஆரம்பம் மட்டுமே. அண்மையில் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிராக நடந்த ஒருநாள் தொடர் வரை விரட்டலில் தனது பங்களிப்பு மூலம் பல ஆட்டங்களில் இந்தியாவை வெற்றி பெறவைத்தவர் கோக்லி. அதனால் அவர் விரட்டல் மன்னன் என்று அழைக்கப்படுகிறார்.

**நினைத்ததை முடிப்பவர் கோக்லி**

தனித்துவமான சாதனையாளர் என்று கருதப்படும் ஒரு விளையாட்டு வீரரின் சிறப்பு தங்களால் முடியாது என்று கூறும் கருத்தை முறியடித்துக் காட்டுவதே. தொடர்ந்து அவ்வாறு சாதித்துக் காட்டியவர் கோக்லி. பிரட்மனின் சராசரி நீங்கலாக துடுப்பாட்டத்தில் உள்ள அனைத்துச் சாதனைகளையும் கோக்லி முறியடிப்பார் என்ற கருத்து தற்போது நிலவுகிறது. முடியாதா என்ன....?

கொலின்ஸின் கால்பந்தாட்டத்தில்

# றேஞ்சர்ஸ் அணி மகுடம் சூடியது!



யாழ்ப்பாணம், நவ. 7
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி கிண்ணம் வென்றது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக பழைய மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதல் பாதியில் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றேஞ்சர்ஸ் அணி. இரண்டாவது பாதியில் கலைமதி அணியின் சார்பில் கோல் பதிவானது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23,422,108)





இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி நேற்றுமுன்தினம் தனது 30ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இதை முன்னிட்டு பூரி கடற்கரையில் கோக்லிக்கு மணல் சிற்பத்தை வடிவமைத்து தனது வாழ்த்தைத் தெரிவித்தார் ஒடிசாவைச் சேர்ந்த சிற்பக் கலைஞர் சுதர்சன் பட்நாயக். (ம)


# உலகக்கிண்ணம் முக்கிய இலக்கு

## சொல்கிறார் ரகானே

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் நிச்சயம் இடம்பிடிப்பேன் என்று தெரிவித்தார் இந்திய அணியின் நட்சத்திர வீரர் ரகானே. உலகக்கிண்ணத் தொடருக்காக ஒவ்வொரு அணியும் கடும் முனைப்பில் தயாராகி வருகின்றன. இந்த நிலையில் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் ரகானே.

“இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் எனக்கு நிச்சயம் இடமுண்டு என்று கருதுகிறேன். இதற்காகத்தான் நான் கடந்த சில உள்ளூர்த் தொடர்களில் விளையாடினேன். இங்கிலாந்து ஆடுகளத்தில் என்னால் சிறந்த முறையில் துடுப்பெடுத்தாட இயலும். இதனால் உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் எனது இடம் உறுதி. நாம் ஓர் அணியாக இணைந்து சிறந்த முறையில் விளையாடுகிறோம். நாளுக்கு நாள் எமது திறனை உயர்த்திச் செல்கிறோம். இதனால் உலகக்கிண்ணம் வெல்லக்கூடிய வாய்ப்பு எமக்கு உண்டு” - என்று ரகானே மேலும் தெரிவித்தார். (ம)





பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தல்

# முதலிடத்தில் ஜோகோவிக்

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதலிடம் பிடித்தார் சேர்பிய வீரர் நொவக் ஜோகோவிக்.

கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக ஸ்பெய்ன் வீரர் நடால் பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்து வந்தார். இவரைப் பின்தள்ளி முதலிடம் பிடித்தார் சேர்பிய வீரர் ஜோகோவிக். ஜோகோவிக்கைப் பின்தள்ளி நடால் முதலிடம் பிடித்திருந்த நிலையில் தற்போது நடாலைப் பின்தள்ளி ஜோகோவிக் முதலிடம் பிடித்தார். ஜோகோவிக்கின் இந்த முன்னேற்றத்தால் பெடரர் மூன்றாவது இடத்துக்குச் சரிந்தார்.

8 ஆயிரத்து 45 புள்ளிகளுடன் ஜோகோவிக் முதலிடத்தில் உள்ளார். நடால் 7 ஆயிரத்து 480 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், பெடரர் 6 ஆயிரத்து 20 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், ஆர்ஜென்ரீன வீரர் பொட்ரோ 5 ஆயிரத்து 300 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், ஜேர்மனிய வீரர் அலெக்சான்டர் 5 ஆயிரத்து 85 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் ஸ்வெர, அண்டர்சன், சிலிச், தியம், நிசிகோரி ஆகியோர் உள்ளனர். (ம)

# பொறுமை அவசியம்

## ஹெட்மயருக்கு லாரா எச்சரிக்கை

மேற்கிந்தியத் தீவுகளின் இளம் அதிரடி வீரரான ஹெட்மயருக்கு பொறுமை மிகமிக அவசியமானது என்று தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் அதிரடி வீரரான லாரா.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஹெட்யமர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். களமிறங்கியதும் அவர் ‘அதிரடி’ என்ற பரணியைக் கையிலெடுக்கிறார். இதையடுத்தே ஹெட்மயருக்கு லாராவிடம் இருந்து அறிவுரை வந்துள்ளது.

“ஹெட்மயர் களமிறங்கிய உடனேயே அடித்து விளையாடுகிறார். அனைத்துப் பந்துகளையும் அடித்து விளையாட வேண்டும் என்று எத்தனிக்கிறார். இது தவறு. அவர் களத்தில் சிறிது நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். பொறுமைகாக்க வேண்டும்” என்று லாரா மேலும் தெரிவித்தார். (ம)



# தடுமாறி மீண்டது இங்கிலாந்து அணி

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளின் நிறைவில் இங்கிலாந்து அணி 8 இலக்குகளை இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. 103 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்த இங்கிலாந்து அணி 200 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்துவிடும் என்று கருதப்பட்ட நிலையில் அந்த அணி சரிவில் இருந்து ஒருவர்று மீண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரரான பேர்ண்ஸ் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மொயின் அலி ஓட்டமெதையும் பெறாத நிலையில் லக்மலின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். ரூட், ஜெனிங்ஸ் இருவரும் இணைந்து ஓரளவு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஜெனிங்ஸ் 46 ஓட்டங்களுடன் பெரோவிடமும் ரூட் 35 ஓட்டங்களுடன் கேரத்திடமும் போல்ட் முறையில் வீழ்ந்தனர். ஸ்ரோக்ஸால் முடிந்தது வெறும் 7 ஓட்டங்களே. இலக்குக்காப்பாளர் போக்ஸ், கரன் இணைந்து ஓரளவு நிலைத்தனர். அரைச்சதம் கடந்தார் போக்ஸ். 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கரன். நாள் முடிவில் இங்கிலாந்து அணி 8 இலக்குகளை இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம)



இங்கிலாந்துக்கு எதிராகக் காலியில் நடைபெறும் இந்த ஆட்டத்துடன் பன்னாட்டு அரங்கில் இருந்து கேரத் விடைபெறுகிறார். இதனால் நேற்று அவர் களமிறங்கிய போது சக வீரர்களால் அவர் மதிப்புறுத் தப்பட்டார்.

# பஞ்சாப்பில் இருந்து வெங்கடேஸ் பிரசாத் நேற்று நீக்கப்பட்டார்

பஞ்சாப் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து வெங்கடேஸ் பிரசாத் அதிரடியாக நீக்கப்பட்டார்.

அடுத்த பருவகால ஐ.பி.எல். தொடருக்காக பஞ்சாப் அணி அதிரடியாகத் தயாராகி வருகிறது. தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பில் இருந்து பிராட் ஹொச், ஆலோசகர் பொறுப்பில் இருந்து சேவாக் ஆகியோர் ஏற்கனவே நீக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது வெக்கடேஸ் பிரசாத்தும் அதிரடியாக நீக்கப்பட்டார். (ம)

# வென்றது பார்சா

ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது.

பார்சிலோனாவும், வலிகானோவும் இந்த ஆட்டத்தில் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் பத்தாவது நிமிடத்தில் பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் லூயிஸ் சுவாரஸ். 35ஆவது நிமிடத்தில் ஜோஸ் பதிலடி கொடுக்க முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றிருந்தன. 57ஆவது நிமிடத்தில் வலிகானோவின் சார்பில் அல்வாரோ மற்றொரு கோலைப் பதிவுசெய்ய அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. 87ஆவது நிமிடத்தில் ஒஸ்மான் டெம்பிலி பார்சிலோனாவின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 90ஆவது நிமிடத்தில் சுவாரஸ் பார்சிலோனாவின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். இதையடுத்து பார்சிலோனா அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம)







# மே.இ.தீவுகளுக்கு எதிரான ரி-20 தொடர் இந்தியாவிடம்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட், ஒருநாள் தொடர் என்பவற்றைத் தொடர்ந்து ரி20 தொடரையும் கைப்பற்றுவதை உறுதி செய்தது இந்திய அணி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ரி20 ஆட்டம் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களான ரோகித், தவான் கூட்டணி நீண்டு நிலைத்தது. முழுவதும் பந்துவீச்சுக்குச் சாதகமான ஆடுகளத்தில் அசாத்தியமான முறையில் இருவரும் துடுப்பெடுத்தாடினார்கள். இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இந்திய அணி. அணி 123 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 43 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான். மறுமுனையில் ரோகித் சதம் கடந்தார். இது ரி-20 அரங்கில் அவரின் நான்காவது சதம். இது சாதனையும்கூட. முடிவில் 2 இலக்குகளை இழந்து 195 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா.

பதிலுக்குக் களமிறங்கிய தீவுகள் ஆரம்பம் முதல் தடுமாறியது. அந்த அணி சீரான இடைவெளியில் இலக்குகளைப் பறிகொடுத்து வந்தது. முன் வரிசையிலும் மத்திய வரிசையிலுமாகச் சேர்த்து பிராவோ பெற்ற 23 ஓட்டங்களே அதிகபட்சம். தடுமாற்றம் தொடர மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 124 ஓட்டங்களை மட்டுமே பெற்று 71 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது ரி20 ஆட்டத்தில் ஏற்கனவே வெற்றிபெற்ற இந்திய அணி இரண்டாவது ஆட்டத்திலும் கிடைத்த வெற்றியை அடுத்து கிண்ணம் வெல்வதை உறுதி செய்தது.

(ம)

## மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 . 09 . 1939 | 04 . 11 . 2018 |



### திருமதி கணபதிப்பிள்ளை கமலாட்சி

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், றக்கா வீதி, யாழ்ப்பாணம் சிறுப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை கமலாட்சி கடந்த (04.11.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மீனாட்சி தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மருமகளும் விசுவநாதர் கணபதிப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற தபாற்கந்தோர் அஞ்சலர், கைதடி) அன்புமனைவியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கேதீஸ்வரன் (தபாற் கந்தோர் அலுவலகம், கைதடி) மற்றும் கோணேஸ்வரன் (கைதடி, அரச முதியோர் இல்லம்) கோடீஸ்வரன் (தபாற்கந்தோர் அலுவலகம், கைதடி), ரிஷிகேஸ்வரன் (லண்டன்), ரதீஸ்வரன் (லண்டன்), விஜிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் புவனலோஜினி (கைதடி, அரச முதியோர் இல்லம்), சத்தியலட்சுமி (நீர்வேலி), அருந்தவதேவி (சிறுப்பிட்டி), இதயராணி (லண்டன்), சோபனவனிதா (லண்டன்), தவராஜசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமியும் மயில்வாகனத்தின் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்) அன்புமைத்துனியும் பரமேஸ்வரியின் அன்புச்சகோதரியும் வசந்தன் (இந்தியா), வசந்தசிவா (லண்டன்), வசந்தமாலா (கணக்காளர், விவசாய அமைச்சு வட மாகாணம்), மனோகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் தொழில் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புப்பெரிய தாயும் தத்தீஸ்வரியின் மாமியும் திஷாந் (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி, A/L 2018), திருமதி ரமணன் லக்சனா, டினோசன் (சுவிஸ்), பிரஜித் (லண்டன்), அத்ஜித் (லண்டன்), சாருகா (லண்டன்), அஸ்வின் (லண்டன்), அக்ஷிஷா (லண்டன்), அஜன் (ஜேர்மனி), ராம் (ஜேர்மனி), சுபானு (லண்டன்), தருண் (லண்டன்), அரன், ஆரணி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.11.2018) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் சிறுப்பிட்டி மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

# பங்களாதேசை தோற்கடித்து சிம்பாப்வே அசத்தல் ஆட்டம்



பங்களாதேசுக்கு எதிரான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் நேற்று முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் 151 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது சிம்பாவே அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 282 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. வில்லியம்ஸ் 88 ஓட்டங்களையும், மிர் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும், மசகட்சா 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தயுல் இஸ்லாம் 6 இலக்குகளையும், நஸ்முல் இஸ்லாம் 2 இலக்குகளையும், ஜெயிட், மகமதுல்லா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 143 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அரிபுல் ஹக்கியூ 41 ஓட்டங்களையும், ரகிம் 31 ஓட்டங்களையும், மிராஸ் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரசா, சாட்டரா இருவரும் தலா 3 இலக்குகளையும், ஜாவிஸ் 2 இலக்குகளையும், வில்லியம்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த சிம்பாவே அணி 181 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது. மசகட்சா 48 ஓட்டங்களையும், ரசா 25 ஓட்டங்களையும், ரெய்லர் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இஸ்லாம் 5 இலக்குகளையும், மிராஸ் 3 இலக்குகளையும், நஸ்முல் இஸ்லாம் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பங்களாதேசுக்கு இலக்காக 321 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டன. அந்த அணி 169 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 151 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சிம்பாப்வே.

(ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.